திருமலை திருப்பதி தேவஸ்தான

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜனவரி 2019, விலை ரூ.5/-





திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸ்ரீநிவாசமங்காபுரம்
# ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி
# பிரம்மோத்ஸவம்

## 24-02-2019 முதல் 04-03-2019

**24-02-2019 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**25-02-2019 திங்கட்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**26-02-2019 செவ்வாய்க்கிழமை**
பகல் : சிம்ஹ வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**27-02-2019 புதன்கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**28-02-2019 வியாழக்கிழமை**
பகல் : மோஹினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**01-03-2019 வெள்ளிக்கிழமை**
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**02-03-2019 சனிக்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**03-03-2019 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**04-03-2019 திங்கட்கிழமை**
பகல் : சக்ர ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# திருப்பதி
# ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி
# பிரம்மோத்ஸவம்

## 25-02-2019 முதல் 06-03-2019 வரை

**25-02-2019 திங்கட்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**26-02-2019 செவ்வாய்க்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**27-02-2019 புதன்கிழமை**
பகல் : பூத வாகனம்
இரவு : சிம்ஹ வாகனம்

**28-02-2019 வியாழக்கிழமை**
பகல் : மகர வாகனம்
இரவு : சேஷ வாகனம்

**01-03-2019 வெள்ளிக்கிழமை**
பகல் : திருச்சி உத்ஸவம்
இரவு : அதிகார நந்தி வாகனம்

**02-03-2019 சனிக்கிழமை**
பகல் : வ்யாக்ர வாகனம்
இரவு : யானை வாகனம்

**03-03-2019 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : குதிரை வாகனம்

**04-03-2019 திங்கட்கிழமை**
பகல்:திருத்தேர்
இரவு:நந்தி வாகனம் [மஹா சிவராத்திரி]

**05-03-2019 செவ்வாய்க்கிழமை**
பகல் : புருஷமிருக வாகனம்
இரவு : [கல்யாணோத்ஸவம்]திருச்சி உத்ஸவம்

**06-03-2019 புதன்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனத்தில் நடராஜஸ்வாமி,
திரிசூல ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம், இராவணாசுர வாகனம்



*ஜந்ம கர்ம ச மே தி$_3$வ்யம்*
*ஏவம் யோ வேத்தி தத்த்வத: |*
*த்யக்த்வா தே$_3$ஹம் புநர்ஜந்ம*
*நைதி மாமேதி ஸோऽர்ஜுந ||*

**அர்ஜுனா! என்னுடைய பிறப்பும் செயலும்**
**தெய்வீகமானவை; அப்பழுக்கற்றவை;**
**உலகியலுக்கு அப்பாற்பட்டவை. இவ்விதம்**
**எவன் தத்துவரீதியாக அறிந்து**
**கொள்கிறானோ, அவன் உடலைத் துறந்து**
**மறுபடியும் பிறவியை அடைவதில்லை.**
**ஆனால், என்னையே அடைந்து விடுகிறான்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 4–9*

*சக்திபஞ்சமயவிக்$_3$ரஹாத்மநே*
*சுக்திகாரஜத சித்தஹாரிணே |*
*முக்தித$_3$ாயகமுராரிபாத$_3$யோர்*
*ப$_4$க்திஸாரமுநயே நமோ நம: ||*

**ஐந்து சக்திகள் எனப்படும் அப்ராக்ருதமான**
**பஞ்சபூ$_4$தங்களாலான (பரம புருஷனுடைய)**
**திருமேனியை உள்ளே உடையவரும், சிப்பியில்**
**வெள்ளிபோல் (காண்பார்) நெஞ்சை**
**ஈர்ப்பவரும் (சுக்திஹாரனிடமிருந்து**
**வெல்லப்பட்டதாய், மார்பில் த$_4$ரிக்கப்படும்**
**ஹாரத்தையுடையவரும் என்று பாட$_3$பே$_4$த$_3$ம்),**
**முக்தியளிக்கும் முராரியின் திருவடி**
**யிணைகளில் ப$_4$க்தியின் ஸாரமாயிருப்**
**பவருமான முனிவருக்கு என்றும்**
**நமஸ்காரம்.)**

- குருபரம்பராப்ரபாவம்



# ஸ்வஸ்தி ஸ்ரீ விளம்பி வருஷம் மார்கழி/தை மாதம் தக்ஷிணாயணம்/உத்தராயணம் ஹேமந்த்ருது சகவருஷம் 1940 கலியுகாதி 5119 ஜனவரி 2019

| ஆங் | தமிழ் | கிழமை | திதி | நட்ச. | விசேஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | 17 | செவ் | ஏகா | சுவா | சர்வ ஏகாதசி, ஆங்கில வருடப்பிறப்பு. |
| 2 | 18 | புதன் | துவா | விசா | தீவிபத்து. |
| 3 | 19 | வியா | திர | அனு | பிரதோஷம். |
| 4 | 20 | வெள்ளி | சசி | கேட் | இயற்கை பாதிப்பு மாத சதுர்த்தி, ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் திருநட்சத்திரம். |
| 5 | 21 | சனி | அமா | மூல | அமாவாசை விருத்தி திதி பார்சுவ சூரிய கிரகணம் அதி வ்ருஷ்டி, ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ராமசந்திர தீர்த்த கரைக்கு எழுந்தருளுதல். |
| 6 | 22 | ஞாயிறு | அமா | பூரா | புதன் கி.அஸ்தமனம், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி அத்யயனோத்ஸவம் ஆரம்பம். |
| 7 | 23 | திங்கள் | பிர | உத்ரா | புஷ்ய சுத்த சந்த்ர தர்ஸனம், ஸ்ரீஆண்டாள் நீராட்டோத்ஸவம் ஆரம்பம். |
| 8 | 24 | செவ் | துவி | திவோ | ச்ரவணம். |
| 9 | 25 | புதன் | திரி | அவி | -- |
| 10 | 26 | வியா | சது | சத | மாத சதுர்த்தி, தனியநாள். |
| 11 | 27 | வெள்ளி | பஞ் | பூரட் | பத்திரப் பதிவு செய்ய திரிதினஸ் ப்ருக் (நட்+யோகம்). |
| 12 | 28 | சனி | சஷ் | பூரட் | சஷ்டி வ்ரதம். |
| 13 | 29 | ஞாயிறு | சப் | உத்ரட் | பானு ஸப்தமி, அனாவ்ருஷ்டி, ஸ்ரீஆண்டாள் நீராட்டோத்ஸவம் நிறைவு. |
| 14 | 30 | திங்கள் | அஷ் | ரேவ | போகிப் பண்டிகை, கரிநாள், சூரியன் மகரம் 33நா.10வி. இ.7ம. 51நி., போகித்தேர் |
| 15 | 1 | செவ் | நவ | அஸ்வி | உத்தராயண புண்ய காலம் மகரசங்கராந்தி, தைப் பொங்கல், கரிநாள். |
| 16 | 2 | புதன் | தச | பர | மாட்டுப் பொங்கல், கரிநாள், கிருத்திகை விரதம், கோதா தேவி பரிணயோத்ஸவம், திருமலையப்ப ஸ்வாமி தாள்ளபாக்க மண்டபத்தில் எழுந்தருளுதல், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி சன்னதியில் சிறிய சாத்துமுறை. |
| 17 | 3 | வியா | ஏகா | கார் | ஏகாதசி கிருத்திகை, ரைவத மன்வாதி கரிநாள், காணும் பொங்கல், திருப்பதி ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி சன்னதியில் இராப்பத்து தொடக்கம் வேதபாராயணம் தொடக்கம். |
| 18 | 4 | வெள்ளி | துவா | ரோகி | கூர்மத்வாதசி, திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி சன்னதியில் ஸ்ரீகாமாக்ஷி தேவிக்கு சந்தனாபிஷேகம். |
| 19 | 5 | சனி | திர | மிரு | சனி கி.உதயம், சனிப் பிரதோஷம், அதி வ்ருஷ்டி. |
| 20 | 6 | ஞாயிறு | சசி | திரு/புன | பௌர்ணமி புதன், மகரம் வைத்சிரா, பாதிப்பு. |
| 21 | 7 | திங்கள் | பௌர் | பூச | தைப்பூசம், முழு சந்த்ரகிரஹணம். கடல் கொந்தளிப்பு, ஸ்ரீராமகிருஷ்ண தீர்த்த முக்கோட்டி. |
| 22 | 8 | செவ் | பிர/துவி | ஆயி | கூடிய திதி தனியநாள், ஸுவ்ருஷ்டி, நிலச்சரிவு புஷ்ய பஹுள, திருப்பதி ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி சன்னதியில் பிரணய கலக மஹோத்ஸவம். |
| 23 | 9 | புதன் | திரி | மக | சுபநாள், ஸ்ரீதிருமழிசையாழ்வார் திருநட்சத்திரம். |
| 24 | 10 | வியா | சது | பூர | சங்கடஹர சதுர்த்தி. |
| 25 | 11 | வெள்ளி | பஞ் | உத் | திருவையாறு தியாகராஜ சுவாமிகள் ஆராதனை, கரிநாள். |
| 26 | 12 | சனி | சஷ் | ஹஸ் | சஷ்டி வ்ரதம், வாஸ்து ப.10ம. 16நி. 10ம. 42நி, ஸ்ரீகூரத்தாழ்வார் திருநட்சத்திரம், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி சன்னதியில் பெரிய சாத்து முறை, இந்தியக் குடியரசு தினம். |
| 27 | 13 | ஞாயிறு | சப் | சித் | திஸ்ரோஷ்டகா. |
| 28 | 14 | திங்கள் | அஷ் | சுவா | அஷ்டகா. பைரவாஷ்டமி. |
| 29 | 15 | செவ் | நவ | விசா | அன்வாஷ்டகா, சுக்ரன் தனுசு, சூரியன் புதன் யுதி, ஸுவ்ருஷ்டி, திருப்பதி ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி சன்னதியில் அத்யயனோத்ஸவம் நிறைவு. |
| 30 | 16 | புதன் | தச | அனு | சுபநாள். |
| 31 | 17 | வியா | ஏகா | கேட் | சர்வ ஏகாதசி, கரிநாள். |



# ஸப்தகிரி

சமயமாத இதழ்

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

ஜனவரி 2019 மலர் 49 இதழ் 8

## உள்ளுறை

பக்கம்


திருமலையப்ப ஸ்வாமி நித்ய கல்யாணோத்ஸவம் 7
- திருமதி. டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி.

தமிழர் திருநாள் பொங்கல் 12
- திரு. வி.எஸ். ஸ்ரீநிவாசன், சென்னை.

ஆழ்வார்கள் காட்டும் வாழ்க்கை நெறிகள் – 13 15
பேரின்பம் பெறுவதே மகிழ்ச்சி அம்மகிழ்ச்சிக்கே திருப்பள்ளியெழுச்சி
- திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

திருவேங்கடவன் விடுத்த விடுதலை 18
- திரு. ஸ்ரீராமசேஷசயனன், இளையாண்டிப்பட்டு.

கூரத்தாழ்வான் கண் - திரு. ஜி. ராம்குமார், காஞ்சிபுரம். 22

நமது திருக்கோயில் : கீலபட்ல ஆலயம்
-திருமதி. எஸ். வைஷ்ணவி, திருப்பதி. 25

திருமழிசை ஆழ்வாரின் பக்தியநுபவம் 31
- திரு. வி. சக்திவேல், தென்புத்தூர்.

திவ்யப்பிரபந்தத்தில் தன்வந்தரி 34
- டாக்டர். எஸ்.எல். ஸ்ரீனிவாசன், சத்தியமங்களம்.

பிறவிக் கடலை கடக்க முதல் இரண்டு படிகள் 36
- திருமதி. வசந்தா ஸ்ரீநிவாசன், சென்னை.

அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் 39
- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.

ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்–தர்ம பாதுகாப்பு 42
- டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர்.

108 திவ்யதேச வைபவம் – திருத்தெற்றியம்பலம் 46
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

சிறார் வாக்கு : ஆண்டாள் உகந்த வேங்கடவன் 48
- செல்வி. ஸ்மிருதி கிருஷ்ணன், சென்னை.

பகவத் கீதை–இளைய சமுதாயம் குழப்பங்களை போக்கி, காரியங்களை செய்... 49
- திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா.

ஆயுர்வேதம் – வெல்லம் - திருமதி. வி. உஷா, திருப்பதி. 51

2019, ஜனவரி மாத ராசி பலன் 53
- திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்.



சிறப்பு ஆசிரியர் :
திரு. அனில்குமார் சிங்ஹால், ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.

பிரதான ஆசிரியர் :
Dr. K.ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,

ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,

அச்சிடுபவர் :
திரு. R.V. விஜயகுமார், பி.ஏ. பி.எட்.,,
துணை செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

ஓவியம் :
திரு. P.சிவப்பிரஸாத் (ஓய்வு)
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264363
அலைபேசி எண் : 98663 29955

நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.org யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org

தனிப்பிரதி ரூ.5/-
வருடச்சந்தா ரூ.60/-
ஆயுள் சந்தா ரூ.500/-


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர். -பிரதான ஆசிரியர்

அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : ஸ்ரீதேவி பூதேவி சமேத திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.

பின்னட்டை : ஸ்ரீபத்மாவதி தாயார், திருச்சானூர்.

உங்களுடன்...

# மனமே ஆனந்த நிலையம்!!

எம்பெருமான் நம் அனைவருக்கும் சொந்தமானவர்! திருமலையப்ப ஸ்வாமியை தரிசிப்பதற்காக நாள்தோறும் லட்சக்கணக்கானோர் வெகுதூரம் என்றும் எண்ணாமல், கடினமென்றும் பாராமல் வந்து கொண்டே இருக்கின்றனர். இவர்களுக்கு எளிதில் தரிசனம் கிடைக்க வேண்டும் என்பதற்காக தி.தி.தே. எத்தனையோ சிறப்பான வசதிகளை அவ்வப்பொழுது ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றது. அவற்றில் ஒன்றே குலுக்கல் முறையில் ஸ்வாமி தரிசன சேவையினை பெறுவதற்கான வாய்ப்பினை தி.தி.தேவஸ்தானம் ஏற்படுத்தியிருப்பது.

ஆனால், தாம் நினைத்தது போல அவ்வாய்ப்பு நமக்கு கிடைக்கவில்லை என்று சில பக்தர்கள் கவலைப் படுவதுமுண்டு. குலுக்கல் முறையில் பிரத்யேகமாக எவருடைய சிபாரிசும் இன்றி ஸ்வாமியின் சேவைக்கான டிக்கெட் வழங்கப்படும். யார்யாருக்கு பாக்கியம் உள்ளதோ அவர்களுக்கு ஸ்வாமி தரிசன சேவை டிக்கெட்டுகள் கிடைக்கும். தமக்கு கிடைக்கவில்லையே என எண்ணுவதை விட "விரைவில் எனக்கு உன் தரிசன சேவை பாக்கியம் கிடைக்க வேண்டும்" என்று திருமலையப்ப ஸ்வாமியிடம் வேண்டுவதே நன்று. எம்பெருமானின் அனுக்கிரகம் இருந்தால் மட்டுமே நம் நோக்கங்கள் எல்லாம் நிறைவேறும்.

எம்பெருமானின் அருட்பார்வை கிட்டவேண்டுமென்று மகரிஷிகள் கூட பல ஆண்டுகள் தவமிருந்தனர். பாகவதத்தில் கஜேந்திரனும் ஆயிரம் ஆண்டுகள் போராடி, பிறகு முழுமையான பக்தியோடு விஷ்ணுவிடம் சரணடைந்தபோது ஸ்வாமியும் கருணை காட்டினார். ஆதலால் நாமும் ஸ்வாமியின் அருட்பார்வைக்காக பக்தியுடன் ஸ்வாமியை துதித்து காத்திருக்க வேண்டுமே தவிர வெறுப்படைதல் கூடாது. வெறுப்பு மன ஆரோக்கியத்திற்கு நன்றன்று. வெறுப்பினால் பக்தியும் விலகி செல்கின்றது.

திருமலைக்கு வரும் பக்தர்கள் பக்தியுடனும், மன அமைதியுடனும் ஸ்வாமியை தரிசித்து எம்பெருமானின் அருட்பார்வைக்கு பாத்திரர்களாக வேண்டும். பக்தர்கள் தாம் மட்டுமின்றி இதர பக்தர்களும் ஸ்வாமியை கண் குளிர தரிசிப்பதற்கான வாய்ப்பினை அளித்து க்யூ வரிசையில் எவ்வித தடங்களும் ஏற்படுத்தாமல் தள்ளுவதும், நெரிசலை ஏற்படுத்துவதும் இன்றி அமைதியுடன் அனைவரும் தரிசிப்பதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

லட்சக்கணக்கான பக்தர்கள் க்யூ வரிசையில் நின்று வரும் போது நாம் மட்டும் ஸ்வாமியை நீண்ட நேரம் தரிசிக்க வேண்டும் என்று எண்ணி அங்கேயே நிற்பது சக பக்தர்களுடைய தரிசன வாய்ப்பினை தட்டிக் கழிப்பது போலாகின்றது. ஒரு நிமிட காலம் பகவானை கண் குளிர பக்தியோடு தரிசித்தால் அந்த தரிசனமானது பல ஆண்டுகள் நம் மனதில் நிலையாக நிலைத்திருக்கும். அந்த பரிபூரண வடிவினை கண்களால் தரிசித்து யாத்திரையை பரிபூரணமாக்குதல் வேண்டும்.

பூர்வ யுகங்களில் ரிஷிகள் பகவானின் தரிசனத்திற்காக பெரும் தவங்கள் புரிந்தனர். ஆனால் கலியுக வாசிகளான நம் அதிர்ஷ்டம் எவ்வித தபசும் செய்யாமல், நினைத்தவுடனே திருமலைக்கு வந்து சில மணி நேரங்களில் அந்த பரந்தாமனை தரிசிக்கும் அரிய வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது. இது கலியுகத்திற்கே கிடைத்த வரப்பிரசாதமாகும். கலியுக வாசிகள் முழுமனதோடு பக்தியுடன் சில நிமிடங்கள் ஸ்வாமியை வணங்கினாலே போதும் அந்த பரம்பொருளின் அனுக்கிரகம் பூரணமாக கிடைத்து விடுகின்றது. இது இந்த யுகத்திற்கே உள்ள சிறப்பாகும்.

மேற்குறிப்பிடப்பட்டவற்றை கவனத்தில் கொண்டு அனைவரும் மன அழுத்தம், வெறுப்பிற்கு ஆளாகாமல் பக்தியுடனும் பொறுமையுடனும் ஆனந்த நிலையத்தை தரிசியுங்கள்! மனதினை ஆனந்தமயமாக்கிக் கொள்ளுங்கள்!!



# திருமலையப்ப ஸ்வாமி நித்ய கல்யாணோத்ஸவம்

தெலுங்கு மூலம் : டாக்டர். என். நரசிம்மாசார்யா.
தமிழாக்கம் : திருமதி. டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி.

*''கலௌ வேங்கட நாயக:''* கலியுக நாயகனாம் திருவேங்கடத்து எம்பெருமானை நித்ய கல்யாண சக்கரவர்த்தி என்று நாம் போற்றுகின்றோம். அந்த எம்பெருமானுக்கு இத்திருப் பெயர் வரக் காரணத்தையும், திருமலையில் திருமலையப்ப ஸ்வாமிக்கும் உபய நாச்சிமார்களான ஸ்ரீதேவி, பூதேவித் தாயார்களுக்கும் அனுதினமும் நடைபெறுகின்ற திருக்கல்யாண வைபவத்தைப் பற்றியும் இக்கட்டுரையின் மூலமாகத் தெரிந்து கொள்வோம். எம்பெருமான் திருக்கோவிலின் உள்ளே அமைந்து இருக்கும் ஸம்பங்கி பிராகாரத்தில் நடைபெறுகின்ற இந்த திருக்கல்யாண உத்ஸவத்தில் கலந்து கொண்டு நூற்றுக்கணக்கான தம்பதிகள் பெருமாளின் திருவருளைப் பிரதி தினமும் பெறுகிறார்கள்.

## ஸ்ரீநிவாசப் பெருமாளின் கல்யாண உற்சவம் :

எம்பெருமானுக்குத் தினந்தோறும் இக் கல்யாண உற்சவம் நடைபெறுவதற்கு மூல காரணம் உலக யோக க்ஷேமத்திற்காக என்று பெரியோர்கள் கூறுகின்றனர். யோகம் என்பதன் பொருள் நமக்கு எதிர்பாராமல் கிடைக்கும் பாக்யம் என்று கூட சொல்லலாம். கல்யாண யோகம், புத்ர பாக்யம், வாகன யோகம், புது வீடு யோகம், உத்யோக உயர்வு, வியாபார அபிவிருத்தி இப்படி எத்தனையோ வேண்டுதல்கள் பக்தர்களுக்கு இருக்கலாம். அவரவர் வேண்டும் வரத்தைப் பெற எம்பெருமானுக்கும் தேவிமார்களுக்கும் திருக்கல்யாணம் செய்வித்து, எம்பெருமானின் திருவருளால் அந்தந்த பலன்களைப் பெறுகின்றனர்.

## கல்யாணம் என்பது என்ன? அது எதைக் குறிக்கிறது?

கல்யாணம் என்கிற பதத்திற்கு பொருள் தம்பதிகளுக்கு சுகத்தைக் கொடுப்பது, மங்களத்தைத் தருவது, ஆயுள் முழுவதும் இருவரும் ஒருவருக்காகவே மற்றொருவர் வாழ்வது என்று பொருள் கொண்டார்கள் பெரியோர்கள். விவாஹம், பரிணயம், பானிக்ரஹணம் என்று பல பதங்களில் சொல்லப்படும் இந்த கல்யாணத்தைத் தெலுங்கு மொழியில் பெள்ளி, பெண்ட்ளி என்றும், கன்னட மொழியில் லக்னம், மதுவே என்றும், தமிழ் மொழியில் திருமணம் என்றும் அழைக்கப்படுகிறது. இன்றைக்கு சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பாக நடைபெற்ற ஸ்ரீஸ்ரீநிவாச ஸ்ரீபத்மாவதி கல்யாணத்தை நாம் இப்போது அனுதினமும் தரிசித்து கொண்டிருக்கிறோம். அவ்வாறு நடைபெறச் செய்வது யோக க்ஷேமத்திற்காக என்று ஆகமம் சொல்கிறது. திருமலையில், திருவேங்கடத்து எம்பெருமான் உற்சவ மூர்த்தியான திருமலையப்ப ஸ்வாமிக்கும், அவரது உபய நாச்சிமார்களுக்கும் "அபிஜித லக்னம்" என்று சொல்லக்கூடிய (அதாவது பகல் பன்னிரண்டு மணி முதல் 1 மணி வரை) சுபவேளையில் இந்த திருக் கல்யாணத்தை நடத்தி அதில் நூற்றுக்கணக்கான தம்பதிகளை பங்கு

பெறச் செய்து, அவர்களுக்கு எம்பெருமானின் அருளாசியோடு பிரசாதமும் வழங்குவது தற்போது நடைமுறையில் உள்ளது.

## ஸ்ரீநிவாச கல்யாணம் பற்றிய புராண வரலாறு :

ஒரு சமயம் சப்தரிஷிகளுக்குள் ஒரு விவாதம் எழுந்ததாம். மும்மூர்த்திகளுக்கு சாத்வீகமானவர் யார் என்பதே அந்த விவாதம். இதை சோதனை செய்து பார்க்க வேதசாஸ்திர நிபுணராக பிருகு மகரிஷி தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பிரம்ம தேவரின் சத்ய லோகம், சிவபெருமானின் கைலாயம் ஆகிய லோகங்களுக்குச் சென்று விட்டு முடிவாக வைகுண்ட லோகத்தை அடைந்தார். அங்கே எம்பெருமான் ஸ்ரீமஹா விஷ்ணு யோக நித்திரையில் இருக்க, தான் வந்ததை அவர் கவனியாமல் இருப்பது கண்டு வெகுண்ட பிருகு மகரிஷி தான் சகலசாஸ்திரங்களையும் அறிந்தவர் என்கிற மமதையில் எம்பெருமானின் திருமார்பை எட்டி உதைத்தார். உறக்கம் கலைந்த எம்பெருமான் தான் அசிரத்தையாக இருந்ததற்கு அவரது காலில் விழுந்து மன்னிப்பு கேட்டதோடு அவரது கர்வத்தையும் அழித்தார். அகம்பாவம் அழிந்த ரிஷி தன் வெறிச் செயலுக்கு வருந்தி பகவானிடம்



மன்னிப்பு கேட்டதோடு, "உன்னிடம் வருபவர்களை ரக்ஷிக்கும் நீயே சாத்வீகமானவன், பக்த வத்ஸலன்" என்று போற்றினார்.

ஆயினும் இதிலிருந்து பிறந்தது இன்னொரு கதை. எம்பெருமானின் வக்ஷஸ்தலத்தில் அகலாது வீற்றிருக்கும் ஸ்ரீமஹாலக்ஷ்மி இது தனக்கு இழைக்கப்பட்ட அவமானமாகக் கருதி, ரிஷியைத் தண்டிக்காத ஸ்ரீமஹா விஷ்ணுவை விட்டு விலகி பூலோகம் வந்து விட்டார். "ஸ்ரீ"யை இழந்த மஹாவிஷ்ணு தேவியைத் தேடி பூலோகம் வந்து அலைந்து திரிய அவரைத் தனது வளர்ப்பு மகனாக ஏற்றுக் கொண்டாள் வகுளாதேவி எனும் தபஸ்வினி. துவாபர யுகத்தில் யசோதா தேவியாக, கோகுலத்தில் கண்ணனை குழந்தையாக வளர்த்து, தாலாட்டி, அவனது பால லீலைகளை அனுபவித்த பாக்யசாலிக்கும் ஒரு குறை இருந்ததாம். அதாவது தான் வளர்த்த திருமகனின் கல்யாண வைபவத்தைக் காண முடிய வில்லையே என்பது தான் அந்த குறை. அந்த மகராசியே கலியுகத்தில் வகுளா தேவியாக



அவதரித்துள்ளாள். அந்த ஸ்ரீஹரியே இப்போதும் அவளுக்கு குமாரனாக கிடைக்க, அந்த குமாரனுக்கு அவள் இட்ட பெயர், "ஸ்ரீநிவாசன்".

நாரதமகரிஷி மூலம் தன் மணாளரான ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அவஸ்தையை அறிந்த ஸ்ரீமஹாலக்ஷ்மி தனது அம்சமாக ஒரு குழந்தையை அவதரிக்கச் செய்தாள். நாராயணவனத்தை ஆண்டு வந்த ஆகாசராஜனுக்கும், அவரது மனையாள் தாரிணி தேவிக்கும் குழந்தை பாக்யம் இல்லை. அவர்கள் இடைவிடாமல் செய்த பிரார்த்தனையின் விளைவாக அவர்களுக்கு பத்மசரோவரத்தில் ஒரு தங்கப் பெட்டகம் கிடைத்தது. அந்த பெட்டகத்தின் உள்ளே தாமரை புஷ்பத்தின் மீது பொன்னே பெண்ணுருக் கொண்டு வந்தது போல இருந்த குழந்தையை எடுத்து வளர்த்தனர் ராஜ தம்பதியர். பத்மாவதி வளர்ந்தாள். குமரிப் பருவத்தை எட்டினாள். தோழியரோடு குதூகலமாக கானகத்தில் சுற்றித் திரிந்தாள். அப்போது ஒரு காட்டு யானை அவர்களைத் துரத்த பயந்து ஓடிய பத்மாவதியைக் காப்பாற்றியது யார் தெரியுமா? நமது ஸ்ரீநிவாஸன். பத்மாவதியும், ஸ்ரீநிவாசனும் ஒரு வரை ஒருவர் நோக்க, பூர்வஜன்ம வாசனையால் அவர்களுக்குள் காதல் மலர்ந்தது. தன் மனம் கவர்ந்தவளை அவர் யாரென்று விசாரிக்க, அந்நியன் ஒருவன் தங்கள் ராஜ குமாரியோடு பேசுவதைக் கண்ட தோழிகள் அவரை விரட்டி விட்டு





பத்மா வதியை அந்தப்புரத்திற்கு அழைத்துக் கொண்டு போய் விட்டனர்.

கானகத்தில் கண்ட ஸ்ரீநிவாசனையே நினைத்துக் கொண்டிருந்த பத்மாவதி பிரமை பிடித்தவள் போல் இருக்கக் கண்டு பயந்து போன அவளது தாயாரான தாரணி தேவி, மருத்துவரை அழைத்தாள். அவராலும் அவளது நோயைக் கண்டுபிடிக்க முடியாமல் போக, முடிவாக குறி சொல்லும் குறத்தியை அந்தப்புரத்திற்கு வரவழைத்தாள். அந்த குறத்தி வேறு யாருமில்லை நமது ஸ்ரீநிவாஸனேதான். பத்மாவதியின் கையைப் பிடித்துப் பார்த்த குறத்தி, "தங்கள் மகளுக்கு கல்யாண யோகம் வந்து விட்டது. அவள் கைப்பிடிக்கப் போகும் மணாளனின் தாயார் பெண் கேட்க தங்கள் மாளிகைக்கு வருவாள்" என்று ஆருடம் சொல்ல அதே சமயத்தில் அங்கே வந்தாள் வகுளாதேவி. தனது மகன் ஸ்ரீநிவாசனின் மூலமாக விவரமறிந்த வகுளாதேவி ஆகாசராஜனிடம் பெண் கேட்க, ஸ்ரீநிவாசன் பத்மாவதி திருமணம் அரண்மனை புரோகிதர் மூலம் நிச்சயமாகியது.


வைகாசி மாதம், உத்திர நக்ஷத்திரம் கூடிய சுப யோக சுபதினத்தில் தேவகுருவான பிரஹஸ்பதியே தெய்வ தம்பதிகளின் திருமணத்தை நடத்தி வைக்க முன் வந்தார். எம்பெருமான் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் வாகன மான கருடாழ்வார் ஈரேழு லோகங்களுக்கும் பறந்து சென்று பிரம்ம, ருத்ராதி தேவர்களைத் திருக்கல்யா ணத்தில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்தார். அரச குமாரியை மணக்கப்போகும் மாப்பிள்ளையின் அந்தஸ் தும் அதற்கு சமமாக இருக்க வேண்டும் என்று அனை வரும் அபிப்ராயப்பட அழகாபுரியின் தலைவனான குபேரனிடம் கல்யாண செலவுக்கு பணம் கேட்கும்படி யோசனை சொன்னார் நாரதமுனி. இந்த கலியுகம் முடி யும் வரைத் தன்னை தரிசிக்க வரும் பக்தர்கள் கொடுக் கும் காணிக்கையை வட்டியாகச் செலுத்துவேன் என்று ஸ்ரீநிவாசன் குபேரனுக்குப் பட்டயம் எழுதிக் கொடுக்க, விவாஹம் குபேரன் கொடுத்த தனத்தில் அமோகமாக நடைபெற்றது. ஆகாசராஜனும் தாரிணி தேவியும் ஸ்ரீநிவா சனுக்கு பத்மாவதியை கன்யாதானம் செய்து கொடுக்க, தேவகுருவான பிரஹஸ்பதி திருக்கல்யாண மந்திரங் களைச் சொல்ல தேவ, தேவாதிகள் புஷ்பமாரி பொழிய, வேத, வாத்ய, மங்கள ஒலிகளுக்கிடையில் ஸ்ரீநிவாசன்–பத்மாவதி திருக்கல்யாணம் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

## ஸ்ரீநிவாச கல்யாணம் பற்றிய சரித்திர வரலாறு :

அஷ்டாதச புராணம் என்கிற பதினெட்டாவது புரா ணத்தில் ஸ்ரீநிவாசர், பத்மாவதி பரிணயம் குறித்து மேற் கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. திருவேங்கடவனின் பரம பக்தையான தரிகொண்ட வெங்கமாம்பா தனது க்ருதியில், **"ஸூகுசிர வைசாக சுக்ல தசமி, சுக்ரவாரம் நாடு ஸுப முஹுர்த்தம்பு"** என்று இந்த திருக்கல்யாண வைப வத்தைப் பாடியுள்ளாள். சுமார் 5000 வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற இந்த திருக்கல்யாணம் திருமலை யில் விசேஷ நாட்களிலும், பிரம்மோத்ஸவத்திலும் மட் டுமே நடைபெறச் செய்வது வழக்கமாக இருந்து வந்தது. எம்பெருமானின் நந்தக அம்சமாக அவதரித்த "பதகவிதா பிதாமஹர்" என்று போற்றப் பெற்ற தாளப்பாக்க அன்னமா சார்யார் இந்த திருக்கல்யாண உற்சவத்தைத் தினமும் நடைபெறச் செய்ததோடு தானே பிராட்டிமார்களின் தந்தை ஸ்தானத்தில் இருந்து கன்னிகைகளை எம்பெரு மானுக்கு கன்யாதானம் செய்து கொடுத்துக் கொண்டி ருந்தார். இன்றளவும் திருமலையில் நடை பெறும் இந்த உற்சவத்தில் தாளப்பாக்க வம்சத்தினரே இந்த கன்னிகா தானம் நிகழ்வை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

## திருமலையில் இத்திருக்கல்யாண வைபவம் :

தாளப்பாக்க அன்னமாசார்யரின் வம்சத்தினர் திருமலையில் இக்கல்யாண உற்சவத்தை 1546ஆம்





ஆண்டு ஆரம்பித்தனர். கொண்டலேட்டி அரச பரம்பரையினர் மல்லவரம் என்கிற கிராமத்திலிருந்து வரும் வருவாயில் 120 வராகன்களை கோவில் கஜானாவில் (கல்யாண உற்சவ செலவிற்காக) சேரும்படி செய்தனர். ஆரம்ப காலத்தில் இக்கல்யாண உற்சவம் ஐந்து நாட்கள் மட்டுமே நடைபெற்றதாம். பங்குனி மாதம் அனுராதா (அனுஷம்) நட்சத்திரத்தில் ஆரம்பித்து உத்திராட நக்ஷத்திரத்தில் முடிவு பெற்றதாம். இதற்கென்று பிரத்யேக தளிகை, நைவேத்யம் செய்யப்பட்டதாம்.

தாளப்பாக்க வம்சத்தினர் தங்கள் மூதாதையரான தாளப்பாக்க அன்னமாசார்யரைப் போலவே ஸ்ரீபத்மாவதி தேவியைத் தங்கள் குமாரியாகவும், திருவேங்கட நாதனைத் தங்கள் மாப்பிள்ளையாகவும் வரித்துக் கொண்டு இந்த கல்யாண உற்சவத்தைச் செய்து வந்தனர். 1546 ஆம் ஆண்டிலிருந்து இந்த உற்சவம் அவர்களால் திருமலையில் செய்து வரப்பட்டது. அன்னமாசார்யரின் பேரரான சின்ன திருமலாசார் (கல்வெட்டு தொகுதி 354–97) கீழ் திருப்பதி யில் ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாளின் கோவிலிலும் 1547ல் இந்த கல்யாண உற்சவத்தை சித்திரை மற்றும் தை மாதத்தில் ஐந்து நாட்கள் நடைபெறும்படி செய்தார். இங்கு ரேவதி நக்ஷத்திரத்தில் தொடங்கி ரோஹிணி நட்சத்திரத்தன்று இந்த உற்சவம் நிறைவு பெறும். அந்த சமயத்தில் செய்ய வேண்டிய பிரத்யேக தளிகை, பலகார நிவேதனங்கள், வேத பண்டிதர்கள் ஆகியோருக்குக் கொடுக்க வேண்டிய தக்ஷிணை இவை அனைத்தும் கோவில் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உற்சவம் ஸ்ரீகோவிந்தராஜ பெருமாள் கோவிலில் வெளிப்பிராகாரத்தில் உள்ள ஸ்ரீலக்ஷ்மீ தேவி மண்டபத் தில் நடைபெற்று வந்ததாம். ஆரம்பத்தில் 250 வராகன் கள் மட்டுமே இந்த கல்யாண உற்சவத்திற்காக செலவழிக் கப்பட்டு வந்ததாம். அதன் பின்பு அருகில் உள்ள நெடியா என்கிற கிராமத்திலிருந்து வந்த வருவாயிலிருந்து 150 வராகன்கள் இந்த உற்சவ செலவிற்காக கோவில் கஜானாவில் சேர்த்தார்களாம். இவ்வாறாக சின்ன திருமலாசார் ஆரம்பித்த இந்த உற்சவம் திருமலை திருப்பதி இரண்டு ஸ்தலங்களிலும் தவறாமல் நடை பெற்று வந்தது. போகப்போக, துப்பிலி அக்ரஹாரம், நகரியைச் சேர்ந்த அம்பத்தூர் அக்ரஹாரம் இவற்றிலிருந்து வந்த 400 தங்க நாணயங்களை இந்த கல்யாண உற்சவங்களுக்காகத் தனியே எடுத்து வைத்து செலவழிக்கப்பட்டதாக கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருக்கல்யாண உற்சவம் நடை பெறும் ஐந்து நாட்களிலும் தேவிமார்கள் இருவரும் மணப்பெண்கள் அலங்காரத்தில் மாட வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்குத் தரிசனம் தருவார்கள். முடிவாக கல்யாண உற்சவத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் வெற்றிலை, பாக்கு, தாம்பூலத்தோடு தக்ஷிணையும் வழங்கப்படும்.

காலம் செல்ல, செல்ல இந்த வருவாய் போதவில்லை. கொண்டலேட்டி சமஸ்தானத்திற்குட்பட்ட வினுகொண்டா கிராமத்திலிருந்து வந்த வருவாயை இந்த உற்சவத்தை நடத்துவதற்கு கொடுத்ததோடு அல்லாமல் பெத்த திருமலாசார் தன்னுடைய வரும்படியிலிருந்து 470 பொன் நாணயங்களையும் இந்த உற்சவத்திற்காக அனுப்பி வைத்தாராம். இந்த தகவல் கோவிந்தராஜ ஸ்வாமி ஆலயத்திலுள்ள கல்வெட்டு 419–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக பிரம்மோத்ஸவத்தின் போது மட்டுமே முதல் நாள் த்வஜாரோஹணம் என்கிற கொடியேற்றத்துடன் உற்சவம் தொடங்கும். ஆனால் திருவேங்கடநாதன் (1558) இந்த திருக்கல்யாண உற்சவத்தையும் முதல் நாள் த்வஜாரோ ஹணத்தில் ஆரம்பித்து ஐந்தாம் நாள் த்வஜா அவரோஹணம் முடியும்படி ஏற்பாடு செய்தாராம். ஸ்ரீவைகானச ஆகமப்படி



பெருமாளுக்கு எந்த விசேஷ உற்சவங்கள் செய்தாலும் அது கொடியேற்றத்துடன் தான் ஆரம்பமாக வேண்டும் என்பது அவரது நோக்கமாக யிருந்தது.

பக்தர்கள் அதிக எண்ணிக்கையில் கலந்து கொள்வதும் இந்த கல்யாண உற்சவத்தில் தான். சாமானியர்கள் முதல் பெரும் தலைவர்கள் வரை எல்லோரும் சமமாக அமர்ந்து, இந்த கல்யாண உற்சவத்தில் கலந்து கொண்டு பகவானைத் தரிசிக்கிறார்கள். இதில் வர்க்க பேதமோ, ஜாதி பேதமோ, ஏழை, பணக்காரர் என்கிற பாகுபாடோ கிடையாது. திருமலையானின் முன்பு அனைத்து பக்தர்களும் சமமே. ஆரம்பத்தில் இந்த கல்யாண உற்சவம் மூல மூர்த்தி சன்னிதியின் வாயிலில் உள்ள "பங்காரு வாகிலி" மண்டபத்தில் நடைபெற்று வந்தது. அதன் பின்பு மூல மூர்த்தியைத் தரிசிக்க வரும் பக்தர்களுக்கு இடையூறு ஏற்பட்டதால், முதல் பிராகாரத்தில் உள்ள கல்யாண மண்டபத்திலும், பின்பு ரங்க நாயகி மண்டபத்திலும் நடை பெற்று வந்தது. பக்தர்களின் எண்ணிக்கை பெருக, பெருக சம்பங்கி பிராகாரத்தில் தனியாக ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி கல்யாண மண்டபம் என்கிற பெயரோடு விளங்கும் பெரிய கல்யாண கூடத்தில் தற்போது கல்யாண உற்சவம் நடைபெற்று வருகிறது.



ஸ்ரீஅலர்மேல் மங்கா ஸமேதஸ்ரீஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:

## ஆர்ஜித சேவையாக கல்யாண உற்சவம்

**திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் ஆதிக்கத்தில் இக்கோவில் வந்த பிறகு காலக்ரமத்தில் கல்யாண உற்சவம் ஆர்ஜித சேவையாக மாறியது. ஆர்ஜிதம் என்றால் கட்டணம் செலுத்துவது என்று பொருள். முதன் முதல் திரு. சி. அண்ணாராவ் அவர்கள் (செயலாட்சித் தலைவர்) கோவில் நிர்வாக அதிகாரியாக இருந்த போது இக்கல்யாண உற்சவம் பெருகி வரும் பக்தர்களுக்காக ஆர்ஜித சேவையாக மாறியது. அப்போது கட்டணம் 500 ரூபாய். ஆரம்ப காலங்களில் பக்தர்கள் இந்த உற்சவம் செய்வதற்கு வேண்டிக் கொண்டு எப்போது பணம் கட்டுகிறார்களோ அந்த நாட்களில் மட்டும் நடத்தப்பட்டு வந்தது. அதன் பின்பு "நித்ய கல்யாணம் பச்சை தோரணம்" என்பது போல அதிகரித்து வரும் பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்கித் தினமும் நடைபெறும்படி தேவஸ்தான நிர்வாகம் ஏற்பாடு செய்தது.**



**ஸ்ரீவைகானஸ ஆகமப்படி எம்பெருமானுக்கு நடைபெறும் உற்சவங்களில் இக்கல்யாண உற்சவத்திற்கு சிரத்தோத்ஸவம் அல்லது காம்யோத்ஸவம் (வேண்டுதலின் பேரில் நடைபெறுவது) என்று பெயரிடப்பட்டது.**

**திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் மூலமாக நடைபெறும் இவ் உற்சவத்தில் பக்தர்கள் தங்கள் வேண்டுதல் (பிரார்த்தனை) நிறைவேறிய பின் ரூ.1,000/– கட்டணம் செலுத்தி இதில் கலந்து கொண்டு, தரிசித்து எம்பெருமானின் திருவருளைப் பெறுகிறார்கள்.**

**சாதாரணமாக இதில் இருவர் (தம்பதிகளே) அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு ஸம்பாவனையாக ஆண்களுக்கு மேல் உத்திரீயம், பெண்களுக்கு ரவிக்கைத் துண்டு, லட்டுகள், வடைகள் பிரசாதமாக வழங்கப்படுகிறது.**




# தமிழர் திருநாள் பொங்கல்

திரு. வி.எஸ். ஸ்ரீநிவாசன்,
சென்னை.

நீண்ட காலமாகத் தமிழகத்தில் கொண்டாடும் விழாக்களில் பொங்கல் விழாவும் ஒன்றாகும். இதனை "உழவரின் மகிழ்ச்சி பொங்கும் விழா" என்பர். பொங்கல் விழா நான்கு நாட்கள் கொண்டாடப் படுகிறது. முதல் நாள் விழா போகிப்பண்டிகை ஆகும். இது இந்திரனுக்கு உரியது. இரண்டாம் நாள் விழா பொங்கல். இது உழவிற்கு உதவிய சூரியக் கடவுளுக்குக் கொண்டாடப்படுவதாகும். மூன்றாவது நாள் மாட்டுப் பொங்கலாகும். இது உழவிற்குப் பயன்பட்ட மாடுகளுக்கு நன்றி செலுத்தும் வகையில் அமைவது. நான்காவது நாள் காணும் பொங்கல் அல்லது கன்னிப் பொங்கல் என்பர். மக்கள், இந்நாளில் விளையாட்டுகள், பொழுது போக்குகள் ஆகியனவற்றில் ஈடுபட்டு மகிழ்ச்சியில் திளைப்பர்.

**போகிப்பண்டிகை :**

"போகி" எனும் சொல்லிற்கு "மகிழ்ச்சி" என்பது பொருள். ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை நெல் பயிரிடும் காலமாகும். உழவர்கள் மழையின் உதவியால் கழனியில் இரவும் பகலும் இடைவிடாது உழைத்து, உழைப்பின் பயனை மார்கழி இறுதி நாளில் வீட்டிற்கு நெல்மணியாகக் கொண்டு வருவர். இது தவிர குறுகிய காலப் பயிர்களான அவரை, துவரை காய்கறிகள் முதலியனவும் மார்கழி மாத இறுதியில் வீட்டிற்கு வந்து சேரும். சுற்றமும் நட்பும் சூழ மனைவி மக்களுடன் உழவர்கள் மகிழ்ச்சியாக இருப்பர். இதனால் இதற்குப் போகிப் பண்டிகை என்ற பெயர் வந்திருக்கலாம். கண்ணபிரானும் பகவத் கீதையில்,

*"மாஸானாம் மார்கசீர்ஷோ$^{S}$ஹம் ருதூநாம் குஸுமாகர:"*

–கீதை *10.35*

என்கிறார். அதாவது மாதங்களிலே நான் மார்கழியாக விளங்குகிறேன் என்கிறார். இந்திரனுக்கு "போகி" என்று பெயர். மார்கழி மாத இறுதி நாள் இந்திரனுக்கு விழா கொண்டாடப் படுவதால் போகிப் பண்டிகை எனும் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

போகியன்று குழந்தைகளும் பெரியவர்களும் விடியற்காலையில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பர்; புத்தாடை உடுத்திக் கொள்வர். பழையதும் பயனற்றப் பொருட்களுமான பாய், துடைப்பம், முறம், கூடை முதலியனவற்றை வீட்டின் முன்னர் இட்டுத் தீயிட்டுக் கொளுத்துவர். சிறுவர்கள் தீயினைச் சுற்றி நின்று மேளம் அடித்து மகிழ்வர்.

இப்போகிப் பண்டிகையோடு கிருஷ்ண அவதாரத்தையும் புராணங்கள் தொடர்புப்படுத்திப் பேசுகின்றன. ஆண்டு தோறும் மழைக் கடவுளான இந்திரனுக்குப் பொங்கல் இட்டுப் படைத்து நன்றாக மழை வேண்டி மக்கள் வழிபடுவர். திருமால் கண்ணனாக அவதரித்தபோது இந்திரனை வழிபட வேண்டாம் என ஆயர்களைத் தடுத்து நிறுத்தினார். இதைக் கண்ட இந்திரன் கல் மழை பெய்வித்து ஆயர்களையும் ஆக்களையும் துன்புறுத்தினான். கண்ணன் கோவர்த்தன மலையை குடையாகப் பிடித்து ஆயர்களையும் ஆக்களையும் காத்தருளினார். தன் ஆற்றல் பயனற்றுப் போனதால் இந்திரன் கண்ணபிரானை வணங்கித் தன்னையும் ஆயர்கள் வழிபடும்



படி அருள் செய்ய வேண்டினான். அதற்கேற்ப இந்தி ரனை மக்கள் போகிப் பண்டிகையன்று வழிபடத் துவங் கினர். சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியன இந்திர னுக்கு விழா எடுத்தச் செய்தியைக் கூறுகின்றன.

## பொங்கல் திருநாள் :

“தை பிறந்தால் வழி பிறக்கும்” என்பது பழமொழி. தை மாதத்தின் முதல் நாள் பொங்கலாகும். தமிழர் இதனை “பொங்கல் திருநாள்” என அழைப்பர். 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தெலுங்குக் கவி “ஸ்ரீநாதுடு” இதை “பெனுபண்டுவு” என அழைக்கின்றார். இதனை “மகர சங்கராந்தி” எனவும் அழைப்பர். “சங்கராந்தி” எனும் சொல்லுக்கு “சேருதல்” என்று பொருள். சூரியன் பன்னிரு ராசிகளுடன் ஒவ்வொரு மாதமும் சேருவான். பன்னிரு ராசிகளுள் மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகிய நான்கே முக்கியமானவை. அவற்றுள் சூரியன் மகர ராசியுடன் சேரும் முதல் நாளே நாம் பொங்கல் எனக் கொண்டாடப்படும் மகர சங்கராந்தியாகும்.

உத்தராயண காலம் செல்வச் செழிப்பில் மேன்மை யுற்று விளங்கும். மகாபாரதப் போரில் பீஷ்மர் அர்ச்சுன னின் அம்பால் வீழ்த்தப்பட்டார். போர்க்களத்தில் அம்பு களால் படுக்கை செய்து அவரைப் படுக்க வைத்தனர். தட்சிணாயண காலத்தில் அவர் உடலில் அம்பு புகுந்தி ருந்தாலும் உத்தராயணம் வரும் வரை காத்திருந்து உயிர் நீத்தார் எனப் பாரதம் கூறுவதிலிருந்து உத்தராய ணத்தின் சிறப்புப் புலப்படும். பொங்கல் திருநாள் உத்தராயணத்தின் முதல் நாளிலேயே கொண்டாடப் படுகின்றது.



“பொங்கல்” எனும் சொல் “பொங்கு” எனும் அடிச் சொல்லிலிருந்து தோன்றியதாக அறிஞர் மு. அருணா சலம் கருதுகிறார். இச்சொல்லிற்குச் சமை, பொங்க வை முதலிய பொருட்கள் உண்டு. அறுவடை செய்து கொணர்ந்த நெல்லைக் குற்றிப் புத்தரிசியாக்கிப் புதுப் பானையில் இட்டு பால் ஊற்றி அடுப்பில் ஏற்றுவர். பானையிலிருந்து பாற்சோறு கொதித்துப் பொங்கி வழியும். அப்போது பெண்களும் குழந்தைகளும் “பொங்கலோ பொங்கல்”, “பொங்கலோ பொங்கல்” எனக் கூவி மகிழ்ச்சியில் திளைப்பர். இவ்வாறு பானை பொங்கி வழிதல் ஆண்டு முழுதும் நல்ல விளைச்சலுக்கு அறிகுறி என உழவர் கருதுவர்.

பின்னர் பொங்கல் பானையை அடுப்பிலிருந்து இறக்கி, அதற்கு மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு இஞ்சிச் செடிகளையும் கரும்பையும் இருபுறம் வைத்துச் சூரியனை திறந்த வெளியில் வழிபடுவர். இவ்வழிபாடு காலை 11 மணி முதல் நண்பகல் 1 மணி வரையில் நிகழும். ஏனெனில் அப்போது சூரியன் உச்சி வானில் உலா வந்து கொண்டு இருப்பான். அப்போது உணவுப் பொருட்களின் மீது அவன் கிரணக் கைகள் முழுதும் படும். இதனால் சூரியன் அவ்வழிபாட்டை ஏற்றுக் கொண்டதாகப் பொருள் என்று மக்கள் கருதினர் எனலாம்.

## மாட்டுப் பொங்கல் :

உழவர் தோளுக்குத் தோள் கொடுத்து உதவுவன மாடுகளாகும். இவற்றிற்கு நன்றி செலுத்தும் வகையில் மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது. இதை “கோ பூஜை” எனவும் கூறுவர். இவ்விழா பொங்கலுக்கு அடுத்த நாளில் கொண்டாடப்படுவதாகும். தனக்கிருந்த ஒரே மகனையும், கன்றிழந்த பசுவின் துயரத்தைக் கண்டு பொறுக்கலாற்றாது தேர்க்காலில் கட்டி இடறிக் கொன்று பசுவின் துயரத்தைத் தீர்த்தான் மனுநீதிச் சோழன் என புராணக் கதை கூறுகின்றது. இக்கதையிலிருந்து பண்டை காலத்தில் மன்னர்கள் பசுவிற்குக் கொடுத்த மதிப்புப் புலனாகும்.

மேலும், தமிழ் இலக்கியங்களில் வரும் மாடு எனும் சொல்லிற்குச் செல்வம் என்பது பொருள். மாடுகள் இல்லத்தில் மிகுந்திருந்தால் மிகுந்த செல்வம் உண்டாகும் என நம்பினர். மாட்டிற்கு விழா எடுப்பது செல்வத்திற்கு விழா எடுத்தலுக்குச் சமமாகும். எனவே மாட்டுப் பொங்கல் கொண்டாடுவதாகக் கருதுகின்றனர்.



மாட்டுப்பொங்கலன்று மாடுகளைக் குளிப்பாட்டி நெற்றியில் மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு, அதன் கொம்பு களைச் சீவி, வர்ணம் பூசி, மாலைகள் இட்டு, பலூன்கள் கட்டி அழகு செய்வர். கொம்பின் நுனியில் சலங்கை கட்டும் வழக்கமும் உண்டு. பின்னர் மாலை வேளையில் மாட்டிற்குப் பூசை செய்து மேளம் முழங்க வண்டியில் கட்டியோ தனித்தோ ஊரைச் சுற்றி வரச் செய்வர்.

இந்நாளில் அரிசிச் சோற்றையும் ஏழு அல்லது இருபது வகையான காய்கறி உணவுகளைச் சமைத்து கையில் ஒரு பிடி சோற்றையும் காய்கறிகளையும் கொண்டு சென்று பசுவிற்கு ஊட்டுவர். மாட்டுப் பொங்கலன்று “ஜல்லிக் கட்டு” அல்லது “மஞ்சு விரட்டு” எனக் கூறப்படும் மாடுபிடி சண்டையும், கோழிச் சண்டைகளும், மாடுகளின் தலையில் பணமுடிப்பு கட்டப்பெற்று, அக்காளையை யார் அடக்குகிறார்களோ அவர்களுக்கே அப்பணம் சொந்தம் எனக் கூறும் வீர விளையாட்டுகளும் நிகழும்.

**காணும் பொங்கல் :**

பொங்கலின் இறுதி நாள் விழாவாக இது அமையும், இதனை “காணும் பொங்கல்” எனவும், கன்னிப் பெண்கள் பொங்கல் வைப்பதால் “கன்னிப் பொங்கல்” எனவும் “கரிநாள்” எனவும் அழைப்பர். கரிநாளில் எவ்விதச் செய லையும் செய்தல் கூடாது என்பது ஆன்றோர் கருத்து. ஆகவே மக்கள் உழைக்காமல் எவ்விதச் செயலையும் செய்யாமல் சில விளையாட்டுகள் விளையாடிப் பொழுது போக்கி மகிழ்வர். மாலை நேரம் ஆனதும் அவ் வூர் கடவுளின் திருவீதி உலா நடைபெறும்.






திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

**விற்பனையில் 2019ஆம் ஆண்டு திருமலையப்ப ஸ்வாமி நாட்காட்டிகள்(காலண்டர்) மற்றும் நாட்குறிப்பேடுகள் (டைரி)**

2019 ஆம் ஆண்டு திருமலையப்ப ஸ்வாமி காலண்டர், டைரி மிக அழகாக வடிவமைக்கப்பட்டு விற்ப னைக்கு பக்தர்களுக்காக தி.தி.தே. கொண்டு வந்துள்ளது.

அவற்றினை நீங்கள் முன்பாகவே தி.தி. தேவஸ்தான தகவல் மையங்களான அதாவது தில்லி, சென்னை, மும்பை, ஹைதராபாத் நகரங்களிலும், தி.தி.தே. கல்யாண மண்டபங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் திருமலை திருப்பதி இணையதளமான www.ttdsevaonline.com ஆன்லைன் மூலமும் பணம் செலுத்தியும் பெறலாம்.

**விவரங்களுக்கு : ☎ 0877-2264209**

**காலண்டர், டைரி விலைப்பட்டியல்**

| விவரம் | விலைரூ. |
|---|---|
| 12 பேஜ் காலண்டர் | 100.00 |
| டேபிள் டாப் காலண்டர் | 60.00 |
| டைரி (டீலக்ஸ்) | 130.00 |
| டைரி (ஆர்ட்னரி) | 100.00 |
| எஸ்.வி. பெரிய காலண்டர் | 25.00 |
| எஸ்.பி. பெரிய காலண்டர் | 15.00 |
| எஸ்.வி.& எஸ்.பி. காலண்டர் | 10.00 |
| தெலுங்கு பஞ்சாங்க காலண்டர் | 20.00 |

**துணை செயலாட்சித் தலைவர், தி.தி.தே. புத்தக விற்பனை நிலையம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி – 517 507.**



# பேரின்பம் பெறுவதே மகிழ்ச்சி அம்மகிழ்ச்சிக்கே திருப்பள்ளியெழுச்சி



– திரு. எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி.

*"அடியார்க்கு என்னை ஆட்படுத்தாய் பள்ளி எழுந்தருளாயே!"*

திருப்பள்ளி எழுச்சி பத்தாவது பாடலின் கடைசி அடி இது! ஸ்ரீவைஷ்ணவத்திலே நாம் அடைகின்ற பொருள், பயன், இன்பம் எல்லாமே அடியார் தொண்டு எனப்படும் பாகவத கைங்கர்யம் தான். இறைத்தொண்டைவிட இறையடியார் தொண்டே உயர்ந்தது. அது இறைவனையும் திருப்திபடுத்தக் கூடியது. தொண்டரடிப்பொடியாழ்வார்! பெயரையே பாருங்கள். "தான் அடைகின்ற இன்பத்தின் எல்லை நிலம் இது தான்" என்று அறுதியிட்டு உரைக்கும்படியாகத் தனது பெயரையே அதற்கு ஒரு பிரமாணமாக ஆக்கிக்கொண்டார். அரங்கனிடமும் அதைத் தான் இறைஞ்சுகிறார்.

*"அடியார்க்கு என்னை ஆட்படுத்தாய் பள்ளி எழுந்தருளாயே!"*

என்பது அவரது வேண்டுகோள். கதிரவன் குண (கீழ்) திசை வந்து நிற்கிறான். தேவர்கள் வந்து நிற்கிறார்கள். வைகறை கூர்ந்தது. ஆயர்கள் மாடு ஓட்டிச் செல்ல, அந்த மாடுகளின் மணிக்கழுத்து அசைய, மணியோசை கலகல என ஒலிக்க, விடியா விடியலில் விடிய வேண்டும் என்று இரவியர், இறையவர், மருவிய மயிலினன், அந்தரத்து அமரர்கள், அருந்தவ முனி வர்கள் இப்படி ஏராளமானோர் காத்திருக்கிறார்கள்.

ஆனால் அவர்களுக்கெல்லாம் ஒரு நோக்கமுண்டு. ஏதேனும் ஒரு பலன் அடைய விரும்பி அவர்கள் நெருக்கியடித்துக் கொண்டு நிற்கிறார்கள். இது அவர்கள் நிலை.

ஆனால், "அரங்கா! எனக்கு எதுவும் வேண்டாம். அடியார் பாத தூளி நான். உன்னைப் பள்ளி எழுப்புவதன் நோக்கம் வேறொன்றுமில்லை. நீ எழும்போது உன் தாமரைக் கண்கள் மலருமே. உன் செவ்வாயில் புன்னகை விரியுமே. மொத்தத்தில் உன் முகம் மலர்ச்சியடையுமே. அது போதும்! நான் திருப்பள்ளியெழுச்சி பாடுவதன் நோக்கம் அதுதான்." இது தொண்டரடிப்பொடியாழ்வாரின் நிலை.

முதல் பாடலிலே குணதிசைச் சிகரம் வந்தணைந்தான் என்று சொல்லி, "அரங்கா எழுந்தருள வேண்டும். உன்னைச் சேவிக்க இதோ சூரியன் வந்திருக்கிறான். அவனை நலம் விசாரித்தருள வேண்டும். உன் கண்மலர்ப் பார்வையால் அவன் என்றென்றும் உயிர் பெற்று உலவுகின்றான்" என்கிறார் ஆழ்வார்.

பெருமாள் எழுந்திருப்பதாக இல்லை. ஆழ்வாரின் தமிழில் அல்லவா அவன் ஆழ்ந்திருக்கின்றான். பாடுகின்ற

### 63. சாஸ்த்திர நீதிகள் :

புஸ்த்தகேஷு சயா வித்யா
பர ஹஸ்தே ச யத்தனம் |
சமயேது பரி ப்ராப்தே
நசா வித்யா ந தத் தனம் ||

புத்தகத்தை மட்டும் படித்து விட்டால் வாழ்க்கை முறை நன்றாக அமைந்து விடாது. பலருடன் பழகிய அனுபவ முறைகளே உதவுமாம். அடுத்தவர்களிடம் இருக்கும் பொருள்களாலும் நமக்கு எந்தவித பயனும் ஏற்படாது! நாமே சுயமாக கஷ்டப்பட்டு சம்பாதிப்பதே நமக்கு உதவுமாம்!

**தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.**

வரை பாடட்டும் பார்த்துக் கொள்வோம் என்றிருப்பவனல்லவா! ஆழ்வார் என்ன, விட்டுவிடுவாரா? அடுத்த அஸ்திரத்தைப் போடுகிறார். இது பெருமாளைக் கொஞ்சம் அசர வைக்கிற அஸ்திரம் தான்.

காரணம் எளிமையின் எல்லை நிலமாக விளங்கிய கிருஷ்ணாவதார நிகழ்ச்சியில் அவன் மனதை விட்டகலாத ஓர் நிகழ்ச்சியை நினைவுபடுத்துகிறார். கிருஷ்ணாவதார காலம். யமுனை ஆற்றங்கரை. கண்ணனின் குறும்பு எல்லை மீறிய நேரம். கோழியழைப்பதன் முன் குடைந்து நீராட வேண்டும் என்று அவசரம் அவசரமாக ஆற்றங்கரை வந்தடைகின்றனர் கோபிகைகள்.

இவர்களுக்கு முன் அவன் அங்கே வந்திருக்கிறான். வந்து இவர்களுக்காகவே காத்திருக்கிறான். அவர்களின் உடைகளை அபகரித்துக் கொண்டு குருந்த மரம் ஒன்றின் மீது ஏறிக்கொள்கிறான்.

இங்கே அந்த நிகழ்ச்சியை நாசுக்காக பெரிய பெருமாளுக்கு நினைவூட்டுகிறார். "சூழ்புனல் அரங்கா எழுந்தருள்க! ஸ்ரீகிருஷ்ணாவதாரச் சுறுசுறுப்பு இங்கே இல்லையே: துடியிடையார் சுரிகுழல் பிழிந்து உதறிக் குளித்துவிட்டு, கருமையான நீண்ட சுருள் சுருளான தங்கள் தலைமுடியை ஈரப் பசைபோகப் பிழிந்து உதறி விட்டு, தாங்கள் கரையிலே வைத்திருந்த ஆடைகளை உடுத்திக் கொண்டு கரையேறி விட்டனர்" என்கிறார்.

"இவர்கள் கரையேறுகின்ற அளவும் நீ பள்ளி கொண்டிருக்கலாமா?"

"சூழ்புனல் அரங்கா" என்று விளிக்கும் போது, பொன்னி நதிக்கு ஓர் ஏற்றத்தை தஞ்சை மண்ணில் உதித்த ஆழ்வார் கொடுக்கிறார். "பரமபதத்திலே விரஜை! பிருந்தாவனத்திலே யமுனை!" ஆனால் அத்தனைச் சுகங்களையும் மீறிய சுகம் இந்த பொன்னிசூழ் திருவரங்கம்.

அந்தச் சுகத்திலல்லவா அரங்கன் சொக்கிப் போயிருக்கிறான். முதல் நான்கு வரிகளிலே பெருமாளைச் சொன்னவர் அடுத்துத் தம்மைப் பற்றிப் பேசத் தொடங்குகிறார்.

தன் தகுதியைச் சொல்லியாக வேண்டும். அப்படி யாவது அசைகிறானா அரங்கன் என்று எண்ணுகின்ற ஆழ்வார் அடியேன் "தொண்டர் அடிப்பொடி" என்று விநயமாக விண்ணப்பிக்கிறார்.

இதே நிலைதான் நம்மாழ்வாருக்கும்,

*"குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழ் இழிந்து எத்தனை*
*நலந்தான் இல்லாத சண்டாள சண்டாளர்கள் ஆகிலும்*
*வலந்தாங்கு சக்கரத்து அண்ணல் மணிவண்ணற்கு ஆள் என்று உள்*
*கலந்தார், அடியார்தம் அடியார் எம் அடிகளே"*

இன்னும் தனது அடியார்க்காட்படும் தன்மையே ஆவேசமாக அடுத்தத் திருவாய்மொழியில் சொல்லுவார்.


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## திருமலையில் இலவச மருத்துவ சேவை

- திருமலையில் மருத்துவ உதவியை பக்தர்கள் 24 மணி நேரமும் இலவசமாகப் பெறலாம்.
- திருமலையில் எந்த இடத்திலிருந்தும் இலவசமாக ஆம்புலன்ஸ் வசதியைப் பெறலாம்.
- திருமலை அஸ்வினி மருத்துவமனையில் தினமும் காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை இரத்த தானம் அளிக்கலாம்.
- மலையேறும் வழியிலும் இலவச மருத்துவ முகாமை தி.தி.தே. ஏற்பாடு செய்துள்ளது.
- வைகுண்ட கட்டிட தொகுதிகளிலும் இலவச மருத்துவ வசதி கிடைக்க தி.தி.தே.வழிவகையை செய்துள்ளது.

தொலைபேசி எண் : 0877-2263601

- முதன்மை மருத்துவ அலுவலர்

## சிறுவர் பகுதி வினாக்கள்

1. பெருமாள் தரையில் சயனித்து சேவை சாதிக்கும் திவ்ய தேசம் எது?
2. புருஷோத்தம நாயகி என்னும் நாமத்துடன் தாயார் சேவை சாதிக்கும் திவ்ய தேசம் எது?
3. சரணாகதி கத்யம் என்னும் நூலை இயற்றியவர் யார்?
4. சடகோபர் அந்தாதி என்னும் நூலை இயற்றியவர் யார்?
5. ஆழ்வார்களால் இரண்டு பாசுரங்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திவ்ய தேசங்கள் எத்தனை?
6. நம்மாழ்வார் அருளிய திருவிருத்தம் எந்த வேதத்தின் சாரமாக அமைந்துள்ளது?
7. தொண்டரடிப்பொடியாழ்வார் அவதரித்த ஸ்தலம் எது?
8. மதுரகவி ஆழ்வார் அவதரித்த மாதம், நட்சத்திரம் எவை?
9. தான் அவதரித்த ஸ்தலத்தின் பெயரால் சிறப்புடன் அழைக்கப்படும் ஆழ்வார் யார்?
10. அப்பலரங்கம் என்று போற்றப்படும் திவ்ய தேசம் எது?

விடைகளுக்கு 32ம் பக்கம் பார்க்கவும்

தொகுப்பு : திரு. என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்.

*"............ எம்பிரான் தனக்கு*
*அடியார் அடியார் தம் அடியார் தமக்*
*கடியார் அடியார் தம் அடியாரடி யோங்களே"*

திருவாய்மொழியிலே நம்மாழ்வார் தம்மை கடை நிலை அடியாராகக் காட்டிக் கொள்வார். பயிலும் சுடரொளி முழுக்க அடியார்க்கு அடியார் எனத்தானே பேசுகிறார்.

அடியார்க்குத் தொண்டனாக இருப்பது தொண்டின் எல்லை நிலம் என்று கூறும் வைணவ மரபு! இதனை "சரமோபாயம் அல்லது சரமோபாய காஷ்டை" என்பார்கள். இந்த நிஷ்டையைத் தான் கடைசி வரியிலேதான் வைக்கிறார் ஆழ்வார்.

*"அடியனை அளியனென் றருளியுன் னடியார்க்கு*
*ஆட்படுத் தாய்பள்ளி யெழுந்தருளாயே"*

ஆண்டவனுக்கு ஆட்படுவதல்ல ஆழ்வாரின் நோக்கம். அடியார்க்கு ஆட்படுவதுதான் அவர் எண்ணம்.

ஸ்ரீவைஷ்ணவத்திலே எம்பெருமான் திருவடிகளே சரணம் என்பது முதல் நிலை. எம்பெருமானார் திருவடிகளே சரணம் என்பதுதான் கடைசி நிலை.

இறைவனுக்கு அடிமை முதல் நிலை. திருமாலடியாருக்கு அடிமை நிறைவு நிலை.

இறைவனை வேண்டிப் பெறும் பயன் அவனல்ல. அவன் அடியார் தொடர்பே! உனக்காட்பட்டு நின்கண் பெறுவது எது? என்று நம்மாழ்வார் தனக்குத்தானே கேட்டுக்கொள்வது போல் தொண்டரடிப்பொடியாழ்வார் இல்லை.

வெட்டு ஒன்று. துண்டு இரண்டு என்று தெளிவான முடிவோடு இருக்கிறார். திருமந்திரத்தின் முடிந்த முடிவை திருமங்கையாழ்வார் பேசுகின்ற பொழுது, *"நின் திரு எட்டெழுத்து கற்றும் உற்றது உன் அடியார்க்கு அடிமை"* என அடியார்க்கு ஆட்படுதலையேயல்லவா கூறுகிறார்.

அதுதான் பேரின்பம், பெறக்கரிய வாழ்வியல் பேறு! எல்லையற்ற மகிழ்ச்சி. இதனைச் சொல்வதுதான் தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருப்பள்ளியெழுச்சி!

"மலர்ந்திருக்கும் மார்கழியில் திருப்பாவையும் திருப்பள்ளியெழுச்சியும் பாடி அப்பேரின்ப அனுபவத்தை நுகர்வோம். வாரீர்.

வாழ்க்கை நெறிகள் தொடரும்...

**'உங்களுக்காக நாங்கள்'**

**உங்கள் ஆலோசனைகளுக்கு மற்றும் புகார்களுக்கு இலவசமாக தொடர்பு கொள்ளலாம்**

**டோல் ஃப்ரீ எண்கள்:**
**1800-425-4141, 1800-425-333333**

# திருவேங்கடவன் விடுத்த விடுதலை



*– திரு. ஸ்ரீராமசேஷசயனன், இளையாண்டிப்பட்டு.*

கோயில் என்றால் அது ஸ்ரீரங்கம். மலை என்றால் அது திருமலை. பெருமாள் என்றால் ஸ்ரீகாஞ்சி வரதன். யதிராஜர் என்றால் இராமானுஜர். தேசிகன் என்றால் அது ஸ்ரீநிகமாந்த மகா தேசிகன். மற்றவர் யாருக்கும் இது பொருந்தாது. அதுபோல தயை (கருணை) என்றால் அது தாயாரை மட்டும் குறிக்கும். விசிட்டாத்வைதம் முக்கிய மூன்று கொள்கையைக் கொண்டது. 1)தத்துவம் (உண்மை), 2)இதம் (வழி), 3) புருஷார்த்தம் (அடைய பரிந்துரை), இதைப் பற்றிய கருத்துகளை நமது ஆசார்ய வள்ளல் ஸ்ரீமந்நிகமாந்த மகா தேசிகன் எம்பெருமானின் குணங்களில் ஒன்றான தயை அல்லது கருணை பற்றிய கருத்துக்களை, அதன் பெருமையை பார்த்து யாவரும் வியக்கும் வண்ணம் தமது கற்பனை காவியமாக படைத்தது தான் ஸ்ரீதயா சதகம்.

*வ்ருஷகிரி க்ருஹ மேதிகுணா:*
*போத பலைச்வர்ய வீர்ய சக்தி முகா: ।*
*தோஷா பவேயு ரேதே*
*யதிநாம தயே த்வயா விநாபூதா: ॥* (15)

ஸ்ரீநிவாசனின் குணங்கள் ஆறு. இவைகள் பிராட்டியுடன் சேர்ந்தே இருப்பதால்தான் அவனுடைய ஞானம், பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி, தேஜஸ் போன்ற குணங்கள் பக்தர்களுக்கு துணையாயிருக்கின்றன. இல்லையெனில் இக்குணங்கள் அனைத்தும் குற்றங்களாகப் போய் விடும்.

*பல விதரண தக்ஷம் பக்ஷபாதாநபிக்ஞம்*
*ப்ரகுண மநுவிதேயம் ப்ராப்ய பத்மாஸஹாயம் ।*
*மஹதி குண ஸமாஜே மாநபூர்வம் தயேத்வம்*
*ப்ரதிவதஸி யதார்ஹம் பாப்மநாம் மாமகாநாம் ॥* (33)


திருவேங்கட மலையே ஒரு நீதிமன்றமாகவும், அதில் ஸ்ரீநிவாசன் நீதிபதியாகவும், பாவம் பண்ணின ஒரு ஜீவாத்மாவை தண்டனையிலிருந்து விடுவிக்க ஒரு பெண் வழக்கறிஞர் தயாதேவியானவள் கோர்ட்டில் ஆஜரானதாகவும், திருவேங்கடவனின் ஆறு குணங்களும், அரசு வழக்கறிஞர்களாக வாதம் செய்வதே ஒரு சொல்லோவியமாக அமைந்ததுதான் ஸ்ரீதயா சதகம்.

அரசு வழக்கறிஞர் ஜீவன் செய்த குற்றங்களைப் பற்றிய செய்திகளைச் சொல்லி, தலைமை நீதிபதியவர்களே இவருக்கு தக்க தண்டனையை வழங்குமாறு என்று, அவர் மேல் குற்றப்பத்திரிகை வாசிக்கிறார். நீதிபதியவர்கள் (ஸ்ரீநிவாசன்) அப்படியென்ன குற்றங்கள் செய்துள்ளார் என்று கேட்கிறார்.

மதிப்பிற்குறிய நீதிபதி அவர்களே! இதோ கூண்டில் நிற்கும் இந்த ஜீவன் நல்ல காரியம் ஒன்று கூட செய்யவில்லை. இவர் ஏதோ புண்ணிய வசத்தால் மானிடராய் பிறந்திருக்கிறார். அதிலும் இவருக்கு கூன், குருடு, செவிடு, பேடு நீங்கி நல்ல திருமேனியோடு காட்சியளிக்கின்றார். இதை ஸ்ரீதேசிகன் (அமிருதரஞ்சனி – 32)

*"ஊன் தந்து நிலை நின்ற உயிரும் தந்து - ஓர்*
*உயிராகி யுள்ளொளி யோடுறைந்த நாதன்*
*தான் தந்த இன்னுயிரை என தென்னாமல்*
*நல்லறிவுந் தந்து அகலா நலமுந் தந்து"*

எம்பெருமான் ஜீவர்களுக்கு செய்யும் உதவி அளவிட முடியாது. முதலில் அழகான சரீரத்தைக் கொடுத்



தான். அதில் அழியாத ஜீவனைக் கொடுத்தான். ஜீவனுக்குள் பிராட்டியும் பெருமானுமாக அந்தர்யாமியாக நின்றான். ஆத்மாவை சடம் என்று நினையாமல் அவனுக்கே அடிமை என்ற ஞானத்தைக் கொடுத்தான். இதையெல்லாம் இவர் பயன்படுத்தத் தெரியாமல் விட்டு விட்டார். நம் புலன்கள் செய்ய வேண்டிய காரியங்கள் ஒன்று கூட செய்யவில்லை. இதை குலசேகராழ்வார் தனது முகுந்த மாலா என்ற நூலில்,

*ஜிஹ்வே கீர்த்தய கேஸவம்*
*முரரிபும் சேதோ பஜ ஸ்ரீதரம்*
*பாணித் வந்த்வ ஸமர்ச்சயாச்யுத கதா:*
*ஸ்ரோத் ரத்வய த்வம் ஸ்ருணு*
*கிருஷ்ணம் லோகய லோசநத்வய*
*ஹரேர் கச்சாங்க்ரியுக் மாலயம்*
*ஜிக்ர க்ராண முகுந்த பாத*
*துசீம் மூர்த்தந் நமா தோக்ஷஜம்*

மானிடராய் பிறந்துவிட்டால் மட்டும் போதாது. ஏ! நாக்கே சதா கேசவனை துதி செய். மனமே ஹரிநாம பஜனை செய். இரண்டு கைகளே ஸ்ரீதரனுக்கு புஷ்பத்தால் மாலை கட்டி புஷ்பத்தால் அர்ச்சனை செய். இரண்டு காதுகளே அச்சுதன் கதைகளைக் கேள்.

இரண்டு கண்களே கிருஷ்ணனின் திருமேனியின் அழகைக் கண்டு ரசி. மூக்கே முகுந்தனின் திருவடியில் வைத்த துளசியை நுகர். தலையே ஆண்டவனைக் கண்டு வணங்கு. இப்படியெல்லாம் நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். இதில் இவரிடம் ஒன்று கூட எதிர்பார்க்க முடியாது. ஆகவே நீதிபதியவர்களே இவருக்கு தக்க தண்டனை வழங்கி இவரை நரகத்துக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நீதிபதியவர்கள் கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கும் ஜீவனைப் பார்த்து உனது சார்பாக குற்றங்கள் இல்லையென நிரூபிக்க யாராவது சாட்சிகள் உண்டா? என்று ஸ்ரீநிவாசன் கேட்க, உண்டு என்று சொல்லி விசாரணை தள்ளி வைக்கப்படுகிறது.

கருணையே வடிவெடுத்த தாயாரிடம் சென்று தாயாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி தாயே! நீதான் என்னை காப்பாற்ற வேண்டும் என்று அழுது புலம்புகின்றான். குற்றங்களைப் பொருட்படுத்தாத தயா தேவியானவள் ஜீவனுக்காக வாதாட கோர்ட்டில் பெண் வழக்கறிஞராக ஆஜர் ஆகிறாள்.

வேங்கட நாதா! எனது கட்சிக்காரரைப் பற்றி குற்றங்களை கூறியது அனைத்தும் உண்மைதான். நானும் அதை ஒப்புக் கொள்கிறேன். இவர் ஒரு அறிவிலி தான். இதையும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இவர் ஓர் ஆசார்யனை அணுகி ப்ரபத்தி பண்ணியுள்ளார்.

ஓர் ஆசார்யனை அணுகி அவர் திருவடிகளில் சேர்ந்து விட்ட பிறகு இவர் ஒரு ப்ரபந்நன் ஆகிவிட்டார்.

ப்ரபந்நனுக்கு பாபம் சேராது என்று சொல்லியிருக் கிறீர்கள். இதற்கு சாட்சியாக,

*''உளதான வல்வினைக்கு உள்ளம் வெருவி - உலகளந்த*
*வளர் தாமரையிணை வன்சரணாக வரித்தவர்தாங்*
*களை தா னென வெழும் கன்மந் துறப்பர், துறந்திடினும்*
*இளைதா நிலை செக எங்கள் பிரானருள் தேனெழுமே*

(அதிகாரசங்கிரகம் 25)

ப்ரபத்தி பண்ணின ஒருவன் முன் செய்த பாவங் களும், பின் செய்த பாவங்களும், அறிந்தும் அறியாம லும் செய்த பாவங்களும், நினைத்து வருந்தியபின் பாவங்கள் செய்யாமல் இருந்தால் அவனுடைய பாபங் கள் அனைத்தும் ஒழிந்து போய் விடும். ஆக ப்ரபந்ந னுக்கு எவ்வகையிலும் நரகமோ, மறு பிறவியோ கிடை யாது. அப்படியிருக்க இந்த ஜீவன் எப்படி குற்றவாளியாக முடியும்?

ஒருவன் அஞ்ஞானமில்லாமல் செய்யும் பகவத் காரியமும் யதேச்சையாக செய்த காரியமும் நீங்கள் எத்தனையோ இடங்களில் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். இதற்கு அஞ்ஞான சுக்ரதம், யதேச்சிய சுக்ரதம், ப்ராசிப் சுக்ரதம் எனும் இம்மூன்றையும் இவர் செய்துள்ளார்.

அடியார்கள் தங்க இடம் கொடுத்தார். வீதியிலே சென்ற அத்தியாபகர் கோஷ்டியை கண்டு வீழ்ந்து வணங்கியிருக்கிறார். எத்தனையோ பெருமாள் கோயி லில் தலை சாய்த்து சடாரி பெற்றிருக்கிறார். இதெல்லாம் இவர் அறியாமலே செய்த காரியம். இதனால் உன் அடியார்களில் இவரும் ஒருவர் ஆவார். அப்படியிருக்க இவர் எப்படி குற்றவாளியாக முடியும்?

நீங்கள் முன் சொன்னதை நினைத்துப் பாருங்கள். அதன் பின் இவருக்கு நல்ல தீர்ப்பை சொல்லுங்கள்.

*''ஸக்ருதேவ ப்ரபந்நாய தாவாஸ் மீதி சயாசதே*
*அபயம் ஸர்வ பூதேப்யோ ததாமி ஏத்தவ்ரதம் மம''*

அன்று கடற்கரையில், தன்னை காப்பாற்ற வேண்டி யார் என்னை வந்து சரணடைந்தாலும் அவரை நான் காப்பாற்றியேத் தீருவேன். இதுவே என்னுடைய சங்கல்பம். அப்படியிருக்க நீங்கள் எல்லை மீறிய குற்றங்களை செய்தவர்களை காப்பாற்றியிருக்கின்றீர். பிராட்டியை துன்புறுத்திய காகாசுரனை மன்னித்து விடவில்லையா? உம்மை எதிர்த்தவர்களை மன்னிக்க வில்லையா? ஈவு இரக்கமின்றி உயிர்களை வேட்டையாடி புசித்த கத்திரபந்து என்ற அரசனை மன்னித்து அவனுக்கு பேரின்ப வாழ்க்கை கொடுக்கவில்லையா? தன் மனைவி ஒருத்திக்காக அயோத்தியில் பிறந்த அனைத்து உயிர்க ளையும் அதாவது புல், எறும்பு என்று அனைத்தையும் புண்ணியம் செய்தவன் பாபம் செய்தவன் என்று கருதாமல் வைகுண்டம் போக செய்யவில்லையா?

பாரதப் போரில் எனக்கு எதிரிகள் யாருமே கிடை யாது. ஆனால் என்னிடம் சரணடைந்த பக்தனுக்கு யார் எதிரியோ? அவனே எனக்கும் எதிரி என்று சொல்ல வில்லையா? ஆகையால் ஸ்வாமி! நீதிபதியவர்களே! நீங்கள் சொல்லிய "பகவத் கீதை" இராமாயண சுலோகம் போன்ற சட்ட புத்தகத்தின் (செக்ஷன் – அத்தியாயம்) பிரகாரம் தான் நான் தங்களிடம் எனது கட்சிக்காரருக்காக வாதாடினேன். ஆகவே இந்த ஜீவனை தண்டனையிலி ருந்து விடுவிக்குமாறு தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நடுவராய் வீற்றிருக்கும் ஸ்ரீநிவாசன் தன் சட்ட புத்தகங்களை ஆராய்ந்து பார்க்கிறார். தயா தேவியா னவள் ஜீவன் மேல் வாதாடியது உண்மையென நிரூப ணம் செய்யப்பட்டது. தண்டனைக்குறிய ஜீவன் விடு தலை செய்யப்பட்டான். வேங்கடவனும் தயாதேவியும் தன் வாசஸ்தலத்துக்குச் சென்று விட்டனர்.

எம்பெருமான் தேவியைப் பார்த்து குற்றம் செய்த வர்களை தண்டிப்பது என் கடமை. தேவர்கள் என்றும், அசுரர்கள் என்றும், ஏழை பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடு கருதாமல் என் கடமையைச் செய்கிறேன். அதனால் எல்லோருக்கும் ஆவாதவன் நான்.

நீயோ அவர்களுக்கு கருணை கூர்ந்து அவர்களை காப்பாற்றி நல்ல பெயர் பெற்று விடுகிறாய். நானும் உன் கருணை கூர்ந்த கண்களால் மயங்கி உன் பேச்சைக் கேட்டு விடுகிறேன். ஆகையால் முன்னமே வந்து என்னை மதிக்காமல் உன்னை சரணடைந்து தண்டனையிலிருந்து விடுபடுகிறார்கள். ஆக நமக்காக வேங்கடநாதனிடம் பிரதிவாதம் பண்ணி நம்மை உய்விக்க செய்த தயா தேவியை ஸ்வாமி ஸ்ரீதேசிகரின் இந்த தயாசதகம் மூலம் நாம் உணரப்படுகின்றோம். அப்படிப்பட்ட அலர்மேல் மங்கையுறை மார்பன் திருவேங்கடமுடையானுடைய தயைக்கு பாத்ரர்களாக ஆவோமாக.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 29

**இடமிருந்து வலம்**

1. திருவேங்கடவனை இப்படியும் அழைப்பர்....(10)
2. ஸ்ரீபத்மாவதித் தாயாரை இப்படியும் அழைப்பர் ஸ்ரீ.....(12)
5. .......(7) காரஸ்தே மாபலேஷுக தாசந! (பகவத் கீதை2-47)
6. பிள்ளைலோகாசாரியர் அருளிய அஷ்டாதச ரஹஸ்யங்களில்(18) முதலாவது.....(6)
11. பெரும்பாலான கோவில்களில் ....(7) ஏற்றுவதுண்டு.

**வலமிருந்து இடம்**

3. மஹிஷாஸுரமர்த்தனம் வேண்டி ஆதிசக்திக்கு சிங்கத்தை வாகன மாகத் தந்தவர், இம.....(2)
16. கேசரியின் மைந்தன்....(4)
17. யாத்ரா உத்ஸவங்களில் பெருமாள் இளைப்பாறும் இடம் .....(7) என்று அழைக்கப்படும்.
19. நவராத்தியின் இறுதிநாள் விஜய .....(3) திருநாளாகக் கொண்டாடுவர்.

**மேலிருந்து கீழ்**

2. திருமலை திருக்கோயிலுக்குப் பின் புறம், பக்தர்கள் பார்க்க வேண்டிய வைகளில் ஒன்று. திருமலை ஸ்ரீவேங்கடேஸ்வரா......(9)
4. காஞ்சியில் அருகருகே இருக்கும் இரு க்ஷேத்ரங்கள். பச்சை வண்ணர் .......(7) இதில் இரண்டாவது தான் திவ்ய தேசத்தில் சேர்க்கை.
6. திருமலையில் பக்தர்கள் ......(2)க் காணிக்கை செலுத்த எவ்விதக் கட்டணமும் செலுத்த வேண்டாம்.
8. "எம்பெருமான் பொன்மலையில் ஏதேனும் ஆவேனே" என்று பாடியவர் ......(5) ஆழ்வார்.
9. மஹாபாரதத்தில் பாண்டவர்களின் தாயாகச் சிறப்புற்று விளங்கிய வர்......(5)
13. உபய நாச்சிமார்களுக்குச் சாற்றும் கட்டிய மாலைக்குத் .......(4) என்று பெயர்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | | 3 |
| 2 | | | | | 20 | | | | | | |
| | 9 | ■ | ■ | | | 13 | | 8 | 14 | | |
| | | ■ | | | | | | | | | 12 |
| | | | | | | | | | | | 4 |
| | | | | 15 | ■ | | | | | | |
| | | | | ■ | ■ | 18 | | | | | |
| | ■ | | | ■ | ■ | | | ■ | | | |
| 5 | | 10 | | | | | 7 | ■ | | | |
| | ■ | ■ | 11 | | | | | | | | |
| 6 | | | | | | | | | 19 | | |
| | | | | | | 17 | | | | 16 | ■ |

தொகுப்பு : திருமதி. ராதா, சென்னை.

விடைக்கு 41ம் பக்கம் பார்க்க

14. திருமலை பிரம்மோத்ஸவ இறுதி நாள் பகலில் நடைபெறு வது...(8)
18. நமக்கு இடர்களைப் பக்குவமாக எதிர் கொள்ள ......(5) வேண்டும்.
20. உபதேசரத்தின மாலையை அருளியவர்.....(4) மாமுனிகள்.

**கீழிருந்து மேல்**

7. .......(7) என்ற புண்ணிய க்ஷேத்ரம் கடப்பாவிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ளது.
10. திருநாங்கூர் திவ்ய தேசங்களில் முதன்மையான திவ்ய தேசம் ......(5)கோயில்.
11. திருவெள்ளக்குளம் .....(7)பெருமாளைச் சேவித்தால், திருவேங்கடமுடையானைச் சேவித்த பலன் கிட்டும்.
12. ....(2) திருநட்சத்திரத்தில் மணவாள மாமுனிகள் அவதரித்தார்.
15. பிரம்மோத்ஸவத்தின் கடைசி நாள் இரவு.....(4) உற்சவத்து டன் நிறைவு.
16. பிள்ளைலோகாசாரியர் அருளிச் செய்த ரஹஸ்ய நூல்களுக்கு ......(10) என்று பெயர்.

*"ஸ்ரீவத்ஸ சிந்ந மிச்ரேப்யோ நம உக்திம தீமஹே:।*
*யதுக்தயஸ் த்ரயி கண்டே யாந்தி மங்கள ஸூத்ரதாம்:॥"*

## கூரத்தாழ்வான் பாகவத கைங்கர்யம் :

காஞ்சி ஸ்ரீவரதராஜப் பெருமாளிடம் மிகுந்த வாத்சல்யம் கொண்டவர் கூரத்தாழ்வான். காஞ்சி வரதராஜப் பெருமாளுக்கு நடக்கும் உற்சவங்களுக்கு வரும் பாகவதாளுக்கு, கூரத்தில், தினமும் ததியாராதனம் செய்து வந்தார். ஸ்ரீவரத ராஜப் பெருமாளிடம் கொண்ட ஆழ்ந்த பக்தியின் காரணமாக, பெரும் செல்வந்தரான கூரத்தாழ்வான், தான் எந்த நிலையிலும் எம்பெருமானின் செல்வங்களை விட, மிக அதிக செல்வங்கள் உள்ளவன் என்ற எண்ணம் வந்து விடக் கூடாது. அதன்கண் தனக்கு மமதை உண்டாகி விடுமோ என்றஞ்சி, தன்னுடைய பெருஞ்செல்வமனைத்தும் அறச் செயல்களுக்கு தானமாக வழங்கினார். இதனைத் தான் தொண்டரடிப்பொடி ஆழ்வாரும் அருளிச் செய்கிறார்.

*"இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும்*
*அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!"*

இப்பாசுரத்தின் உட்பொருளை உணர்ந்த கூரத்தாழ்வான், பாகவத கைங்கர்யத்தோடு, பகவத் கைங்கர்யமும் செய்து வரலானார். தன்னை விட இளைய வயதான இராமானுஜரையே குருவாக ஏற்று அடிப்பணிந்தார். கூரத்தாழ்வான் எம்பெருமானாரின் பிரதான சிஷ்யர்களில் ஒருவராய் விளங்கினார்.

## பகவத் கைங்கர்யம் :

கூரேசர், *"செல்வமல்ல உய்யும் வழி, உய்ய ஒரே வழி உடையவர் திருவடி"*, என்றெண்ணி, தனது அனைத்து சொத்து பத்துக்களையெல்லாம் கூரத்திலே விட்டு விட்டு, அன்பு மனையாள் ஸ்ரீஆண்டாளுடன், தொண்டரடிப்பொடியார் சிலாகிக்கும் ஸ்ரீரங்கனின் ஸ்தலமான திருவரங்கம்

*'குடதிசைமுடியை வைத்துக்*
*குணதிசைபாதம் நீட்டி*
*வடதிசைபின்புகாட்டித்*
*தென்திசையிலங்கை நோக்கி*
*கடல்நிறக் கடவுளெந்தை*
*அரவணைத்துயிலுமாகண்டு*
*உடலெனக்குருகுமாலோ!*
*என்செய்கேனுலகத்தீரே!"*

வந்து சேர்ந்தார். அங்கேயே எம்பெருமானாருக்கு பிரதான சீடராய் இருந்துக் கொண்டு, தொண்டு செய்து வரலானார். அக்கால கட்டத்தில், இராமானுஜரின் உபதேசத்தினால் பெருமளவில் வைணவம் தழைத்தோங்கி வந்தது. அவ்வமயம், எல்லாருக்கும் ஏற்படுவது போல், எம்பெருமானாருக்கும் அநேக விரோதிகள் முளைத்தனர். பற்பல தொல்லைகளும் கொடுத்து வரலாயினர்.

கங்கைகொண்ட சோழபுரத்தை ஆண்ட, சோழர் வம்சத்

# கூரத்தாழ்வான் கண்

*– திரு. ஜி.ராம்குமார், காஞ்சிபுரம்.*



தில் வந்த இரண்டாம் குலோத்துங்கன் (கிபி 1030–1116) அதி தீவிர சைவன், அரசனின் அமைச்சனான நாலூரான் துர்மதி கொண்டவன். எப்போதும் துர்போதனைகளை அளித்து வரலானான். குலோத்துங்க சோழனை, வைஷ்ணவ துவேஷியாக மாற்றி விட்டான். அதன் காரணமாக, சைவத்தை விட மேலான ஒன்று இவ்வுலகில் எதுவும் இல்லை. சிவனுக்கு மேற்பட்ட தெய்வம் யாருமில்லை என்றும் எழுதி அதில் வித்வான்கள் எல்லோரும் கையெழுத்திட மிரட்டினான். சிலர் பயந்து கொண்டும், சிலர் பணத்திற்கும், பொருளுக்கும் ஆசைப்பட்டும் கையெழுத்திட்டனர். மேலும் சிலர் இதனை ஒப்புக் கொள்ளாமல், வேறு நாட்டிற்கு சென்று விட்டனர்.

நாலூரான் சோழனுக்கு மேலும் ஒரு அறிவுரை அளித்தான், " என்னதான் வைணவர்களிடம் கையெழுத்து வாங்கினாலும், இவர்களுக்கெல்லாம் குருவான இராமானுஜரை அழைத்து வரச் செய்து, அவரிடம் கையெழுத்து வாங்கினால், வைணவத்தை இல்லாமல் ஆக்கி விடலாம் – அது மட்டுமில்லாமல், வைணவமே நம்மிடம் அடங்கி விட்டதாய் ஒப்புக்கொண்டதாகி விடும் என்று கூறினான். மன்னனும் தன் படை வீரர்களை திருவரங்கம் அனுப்பி வைத்தான்.

அவர்கள் வந்த கொடிய நோக்கத்தை எம்பெருமானாரின் சகோதரி மகன் நடாதூராழ்வான் அறிந்து கொண்டு, கூரேசருக்கு குறிப்பால் உணர்த்தினார். கூரத்தாழ்வார் அவ்வமயம் வடதிருக்காவேரியில் ஸ்நானம் செய்து கொண்டிருந்த தமது ஆசாரியரை காப்பாற்ற, அவரை வெள்ளை ஆடை அணிந்து மைசூர் தேசத்திற்கு தப்பிச் செல்ல வைத்தார். அதன் பின்னர், தமது ஆசாரியனின் காவி ஆடையும் திரிதண்டத்தையும் எடுத்துக் கொண்டு, அரச வீரர்களிடம் தானே இராமானுஜர் என்று நம்ப வைத்து, கங்கை கொண்ட சோழபுரம் சென்றார்.

அரசவையில் சோழன், "சிவாத் பரதரம் நாஸ்தி" அதாவது சிவனைத் தவிர மேலான தெய்வம் இல்லை என்று எழுதி கையெழுத்திட கட்டளையிட்டான். கூரத்தாழ்வான் இதனை மறுத்து பல மேற்கோள்காட்டி விஷ்ணுவே பரத்வம் என்று வாதிட்டார். மேலும் "சிவன் ஒரு குறுனி என்றால் விஷ்ணு ஒரு பதக்கு'', (அதாவது இரண்டு மடங்கு) என்று பொருள்பட எழுதிக்கொடுத்தார். மேலும் நாலூரான், வந்திருப்பது இராமானுஜர் அல்ல என்ற உண்மையையும் மன்னனுக்கு உணர்த்தினான். அதனால் கோபம் கொண்ட சோழன், கூரத்தாழ்வான் கண்களை பறிக்குமாறு ஆணையிட்டான். உன்னைப் போன்ற துரோகியைப் பார்ப்பதை விட கண் இல்லாமல் இருப்பதே மேல் என்று கூரேசர் தன் கண்களை தானே எழுத்தாணியால் எடுத்து வெளியே எறிந்தார். இவ்வாறாக, தன் ஆசாரியரையும், ஸ்ரீவைஷ்ணவத்தையும் காப்பாற்ற தன் கண்களை கூரத்தாழ்வார் கொடுத்தார் என்பதனை, குரு பரம்பரை வைபவத்தில் மேலும் அறியலாம்.

சோழனின் கொடுமையிலிருந்து தப்பிக்க, பன்னிரெண்டு வருடம் கூரேசர் திருமாலிருஞ்சோலையில் சென்று தங்கியிருந்தார். அப்போது யதிராஜர் மேல்கோட்டையில் தங்கியிருந்தார்.

காலப்போக்கில் சோழன் இறந்தான். அவனது மகன் தந்தையைப் போல் தீவிர சைவனாய் இல்லாமல், தன் மக்களின் விருப்பத்திற் கேற்ப, அவர்களின் மத உணர்வுகளை மதித்து வரலா னான். இவ்வாறு காலம் மாறியதால் இராமானுஜர் மீண் டும் ஸ்ரீரங்கம் திரும்பி வந்தார். தன் ஆசார்யன் வருவதை அறிந்த கூரேசர் தானும் ஸ்ரீரங்கம் திரும்பினார்.

## குரு கடாக்ஷம் :

திருநாராயணபுரம் சென்று வைணவத்திற்கு அரிய சேவைகள் செய்த உடையவர், கூரேசருக்கு நிகழ்ந்த கொடுமையை எண்ணி மனம் கலங்கினார். அரங்கநாதனை வணங்கி விட்டு தனது அத்யந்த சீடனைக் காண வந்த எம்பெருமானார் கண்ணிழந்த கூரத்தாழ்வாரை நோக்கி, "த்ருஷ்டி பூதரான உமக்கு இப்படி கண் போனதே" என்று கவலையுற்றார்.

அதற்கு கூரேசர் "இதுவரையில் கண்ணில் தென்பட்ட வைணவரின் நெற்றியிலுள்ள திருமண் காப்பினைப் பார்த்து கோண லாக உள்ளதே என்று நினைத்திருப்பேனோ, என்னவோ!" என்று பதிலுரைக்கிறார்.

இத்தகையப்பற்று, வைணவத்தின் பால் உள்ள பற்று, கூரத்தாழ்வானின் பல தியாகங்களை உற்று நோக்க வைக்கிறது. இராமானுஜர் கூறியும் நாலூரானை தண்டிக்க, பகவானிடம் முறையிடாத பெரும் கருணை கொண்டோன் கூரத்தாழ்வான். தம் கண்களை இழந்த கூரத்தாழ்வான் உடையவரின் நியமனப்படி காஞ்சி மாநகர் சென்று, பேரருளாளப் பெருமானைக் குறித்து "வரதராஜஸ்தவம்" என்ற ஸ்தோத்திரத்தால் பரம பக்தியுடன் சேவித்து, இழந்த கண்களை மீண்டும் பெற்றார்.

### கூரத்தாழ்வான் பெயர்க்காரணம் :

இவரின் பெயர்க் காரணமும் மரியாதைக்குறியதே. பொதுவாக ஆசார்யர்களையும், பல வைஷ்ணவ முன்னோர்களையும் குறிப்பிடும்போது, அவர்களை மிக மரியாதையுடன் "ர்" என்று விகுதி முடியும்படி அழைப்பார்கள். ஆனால் கூரத்தாழ்வானை, கூரத்தாழ்வார் என்று அழைக்காமல், கூரத்தாழ்வான் என்று அழைப்பதற்கு காரணம், இவரின் தகப்பனாரின் திருநாமம் அனந்தன் என்னும் கூரத்தாழ்வார் என்பதாகும். அதனால் இவரை கூரத்தாழ்வான் என்று அழைப்பர். இவரின் தாயாரின் திருப்பெயர் ஸ்ரீபெருந்தேவி நாயகி ஆகும். ஸௌம்ய வருஷம், தை மாதம், ஹஸ்த நக்ஷத்திரத்திலே அவதரித்தவர். இவருக்கு முதலில் இடப்பட்ட திருநாமம் "ஸ்ரீவத்ஸாங்கன்". எப்படி ஸ்வாமி எம்பெருமானார் திருமார்பிலே ஒரு "மறு (மச்சம்)" இருந்ததோ, அதைப் போன்றே கூரத்தாழ்வானுக்கும், திருமார்பிலே ஒரு மறு இருந்தது. எனவே திருமறுமார்பன் என்னும் பொருள் படும்படியான திருநாமத்தை சூட்டுகிறார்கள்.

காஞ்சிபுரத்திற்கு அருகிலே உள்ள கூரம் என்னும் கிராமத்தில் அவதரித்த இவர், கூரத்தாழ்வான் என்று அழைக்கப் பெற்றதற்கு அதுவும் ஒரு காரணம். இவர் பகவத் விஷயங்களில், அதுவும் எம்பெருமானின் கல்யாண குணங்களில் (காருண்யம், சௌலப்யம் மற்றும் மார்தவம்) மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்ததினால், அவர் ஆழ்வான் என்ற திருநாமத்தோடு அவரின் பிறந்த ஊரின் பெயரையும் சேர்த்து, கூரத்தாழ்வான் என்றழைக்கப்படுகிறார்.

### கூரத்தாழ்வான் சிறப்பு :

வாழி திருநாமத்தில் *"மருள் விரிக்கும் முக்குறும்பை மாற்ற வந்தோன் வாழியே"* என்று கூரத்தாழ்வானை போற்றுகிறார்கள். இங்கே, முக்குறும்பு என சொல்லப்படுகிறது. முக்குறும்பு என்றால் என்ன? மதம் என்ற சொல்லுக்கு "குறும்பு" என்றும் பொருள் கொள்வர். அஃதாவது, கல்வி செருக்கு (வித்யா மதம்– தான் அதிகம் படித்தவன், தன்னை விட கல்வியில் உயர்ந்தவன் இல்லை என்கிற எண்ணம்), குலச் செருக்கு (ஆபிஜாத்ய மதம் – உயர்ந்த குலத்தில் பிறந்தவன் என்கிற இறுமாப்பு) மற்றும் செல்வச் செருக்கு (தனமதம் – தான் அதிக செல்வம் உடையவன் என்ற எண்ணம்) இந்த மூன்றையும் அழித்தவராதலால், கூரேசர் "முக்குறும்பு அழித்தவர்" என்று ஸ்ரீவைணவர்களால் அழைக்கப்பட்டார்.

*"பொருள் விரிக்கும் எதிராசர் பொன்னடியோன் வாழியே*
*பொன் வட்டில் தனை எறிந்த புகழுடையோன் வாழியே*
*மருள் விரிக்கும் முக்குறும்பை மாற்ற வந்தோன் வாழியே*
*மயர்வறவே மெய்ஞ்ஞானம் விளங்கிடுவோன் வாழியே*

(கூரத்தாழ்வான் வாழித் திருநாமம்)

### கூரத்தாழ்வான் அந்திமக்காலம் :

சீடரே ஆனாலும், கூரேசர் எம்பெருமானாருக்கு வயதில் மூத்தவர், இராமானுஜருக்கு முன்னமே திருநாடு அலங்கரிக்க வேண்டும் என்ற அவா என்றும் உண்டு. அதனையே, அவர் அரங்கநாதரிடம் வேண்டுகிறார்; தமது ஆசாரியர் அவ்விடம் வரும்போது, அவரை தாம் வரவேற்க வேண்டும் என்று மேலும் விண்ணப்பித்தார். அரங்கனும் அவ்வாறே அருளினார். அதை அறிந்த இராமானுஜர், கூரேசரை சந்தித்து அவரின் முடிவை மாற்ற வேண்டுமென கேட்கிறார். நிறைவாக அரங்கனின் திருவுள்ளம் அதுவேயானால், தமக்கும் அது சம்மதமே என்று கண்ணிழந்த கூரேசனை ஆரத்தழுவி, அவருக்கு அநுக்கிரஹமும் செய்தார். அப்போது தனது ஆசாரியனின் திருப்பாதங்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து சேவித்து, கருத்தாழம் கொண்ட தனியனை சமர்ப்பிக்கிறார். பின்வரும் காலங்களில், இவையே ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் தினமும் அநுசந்திக்கும் தனியனாகிறது.

*"யோநித்யமச்யுத பதாம் புஜயுக்மருக்ம*
*வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாயமேனே*
*அஸ்மத்குரோர் பகவதோऽஸ்ய தயைகஸிந்தோ*
*ராமானுஜஸ்ய சரணௌ ஸரணம் ப்ரபத்யே"*

ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தை தழைத்தோங்கச் செய்தது மட்டுமில்லாமல், எம்பெருமானாரின் பவித்ரமான அன்பினை விளங்கிக் கொண்டு, அவருக்கும் மற்றும் ஸ்ரீவைஷ்ணவத்திற்கும் தொண்டு செய்து, ஆசார்யன் யதிராஜர் திருவடி சம்பந்தம் கொண்டால் – அவர் பந்தம் கொண்டால், அனைவருக்கும் மோக்ஷம் நிச்சயமே என்று உணர்ந்தேறினார். இன்றும் நமக்கு உணர்த்துகின்ற இத்தகைய குரு க்ருபாவை, ஸ்ரீகூரத்தாழ்வானின் அவதார ஸ்தலமான கூரம் சென்று, அங்கிருக்கும் கூரத்தாழ்வானை சேவித்து, அனைவரும் பேரின்பமடையுமாறும், அவரின் கடாக்ஷத்தை அடையுமாறும் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.





# கீலபட்ல ஆலயம்

நமது திருக்கோயில்


தெலுங்கு மூலம் : திரு. ஐ.எல்.என். சந்திரசேகர்
தமிழாக்கம் : திருமதி. எஸ். வைஷ்ணவி.


திருமலையில் கொலுவீற்றிருக்கும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியுடன் தொடர்புடைய திருத்தலங்கள் சில உள்ளன. அவற்றில் “கீலபட்ல” ஆலயமும் ஒன்றாகும். இத்திருத்தலத்தில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி “ஸ்ரீகோனேடிராய ஸ்வாமி” என்ற பெயருடன் எழுந்தருளி பூஜைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

கீலபட்ல ஸ்ரீகோனேடிராய ஸ்வாமியை ப்ருகு மஹரிஷி பிரதிஷ்டை செய்ததாக தலபுராணம் கூறுகின்றது. ப்ருகு மஹரிஷி ஸ்ரீமஹா விஷ்ணுவை தன் காலால் உதைத்ததால் வந்த பாவத்தை போக்குவதற்கான வழியை கூறுமாறு மஹரிஷிகளைக் கேட்டார். கௌண்டிண்ய மஹரிஷியின் அறிவுரையின்படி ப்ருகு மஹரிஷி ஏழு இடங்களில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியை பிரதிஷ்டை செய்ததாகக் கூறப்படுகிறது. அவற்றில் “கீலபட்ல” ஆலயமும் ஒன்று. ஆனால் ப்ருகு முனிவர் பிரதிஷ்டை செய்த இத்தெய்வம் சாதாரண மக்களுக்கு காட்சியளிக்காமல் தவம் செய்பவர்களுக்கே கண்கண்ட தெய்வமாக தரிசனம் அளித்தார்.

பத்மாவதி ஸ்ரீநிவாசர் திருக்கல்யாணத்திற்கு பிறகு ஸ்ரீநிவாச மங்காபுரம் சுற்றியுள்ள பகுதியில் சுற்றி திரிந்து அங்கேயுள்ள பகுதிகளை பார்வையிட்டனர். அதில் ஓர் பகுதியான “கீலபட்ல” பகுதிக்கு வந்து சிறிது நாட் கள் கழித்தனர். இதனை அறிந்த மஹரிஷிகள் அங்கே கூடி பூஜைகளை செய்து இங்கேயே வீற்றிருக்குமாறு எம்பெருமானை வேண்டினர். அவர்களின் வேண்டுதலுக் கிணங்கி ஸ்வாமி, தன்னுடைய அம்சமான விக்ரஹம் அருகிலுள்ள திருக்குளத்தில் இருப்பதாகவும், அதை எடுத்து பிரதிஷ்டை செய்து பூஜைகள் செய்யுமாறும் கூறினார். மஹரிஷிகள் திருக்குளத்தில் இருந்த ஸ்வாமியின் (திருவுருவம்) மூர்த்தியை வெளியே எடுத்து பிரதிஷ்டை செய்தனர். விக்ரஹம் திருக்குளத்திலிருந்து (கோனேரு) எடுத்த காரணத்தினால் ஸ்வாமி கோனேடிராய ஸ்வாமியாக அழைக்கப் பட்டார்.

இந்த ஆலயத்தை கி.பி.9,10 ஆம் நூற்றாண்டு காலத்தில் பல்லவர்கள் நிர்மாணித்தார்கள். அதன் பின்னர் விஜய நகர சக்கரவர்த்திகள் இந்த ஆலயத்தின் முன்னேற்றத்திற்கு ஊக்கமளித்தனர். சிறிது காலம் புங்கனூரு சமஸ்தானத்தின் அதிகாரத்தில் இருந்தது. 2012 ஆம் ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானம் இந்த ஆலய நிர்வாகத்தின் அதிகாரத்தை பெற்றுக் கொண்டு ஆலயத்தினை மிகவும் அழகாக சீரமைத்தனர். பதகவிதாபிதாமகர் தாள்ளபாக்க அன்னமாசார்யரும் இந்த திவ்ய தலத்தை தரிசித்தார்.



கீலபட்ல திருத்தலத்தில் ஸ்ரீகோனேடிராய ஸ்வாமி ஆலயத்தை பரந்து விரிந்த இடத்தில் கண்ணிற்கு விருந்தாக தரிசிக்கலாம். ஆலய நுழைவு வாயிலில் ராஜ கோபுரம் தரிசனம் கொடுக்கிறது. இந்த கோபுரம் ஐந்து அடுக்குகளில் ஏழு கலசங்களைக் கொண்டது. இந்த நுழைவு வாயில் வழியாக ஆலயத்தின் உள்ளே நுழைந்தால் எதிரில் ஜல பீடம், த்வஜஸ்தம்பம், கருடாழ்வார் மண்டபம் போன்ற வற்றை தரிசிக்கலாம். முகமண்டபம் வழியாக உள்ளேயிருக்கும் கர்பாலயத்தின் நுழைவுவாயில் இருபுறத்திலும் துவாரபாலகர்களான ஜயவிஜயர்கள் கொலுவீற்றிருப்பதை பார்க்கலாம். முதன்மையான கர்பாலயத்தில் ஸ்ரீகோனேடிராய ஸ்வாமி திருவுருவத்தில் திருமலை ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியை காணலாம். ஸ்வாமி கர்பாலயத்தின் வலப்புறத்தில் உள்ள தனி ஆலயத்தில் எம்பெருமானின் தேவியான ஸ்ரீலஷ்மி தேவி சதுர்புஜங்களுடன், இரு திருக்கரங்களில் தாமரை மலருடனும், இரு திருக்கரத்தில் அபய, வரத முத்திரையுடனும் தரிசனம் அளிக்கிறாள். மேலும் ஆலய வளாகத்தில் ஸ்ரீஆஞ்சநேய ஸ்வாமி, ஸ்ரீவராஹ ஸ்வாமி, ஸ்ரீதேவி, பூதேவி உடனுறை சென்னகேசவ ஸ்வாமி, ஆழ்வார்கள் தரிசனமளிக்கின்றனர். ஆலய வளாகத்தில் ஈசான்ய மூலையில் புஷ்கரணி(திருக்குளம்) உள்ளது. முதன்மை ஆலயத்தின் உள்ளேயிருக்கும் ஆலய வளாகத்தில் காளீயமர்த்தனம், ஆஞ்சநேயர் ஸ்ரீராமரை கட்டிப் பிடித்தது போன்று அமைந்திருக்கும் திருவுருவங்கள் பக்தர்களின் கண்களை கவரும் விதத்தில் அமைந்துள்ளன.

முதன்முதல் ஸ்ரீகோனேடிராயரை தரிசித்த பின்னரே திருமலைக்கு பயணிக்க வேண்டும் என்பது இங்கு வசிக்கும் மக்களின் நம்பிக்கை. அதனால் இப்பகுதியில் வசிக்கும் மக்கள் முதலில் இந்த ஸ்வாமியை தரிசித்த பின்னரே திருமலைக்கு புறப்படுவார்கள். கீலபட்ல, ஸ்ரீகோனேடிராய ஸ்வாமிக்கு ஒவ்வொரு ஆண்டும் வைசாக மாதத்தில் சுக்ல பக்ஷ அஷ்டமி முதல் ஒன்பது நாட்களும் பிரம்மோத்ஸவம் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது.

ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டத்தில் கங்கவரம் வட்டம் பலமனேரு நகரத்திலிருந்து சுமார் ஏழு கி.மீ. தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. பலமனேருலிருந்து பஸ், ஆட்டோ வசதிகளும் உள்ளன. பலமனேரு நகரத்திற்கு சென்றால் அங்கிருந்து மிக எளிதில் கிலபட்ல அடையலாம்.

# ஒளித்தமிழே திறல் போற்றி



பாரோர் புகழ பாடுவித்த பைங்கிளியே
நாடோர் நலமுறவே நற்றமிழை செய்தவளே!
ஆழி மழைக் கண்ணன் நின்னன்பில் சொக்கி நின்றான்;
அன்பின் விளைநிலமே; ஆண்டாளே தாலேலோ!

போய பிழையும் புகுதருவான் நின்றனவும்,
தீயில் தூசாக செப்பிய கோமளமே
நேசமுடன் பாசுரங்கள் நெய்த இளங்கொடியே!
பாசமுடன் யாமு(ன்)னை பாடுகிறோம்
அன்பிற் கனியமுதே ஆண்டாளே தாலேலோ

வேதமனைத்திற்கும் வித்தாகி நிற்பவளே;
நான்மறையை நற்றமிழில் நற்சொல்லாற் றுதித்தவளே!
வையத்துள் வாழ்கின்றாய் வான் சுடரே தாலேலோ!

சங்கத் தமிழ் மாலை சாற்றுவித்த கோதையளே
சிங்கத் தமிழை நீ செதுக்கியது எப்படியோ?
மாமாயன் வைகுந்தன் மயங்கி கிடக்கையிலே
நாங்களெலாம் எம்மட்டோ? நற்பாவாய் தாலேலோ!

அழகுத் தமிழில் உலகளந்தாய் அடிபோற்றி!
கன்னற் றமிழில் கவிசொன்னாய் கழல் போற்றி!
பருகும் தமிழ் தந்த பசுங்கிளியே பதம் போற்றி!
உருகும் தமிழ் தந்த ஒளித் தமிழே திறல் போற்றி!

**திரு. சீ. குறிஞ்சிச் செல்வன், ஸ்ரீரங்கம்.**

## ஜனவரி 2019

ஸ்ரீவேங்கடேசா! சரணம் சரணம் ப்ரபத்யே!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## பிப்ரவரி 2019

ஸ்ரீவேங்கடேசா! சரணம் சரணம் ப்ரபத்யே!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | | |

## மார்ச் 2019

ஸ்ரீவேங்கடேசா! சரணம் சரணம் ப்ரபத்யே!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |



### ஜனவரி 2019

01 ஆங்கில வருடப்பிறப்பு
7–13 ஸ்ரீஆண்டாள் நீராட்டோத்ஸவம்
14 போகி, போகிந்திரர்
15 பொங்கல் பண்டிகை
16 மாட்டுப்பொங்கல், ஸ்ரீஆண்டாள் பரிணயோத்ஸவம்
21 ஸ்ரீராமகிருஷ்ண தீர்த்த முக்கோட்டி
26 இந்தியக்குடியரசு தின விழா

### பிப்ரவரி 2019

12 ரத சப்தமி
13–19 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி தெப்போத்ஸவம்
16 பீஷ்ம ஏகாதசி
19 குமாரதாரை தீர்த்த முக்கோட்டி
24–மார்4 ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
25–மார்6 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

### மார்ச் 2019

4 மஹாசிவராத்ரி
13–21 தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
16–20 திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம்
20 தும்புரு தீர்த்த முக்கோட்டி
24–28 நாகலாபுரம் ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி தெப்போத்ஸவம்



திருமலை திருப்பதி தேவஸ்தானம்
ஸப்தகிரி சமய மாத இதழ்

## ஏப்ரல் 2019

ஸ்ரீவேங்கடேசா! சரணம் சரணம் ப்ரபத்யே!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

## மே 2019

ஸ்ரீவேங்கடேசா! சரணம் சரணம் ப்ரபத்யே!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## ஜூன் 2019

ஸ்ரீவேங்கடேசா! சரணம் சரணம் ப்ரபத்யே!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

### ஏப்ரல் 2019

7 அக்ஷய திருதியை, ஸ்ரீபரசுராம ஜெயந்தி
9 ஸ்ரீராமானுஜர் ஜெயந்தி, ஸ்ரீசங்கர ஜெயந்தி
11–19 திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
12–14 ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயோத்ஸவம்(திருமலை)
16–24 ரிஷிகேஷ், நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
17 ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி, ஸ்ரீதரிகொண்ட வெங்கமாம்பா ஜெயந்தி
17–19 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம்
18 ஸ்ரீ கூர்ம ஜெயந்தி, ஸ்ரீஅன்னமாசார்யர் ஜெயந்தி
29 ஸ்ரீஹனுமத் ஜெயந்தி

### மே 2019

மே26–ஜூ3 கார்வேட்டி நகரம் ஸ்ரீவேணு கோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
13–21 அப்பலாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
13–17 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம்
14–16 திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்
23–25 திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதார உத்ஸவம்

### ஜூன் 2019

மே26–ஜூ3 கார்வேட்டி நகரம் ஸ்ரீவேணு கோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
13–21 அப்பலாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
13–17 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம்
14–16 திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்
23–25 திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதார உத்ஸவம்

## ஜூலை 2019

ஸ்ரீவேங்கடேச சரணம் சரணம் ப்ரபத்யே!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## ஆகஸ்ட் 2019

ஸ்ரீவேங்கடேச சரணம் சரணம் ப்ரபத்யே!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## செப்டெம்பர் 2019

ஸ்ரீவேங்கடேச சரணம் சரணம் ப்ரபத்யே!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |



## ஜூலை 2019

12-14 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்
16 குருபௌர்ணமி, வியாச பூஜை, சந்திர கிரகணம்
17 திருமலையப்ப ஸ்வாமி ஆனி வர ஆஸ்தானம்
27 ஆடிக்கிருத்திகை
27-30 திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பவித்ரோத்ஸவம்

## ஆகஸ்ட் 2019

1 ஸ்ரீசக்கரத்தாழ்வார், ஸ்ரீப்ரதிவாதி பயங்கர அண்ணா திருநட்சத்திரம்
3 ஆடிப்பூரம்
5 கருட பஞ்சமி
9 ஸ்ரீவரலக்ஷ்மி விரதம், ஸ்ரீதரிகொண்ட வெங்கமாம்பா நினைவு தினம்
10-13 திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
15 இந்திய சுதந்திர தினம், ஸ்ரீஹயக்ரீவ ஜயந்தி, ஸ்ரீவிகனசாசாரியார் ஜயந்தி
23 கோகுலாஷ்டமி, கிருஷ்ணாஷ்டமி

## செப்டெம்பர் 2019

01 ஸ்ரீவராஹ ஜயந்தி, ஸ்ரீபலராம ஜயந்தி
02 விநாயக சதுர்த்தி
03 ரிஷி பஞ்சமி
10 ஸ்ரீவாமன ஜயந்தி
10-14 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பவித்ரோத்ஸவம்
12 ஸ்ரீஅனந்த பத்மநாப விரதம்
14-28 மஹாளய பக்ஷம்

செப்டெம்பர் 30 முதல்
அக்டோபர் 08 வரை
திருமலையப்ப ஸ்வாமி
வருடாந்திர பிரம்மோத்ஸவம்

## அக்டோபர் 2019

ஸ்ரீவேங்கடேசா! சரணம் சரணம் ப்ரபத்யே!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## நவம்பர் 2019

ஸ்ரீவேங்கடேசா! சரணம் சரணம் ப்ரபத்யே!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## டிசம்பர் 2019

ஸ்ரீவேங்கடேசா! சரணம் சரணம் ப்ரபத்யே!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |



## அக்டோபர் 2019

02 காந்தி ஜெயந்தி
04 சரஸ்வதி பூஜை, திருமலையப்ப ஸ்வாமி கருட சேவை
05 திருமலையப்ப ஸ்வாமி தங்கத் திருத்தேர்
06 துர்காஷ்டமி
08 விஜய தசமி
26 நரக சதுர்த்தசி
27 தீபாவளி, ஸ்ரீகேதார கௌரி விரதம், திருமலை ஆலயத்தில் தீபாவளி ஆஸ்தானம்
31 நாக சதுர்த்தி

## நவம்பர் 2019

04 திருமலையப்ப ஸ்வாமி புஷ்பயாகம்
8–12 நாராயணவனம் ஸ்ரீகல்யாண வெங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம்
09 கைசிக துவாதசி
16 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி லக்ஷ வில்வார்ச்சனை
23–01 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவம்
24 தன்வந்திரி ஜெயந்தி

## டிசம்பர் 2019

01 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பஞ்சமி தீர்த்தம்
02 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் புஷ்பயாகம்
08 கீதா ஜெயந்தி
09 ஸ்ரீசக்ர தீர்த்த முக்கோட்டி
10 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் கார்த்திகை தீபோத்ஸவம்
11 ஸ்ரீதத்த ஜெயந்தி
17 தனுர் மாதம் ஆரம்பம்
26 சூரிய கிரகணம்

# திருமழிசை ஆழ்வாரின் பக்தியநுபவம்

திரு. வி. சக்திவேல், தென்புத்தூர்

திருமழிசையாழ்வார் வீர வைஷ்ணவராக விளங்கிய போதிலும் இவரது பக்தியநுபவங்கள் பல்வேறு சமயங்களிலும் விளங்கிய பக்தமணிகளின் சிறந்த, பரந்த பக்தியநுபவங்களை நினைவூட்டுகின்றன. பேயாழ்வாரின் சீடர் திருமழிசையாழ்வார் என்பதை குருபரம்பரைக் கதைகள் ஒரு முகமாக வற்புறுத்துகின்றன.

இறைவன் என்னுடைய உள்ளத்திலே நின்றான், இருந்தான். பாற்கடலில், அரவணையின் மேல் பொருந்திக் கிடப்பானோ? அந்தப்படுக்கையில் கண்ணுறங்குவானோ? என்று இவர் கூறுவதும் ஒரு பக்தியநுபவமாகும். பாற்கடல், திருவரங்கம் முதலான இடங்களில் பள்ளி கொண்டிருப்பதெல்லாம் அன்பர் நெஞ்சில் நிற்பதும், இருப்பதுமாகிய பலனைப் பெருவதற்காகத் தான் என்பது. இறைவன் உலகிலுள்ள உயிர்க்கெல்லாம் தாயாக இருப்பதால் சொற்ப ஆசையுள்ளவர்களுடைய நெஞ்சிலும் புகுவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டே திவ்ய ஸ்தலங்களில் காட்சியளிக்கிறானாம். இந்த உண்மையை உணர்ந்து கொள்ளும் பக்தர்கள் ஞானக் குழந்தையுள்ளம் படைத்தவராயிருப்பர்.

*"கூற்றமும் சாரா கொடுவினையும் சாரா தீ*
*மாற்றமும் சாரா வகை அறிந்தேன்"*

என்ற வாக்கிலே இவரது பக்தி வழி எவ்வளவு தெளிவாக புலனாகிறது. "மரணத்தை வெல்லும் வகையறிந்தேன்" என்கிறார். "கொடுவினை சாராத வகையும் அறிந்தேன்" என்கிறார். கெட்ட பெயரோ, அபவாதமோ வரக்கூடும் என்ற பயமும் இவருக்கு இல்லையாம்.

பகவத் கீதையில் கண்ணன் கூறியுள்ள சரம சுலோகத்தின் பொருளை உணர்ந்து ஒழுகியது கொடு வினைகளையும், தீமாற்றத்தையும் வென்று, வழியறிவதற்குரிய பேராற்றலைத் தந்து விட்டது என்கிறார். "எல்லா உபாயங்களையும் விட்டு, என்னை ஒருவனையே சரணமாகப் பற்றுவாய், நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும் விடுவிக்கிறேன் வருந்தாதே" என்பது சரம சுலோகத்தின் பொருள். "இந்த உரை என் உள்ளத்திலே எப்போதும் கிடக்கும்" என்று கூறுகிறார். கண்ணன் திருப்பெயருடன் அவன் உபதேசித்த சரம சுலோகத்தின் உட்பொருளையும் உள்ளத்தில் கொண்டிருப்பவர் இவர். ஒரு சமயம் இறைவனே ரட்சகன் என்று நம்பி வாழும் தமக்கு ஒருவரும் நிகரில்லை என்ற உணர்ச்சி உண்டாகிறதாம். இந்த நிலையில் "என் மதிக்கு விண் எல்லாம் உண்டோ விலை?" என்று கேட்கிறார் ஆழ்வார். இறைவனது தொடர்பை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இந்தத் தன்னம்பிக்கை செருக்காகாது என்பது உறுதி.

இறைவன் உலகங்களுக்கெல்லாம் அந்தர்யாமியாக நின்று படர்கொடியைத் தாங்கி நிற்கும் கொழுகொம்பு போல் இருக்கிறான் என்பதை நன்குணர்ந்து ஒழுகச் செய்வதே கல்வி என்பர்.

*"நிற்கின்றது எல்லாம் நெடுமால் என்று ஓராதார்*
*கற்கின்றது எல்லாம் கடை."*

என்பது ஆழ்வாரது பக்தி அநுபவத்திலிருந்து முளைத்தெழுந்த மகாவாக்கியங்களில் ஒன்று. இல்லறம் பெரிதா? துறவறம் பெரிதா? என்று நீண்ட காலமாக விவாதித்து வருகிறார்களல்லவா? வேறு உபாயங்களையும் நல்லறம் என்று சுட்டிக்காட்டுவது உண்டு. வேதத்தில் சொல்லப்படுகிற கருமங்களையும் "நற்றவம்" என்று காட்டுகிறார்கள். இந்த விவகாரக் குழப்பத்தை இந்த ஆழ்வாரின் பக்தியநுபவத்தை எப்படி தெரிவிக்கிறது என்று பார்க்கலாம்.



திருமழிசையாழ்வார் துறவியாகத்தானே காலம் கழித்தார் என்று சொல்லக் கூடும். எனினும், இவர் துறவரம் தான் நல்லறம் என்று சொல்ல வில்லை.

*"இல்லறம் அல்லேல்*
*துறவறம் இல் என்னும்*
*சொல் அறம்*
*அல்லனவும் சொல் அல்ல-*
*நல்லறம்*

## சிறுவர் பகுதி விடைகள்

1. திருக்கடல்மல்லை.
2. திருவண்புருடோத்தமம்.
3. ஸ்ரீராமானுஜர்.
4. கம்பர்.
5. 8.
6. ரிக் வேதம்.
7. திருமண்டங்குடி.
8. சித்திரை மாதம்-சித்திரை நட்சத்திரம்.
9. திருமழிசை ஆழ்வார்.
10. திருப்பேர் நகர்.

தொகுப்பு : திரு. என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்.

*ஆவனவும் நால் வேத மாத்தவமும் நாரணனே*
*ஆவது ஈது அன்றென் பார் ஆர்?"*

இந்த வெண்பாவுக்கு வியாக்யான சக்கரவர்த்தி பெரியவாச்சான்பிள்ளையைத் துணையாகக் கொண்டு, கூர்ந்து நோக்கித் திருமழிசையாரின் உள் ளத்தைக் காண முயல்வது நலமாகும். சிலர் இல்ல றமே புகல் (இல்) என்கிறார்களாம். வேறு சிலர் துறவரமே புகல் (இல்) என்கிறார்களாம். இந்த இரு வகையினர் சொற்களும் சொல் அல்ல. அதாவது, பிரமாணம் அல்ல என்கிறார்.

இறையருள் இல்லாவிட்டால் எந்த உபாயமும் பலன் அளிப்பதில்லை. ஏன் பக்தியோகமும் திவ்விய தேச வாழ்வும், நாம சங்கீர்த்தனமும் கூட, இறையருள் இல்லாவிட்டால் பயன்படுவன அல்ல. ஆகையால் நாராயணனே உபாயமானவன். "இறைவனே பல னைத் தரும் உபாயமாகும் போது, வேறு உபாயங் களும் வேண்டுமோ?" என்பது இந்த ஆழ்வார் கண்ட வேதாந்த விழுப்பொருள். இந்தப் பாட்டு, இந்த நான் முகன் திருவந்தாதியில் கீதைக்குச் சரம சுலோகம் போல் அமைந்திருக்கிறது என்பர். இந்த ஆழ்வா ரின் மெய்ப் பொருள் வார்த்தை இவரது பக்தியநுபவத்தின் விளைவு ஆகும். இந்நிலையில் திருமழிசையாழ்வார் பாடி முடிக்கி றார் தமது நான்முகன் திருவந்தாதியில்,

*"இனி அறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்*
*இனி அறிந்தேன் எம்பெருமான்! உன்னை- இனி அறிந்தேன்*
*காரணன் நீ கற்றவை நீ கற்பவை நீ நற்கிரிசை*
*நாரணன் நீ நன்கறிந்தேன் நான்."*

"சாஸ்திர மூலமாக அறிந்த அறிவு அறிவு அல்ல. நேராகவே இப்போது நன்கு அறியப் பெற்றேன்" என்பதைத் தான் "நன்கு அறிந்தேன் நான்" என்று சொல்லி வற்புறுத் தியுள்ளார்.

திருமழிசைப்பிரானின் பக்தியநுபவங்களை இது வரை நாம் நான்முகன் திருவந்தாதி மூலமாக அநுபவித்தோம். இனி அவரது மற்றொரு பிரபந்தமான திருச்சந்த விருத்தத் தின் வாயிலாகவும் ஆழ்வாரின் அநுபவங்களைக் கொஞ் சம் அறிந்து கொள்வோம். இந்த பிரபந்தத்தில் திருக் குடந்தை என்ற கும்பகோணத்தைப் பற்றிய பிரஸ்தாபம் குறிப்பிடத்தக்கது. இங்கே சயனத்திருக்கோலமாக எழுந் தருளியிருக்கும் ஆரா அமுதப் பெருமாளிடம் இந்த ஆழ்வா ருக்குள்ள ஈடுபாடும், இங்கே இவர் யோகம் புரிந்ததும், இவரது பக்தியநுபவத்தைக் கடல் போல பெருக்கி இருக்க வேண்டும்.

*"அற்புதன் அனந்தசயனன் ஆதிபூதன் மாதவன்*
*நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் என் நெஞ்சுளே!"*


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**திருமலையில்**
**இரத்ததானம் செய்யுங்கள்!**
**திருமலையப்பனின் இறையருள் பெறுங்கள்!!**

- இரத்தம் தானத்தால் மட்டுமே வழங்க முடியும். இரத்தம் தேவைபடுபவர்களுக்கு அளிப்பதன் மூலம் ஒரு உயிரையும் காப்பாற்ற முடியும்.
- கலியுக வைகுண்டமான திருமலையில் இரத்த தானம் செய் வது புண்ணியமாகும்.
- திருமலை அஸ்வினி மருத்துவமனையில் தினமும் காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை இரத்த தானம் அளிக்கலாம்.

தொலைபேசி எண் : 0877-2263601

**இரத்தம் தானம் செய்யுங்கள்!**
**ஆபத்தில் உள்ளோரை காத்திடுங்கள்!!**

- முதன்மை மருத்துவ அலுவலர்

என்கின்ற விசேஷ அநுபவம் சிறப்பாக இவருக்குக் கிடைத்தது. திருக்குடந்தையில் தான் அன்பு நெறிக்கே யோகம் துணையாகித் தொண்டு புரிந்தது இவருக்கு. "நெஞ்சு உருகி, உள்கனிந்து, எழுந்ததோர் அன்பில்" இறைவனைக் கண்டவர் இவ்வாழ்வார். இந்த அநுபவம் விசேஷமாகக் குடந்தையில் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆழ்வார் ஆயுளை அறுக்கும் வாள்களாக நாட்கள் கழிந்து போகாமல் இறைவனை ஆராதிப்பதிலேயே பொழுது போக்கி வந்த இவர், அப்பனும் அன்னையும் எம்பிரானும் எல்லாம் இறைவனே என்று வாழ்க்கை நடத்தியவர்.

*"முத்தனார் முகுந்தனார் புகுந்து*
*நம்முள்மேவினார்*
*எத்தினால் இடர்க் கடல் கிடத்தி?*
*ஏழை நெஞ்சமே!"*

என்று நெஞ்சை நோக்கி கேட்பது, தன் சொந்த அநுபவத்தோடு பிறருக்கும் ஒரு வழி காட்டினார். இந்த பிரபந்தத்தின் இறுதியில் மூன்று பாசுரங்கள் இவரது சிகரமான பக்தியநுபவங்களைப் பேசுகின்றன. இவர் என்ன பேசிக் கொண்டிருந்தாலும் இவரது மனம் இறைவனுடைய திருவடியை அனைத்து கொண்டிருக்குமாம். இந்த அநுபவம் முற்றி முதிர்ந்து, பகலில் செய்யும் தொழில்களையும், நினைக்கும் நினைவுகளையும் ஊடுருவி கிடப்பதுடன், இராப்பொழுதில் கனவுகளையும் உறக்கத்தையும் கூட வசீகரித்து ஆட்கொள்கிறதாம். இப்படி இறைவன் திருவடிகளைத் தழுவி, அவற்றையே பூணாகப் பூண்டு கொள்ளும் உள்ளம், அந்த நிலையிலிருந்து திரும்பி விடாமல் அப்படியே நிலைத்து நிற்கிறதாம்.

ஒரு சமயம் பேயாழ்வார் திருமழிசையாழ்வாரிடம் இதர சமய சித்தாந்தங்களின் நிலையாமையை எடுத்துக் கூறி திருநாராயணனைப் பரம்பொருளாகக் கொண்ட வைஷ்ணவ சித்தாந்தமே உயர்வானது என்று தெளிவாக விளக்கினார். பேயாழ்வாரின் சீரிய அறிவுரைகளைக் கேட்ட திருமழிசை யாழ்வாரும் மனம் திருந்தி,

*"சாக்கியம் கற்றோம் சமண் கற்றோம் சங்கரனார்*
*ஆக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம் பாக்கியத்தால்*
*செங்கட் கரியானைச் சேர்ந்தோம் யாம் தீதிலமே*
*எங்கட்கு அரியதொன்று இல்"*

என்னும் முடிவு கொண்டு, வைணவ சித்தாந்தத்தை பின்பற்றிய பேராய்த் திருமழிசையிலேயே 400 ஆண்டுகள் தியானத்திலிருந்தார். இந்நிலையில் ஆழ்வாரை ஆட்கொள்ளக் கருதி திருநாராயணன், தன் திருவடிவ சித்தாந்தங்களைக் காட்டி, தானே அனைத்து உயிர்களையும் காத்தருளும் பரம்பொருள் என்றும், ஆழ்வார் பிற சமயங்களில் உழன்று திரிந்தும் முடிவு காணாமைக்கும் தாமே காரணமென்றும் கூறி மெய் ஞான போதம் செய்து, உலகில் மானிட கோடிகள் உய்யும் வண்ணம் பல அற்புதங்களைச் செய்து உலகில் பரமபதத்தை அடையும் வகை அருளினார். எம்பெருமான் திருவருள் செல்வத்தைப் பெற்றுச் சிந்தை தெளிந்த ஆழ்வாரும் பெரும் மகிழ்ச்சியுற்றுத் திருமழிசையில் தனியாகத் தியானத்தில் ஈடுபட்டிருந்தார்.

திருமழிசையாழ்வார் தன் வாழ்நாளின் பிற்பகுதியில் திருக்குடந்தை கும்பகோணத்திலேயே தங்கி அவ்வூரிலுள்ளோர் அனைவருக்கும் அருள் செய்து ஆராவமுத பெருமாளை அகம் குளிர கண்டு அவரது திருக்கல்யாண குணங்களைக் குறித்து தொண்ணூற்றாறு பாசுரங்களால் "நான்முகன் திருவந்தாதி" என்னும் பிரபந்தத்தையும் நூற்றிருபது பாசுரங்களால் "திருச்சந்த விருத்தம்" என்னும் பிரபந்தத்தையும் பாடியருளினார்.

திருமழிசை ஆழ்வார் திருவடிகளே புகல்!


## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

### ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு விண்ணப்பம்

- "ஸப்தகிரி" மாத இதழ் தொடர்பான ஆலோசனைகள்/அறிவுரைகள்/புகார்களை sapthagiri_helpdesk@tirumala.org வாயிலாக தெரியப்படுத்தவும்.
- ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியை முறைபடுத்துவதன் பொருட்டு 0877-2264543 தொலைபேசி எண்ணிற்கு தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) மீண்டும் ஒரு முறை தெரியப்படுத்தவும்.
- மேற்குறிப்பிட்ட தொலைபேசி எண் வாயிலாக மட்டுமின்றி sapthagiri_helpdesk@tirumala.org க்கு இமெயில் அனுப்புவதன் வாயிலாகவும் தெரிவிக்கலாம்.
- ஆன்லைன் சந்தாதாரர்கள் தங்களுடைய முழு முகவரியை தி.தி.தே. இணையதளத்தின் வாயிலாக கட்டாயம் தெரியப்படுத்தவும்.

–பிரதான ஆசிரியர்




# திவ்யப்பிரபந்தத்தில் தன்வந்தரி

டாக்டர். எஸ். எல். ஸ்ரீனிவாசன், ஆயுர்வேத மருத்துவர்,
சத்தியமங்கலம்.

உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் பிணியில்லாமல் ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் என்று ஆசைப்படுவது இயற்கை. அப்படி ஆரோக்கியத்துடன் வாழ வேண்டு மானால் அதற்கான காரியங்கள் பல. அவற்றுள் தலை சிறந்தவை தேவ பூஜை, ஜபம், தியானம் முதலியன.

ஆரோக்கியத்திற்கு அதிதேவதை தன் வந்தரி ஆவார். அவர் சங்கு, சக்கரம் ஏந்தியும் ஒரு கையில் அட்டைப்பூச்சியும் (ஜலூகா) மற் றொருகையில் அமிர்த கலசத்தையும் ஏந்தி யவராக இருப்பார். அவரைப் பிரதி தினமும் வழி படுவதால் உடல் நலத்துடன் வாழலாம். வருடந் தோறும் ஐப்பசி மாதத்தில் கிருஷ்ண பக்ஷ திரி யோதசியில், அஸ்த நட்சத்திரம் கூடிய தினத்தில், தன்வந்தரி ஜெயந்தி வருகிறது. அந்நாளில் சிறப்பு வழிபாடு நடத்துவது சாலச் சிறந்ததாகும். “இறப்பு நிலை அகற்றி அமிர்தநிலையை அடை விப்பாயாக” என்று சான்றோர்கள் பிரார்த்தனை செய்வர். அத்தகைய தெய்வமான தன்வந் தரியைப் பற்றி நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் கூறப்பட்டுள்ளனவை பற்றிக் காண்போம்.

**தன்வந்தரி அவதாரம் :**

தேவர்களும் அசுரர்களும் அமுதம் பெற்று அதனை உண்டு நீண்ட நாள் வாழ எண்ணினர். அதற்காகப் பாற்கடலைக் கடைந்த பொழுது அவதரித்தவர்தான் ஸ்ரீதன்வந்தரி. விஷ்ணுவின் அம்சமாக ஜனித்து உலகம் போற்றும் ஆயுள் வேதம் (ஆயுர்வேதம்) என்ற மருத்துவத்தை உலகிற்கு அருளினார்.

*“மனத்துள்ளான் மாகடல் நீருள்ளான் மலராள்*
*தனத்துள்ளான் தண்துழாய் மார்பன் - சினத்துச்*
*செருநர் உகச்செற்று உகந்த தேங்கு ஓத வண்ணன்*
*வரு நரகம் தீர்க்கும் மருந்து”* –2284

*“மருந்தும் பொருளும் அமுதமும் தானே*
*திருந்திய செங்கண்மால் ஆங்கே - பொருந்தியும்*
*நின்று உலகம் உண்டு உமிழ்ந்தும் நீர்ஏற்றும் மூவடியால்*
*அன்று உலகம் தாயோன் அடி”* –2285

திருப்பாற்கடலில் உமிழ்ந்தும் கண் வளர்ந்த திருத்துழாய் மார்புடைய திருமால், மலரில் வாழும் திருமகள் மார்பகங்களில் உள்ளவன்; அடியார்களின் பகைவர்களைச் சீறி அழித்த பெருமையுடையவன்; கடல் நிறமுடைய எம்பெருமான் பிறவியா கிய நரகத்தைப் போக்க வல்ல மருந்தாவான்; அவன் என் நெஞ் சில் வாழ்கிறான். பரம்பொருளான திருமால் செந்தாமரைக் கண் களைப் பெற்று, காக்கும் கடவுளாகத் திகழ்கிறான்; உலகங்களை உண்டு உமிழ்ந்து அருள்பாலிக்கிறான். அன்று மாவலியிடம் நீர் ஏற்று மூவடியால் உலகளந்த திருமாலின் திருவடிகளே பிறவிப் பிணிக்கு மருந்தாயும், அரும்பொருள் அமுதமானான் என்று பேயாழ்வார் அருளுகிறார்.

*“எருத்துக் கொடி உடையானும் பிரமனும்*
*இந்திரனும் மற்றும்*
*ஒருத்தரும் இப்பிறவி என்னும் நோய்க்கு மருந்து*
*அறிவாரும் இல்லை*
*மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா! மறுபிறவி*
*தவிரத்*
*திருத்தி உன் கோயில் கடைப்புகப்பெய் திருமாலிருஞ்*
*சோலை எந்தாய்!”*
–458

என பெரியாழ்வார் போற்றுகின்றார்.

*“கடல் கடைந்து அமுதம் கொண்டு*
*கலசத்தை நிறைத்தாற்போல்*

*உடல் உருகி வாய்திறந்து*
*மடுத்து உன்னை நிறைத்துக் கொண்டேன்*
*கொடுமை செய்யும் கூற்றமும் என்*
*கோல் ஆடி குறுகப்பெறா*
*தடவரைத் தோள் சக்கர பாணீ!*
*சார்ங்க வில் சேவகனே!"* –466

*"பொன்னைக் கொண்டு உரைகல் மீதே*
*நிறம் எழ உரைத்தாற் போல்*
*உன்னைக் கொண்டு என் நாவகம் பால்*
*மாற்றின்றி உரைத்துக் கொண்டேன்*
*உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன்*
*என்னையும் உன்னில் இட்டேன்*
*என் அப்பா! என் இருடிகேசா!*
*என் உயிர்க் காவலனே!"* –467

அகன்ற மலை போன்ற தோள்களை உடைய சக்கரப் பெருமாளே! சாரங்கம் என்ற வில்லை ஏந்திய இராமனே! திருப்பாற்கடலைக் கடைந்து எடுத்த அமிர்தத்தைக் கலசத்தில் நிறைத்தாற்போல, உன் அருள் எனும் அமிர்தத்தை அடியேன் ஏந்தி மனதில் நிரப்பிக் கொண்டேன். இதன் பின் கொடிய எமனும் செங்கோல் உள்ள இடத்தில் வாரான். தந்தை போன்ற ரிஷிகேசா! என் ஆன்மா எவருக்கும் அடிமை ஆகாதபடி ஆட்கொள்ளும் காவலனே! தங்கத்தை நிறம் காண உரை கல்லில் உரைத்துப் பார்ப்பது போல உன்னைக் கொண்டு என் நாவில் மாற்று அழியும்படி பேசினேன். உன் அமைதியும் இசைவும் கொண்டு என் அறிவுப் பொருள் ஆக்கினேன். என் ஆன்மாவை உன் திருவடிகளில் காணிக்கையாக வைத்து விட்டேன் என பெரியாழ்வாரும் பெரிதும் பாராட்டுகின்றார்.

### மாயோனே மருத்துவன் :

*"மங்கிய வல்வினை நோய்காள்!*
*உமக்கும் ஓர்வல்வினை கண்டீர்*
*இங்குப் புகேன்மின் புகேன்மின்*
*எளிது அன்று கண்டீர் புகேன்மின்*
*சிங்கப்பிரான் அவன் எம்மான்*
*சேரும் திருக்கோயில் கண்டீர்*
*பங்கப்படாது உய்யப் போமின்*
*பண்டு அன்று பட்டினம் காப்பே."* –446

என் வினைகளால் வந்த நோய்களே! உங்களுக்கும் கூட பாவவினைகள் உண்டு என்பதைக் கண்டீர்களா? இனி இங்குப் புக வேண்டாம். வர வேண்டாம். நீங்கள் என்னை அடைவது எளிதன்று; அப்பால் நில்லுங்கள். நரசிம்ம அவதாரம் எடுத்த என் ஸ்வாமி, நித்திய வாசம் செய்யும் திருக்கோயில் அடியேன் உடலும் ஆத்மாவும் ஆகும். நீங்கள் துன்பப்படாமல் பிழைத்துச் செல்லுங்கள்; அடியேன் ஆன்மா நிலை பழைமையானதன்று; பாதுகாப்புள்ள பட்டினமாக ஆகிவிட்டது என பெரியாழ்வார் பெரிதும் போற்றுகின்றார்.

*"அறிந்தன வேத அரும்பொருள் நூல்கள்*
*அறிந்தனகொள்க அரும்பொருள் ஆதல்*
*அறிந்தனர் எல்லாம் அரியை வணங்கி*
*அறிந்தனர் நோய்கள் அறுக்கும் மருந்தே"* – 3581

அறிவதற்கு அருமையானவற்றை வேத நூல்கள் கூறுகின்றன. இதிகாச நூல்கள் முடிவு செய்கின்றன. எம்பெருமானைப் பற்றி ஓரளவே வெளியிடும் இவை உள்ளபடி அறியவில்லை. ஞானிகளும் முனிவர்களும் ஸ்ரீமந் நாராயணனைத் தொழுது "பிறவி நோயைப் போக்கும் மாமருந்து" என அவனை அறிகிறார்கள். அடியேனுக்கு அவனின் வடிவை அறிய முடிந்தது என நம்மாழ்வாரும் நவில்கின்றார்.


நாராயணனே, நம்மவர் பிணியை நீக்கும் மருத்துவன் என சிலப்பதிகாரம், விவேகசிந்தாமணி, மகாபாரதம், விஷ்ணு புராணம், அக்னி புராணம், கருட புராணம், பவிஷ்ய புராணம், ஸ்ரீஸூக்தம் போன்ற நூல்களால் அறிய முடிகிறது. எனவே நாமும் தன்வந்தரிப் பெருமானை வழிபட்டு பிணியின்றி வாழ்வோமாக!


**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**

பக்தர்கள் தலைமுடிக் காணிக்கையை இலவசமாக செலுத்தலாம். பக்தர்கள் முடிக்காணிக்கையை செலுத்த எவ்வித கட்டணமும் அளிக்க வேண்டாம். பணம் கொடுப்பதும் பெறுவதும் குற்றமாகும். யாராவது பணம் கேட்டால் கல்யாண கட்டாவில் பணிபுரியும் அதிகாரியிடம் தெரிவியுங்கள். அவ்வதிகாரி பணம் கேட்பவர் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பார்.

மூன்று கத்திரி கொடுப்பவர்கள் ப்ளேடை கொண்டு வரவேண்டாம். தலை முடி காணிக்கை செலுத்துபவர் மட்டுமே ப்ளேட், சந்தனம் கொண்டு வர வேண்டும். ப்ளேடு, சந்தனம் திருமலையப்பன் சொத்து. அதனை வீணாக்காதீர்கள்.

-செயலாட்சித்தலைவர்



# பிறவிக் கடலை கடக்க முதல் இரண்டு படிகள்

*– திருமதி. வசந்தா ஸ்ரீநிவாசன், சென்னை.*

*புநரபி ஜனனம் புநரபி மரணம்*
*புநரபி ஜனனீ ஜடரே சயநம்*

என்றபடி பல்லாயிரக்கணக்கானப் பிறவிகள் எடுத்து இந்த ஸம்ஸார பந்தத்தில் சிக்குண்டு தவிக்கும் நாம் அனைவரும் எப்பொழுது? எப்படி? இதிலிருந்து மீள்வது என்பதை அறியாமலே உழன்று கொண்டிருக்கிறோம். இப்படி பிறவிக் கடலில் மாறி மாறி பல பிறப்பும் பிறந்து, சுக துக்கங்களை அனுபவிப்பதே நம்முடைய இயல்பு என்று நினைத்து *''ஸம்ஸாரம் ஸாகரம் கோரம் அநந்தம் க்லேச பாஜனம்''* என்றபடி இந்த ஸம்ஸார மண்டலத்திலேயே சுழன்று வருகிறோம்.

சரி. நிஜம் தான். என்ன செய்ய வேண்டும்? எப்படி இந்த ஸம்ஸார சுழற்சியிலிருந்து மீண்டு விடுதலை பெறுவது? என்ற கேள்வி உண்டானால் ஸ்வாமி தேசிகன் சாதித்துள்ள பல படிகளில் முதல் ஒன்றிரண்டைப் பற்றி முதலில் தெரிந்து கொள்வோம்.

முதன்முதலில் அடிப்படையான விஷயம் நான் யார்? என்ற கேள்விக்கான விடையை அறிய முயற்சிப்போம்.

*''நாயம் தேவோ ந மர்த்யோவா ந திர்யக்*
*ஸ்தாவரோபி வா|*
*ஞாநாநந்த மயஸ்த்வாத்மா சேஷோ ஹி*
*பரமாத்மந:||''*

என்று விஷ்ணு புராணம் கூறுகிறது. ஜீவாத்மாவின் உண்மை நிலையைக் காட்டிக் கொடுக்கிறது. அதாவது ஆத்மா தேவனோ, மனிதனோ, மிருகமோ, ஸ்தாவர ஜங்கமமோ எதுவுமே இல்லை. ஞானமும் ஆனந்தமுமுடைய இந்த ஆத்மாவானது பரமாத்மாவிற்கு அடிமைப்பட்டது என்பதை மேற்கூறிய சுலோகம் தெளிவாக கூறுகிறது. இதையே *''தாஸ பூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: ''* என்று ஆதிசங்கரரும் காட்டுகிறார். ஆத்மாவும் உடலும் ஒன்றல்ல. வேறு வேறானது என்று புரிந்து கொள்ள வேண்டும். இப்படி தேஹம் வேறு ஆத்மா வேறு என்று நாம் அறிந்து கொள்வதே இப்பிறவிக் கடலை கடக்க முதல் படியாகும்.

ஒவ்வொருவரும் நான் நான் என்று நினைக்கிறோமே அந்த ''நான்'' என்பதே ஆத்மா. ஒவ்வொரு ஆத்மாவும் அதனதன் முன் செய்த கர்ம வினைக்குத் தக்கவாறு ஒரு உடலைத் தாங்கி இந்த பூமியை அடைகிறது. அனைத்து ஆத்மாக்களும் அணு அளவே. அழிவில்லாத நித்ய வஸ்து. ஞானமுடையது. ஆனந்த முடையது. ஆத்மாக்களில் பேதம் என்பதே கிடையாது.

உடலுடன் கூடிய ஆத்மாவையே நாம் தேவன், மனிதன், யானை, பூனை என்று பேதத்துடன் பார்க்கிறோம். ''நான்'' என்று நம் ஆத்மாவை சொல்லும் நாம் நம் உடலைப் பற்றி பேசும் பொழுது நான் தலை, நான் கை, நான் கால் என்று கூறாமல் என் தலை, என் கை, என் கால் என்று கூறுகிறோமே! ஏன்? என்று சற்று யோசிப் போமானால் ''நான்'' என்பது ஆத்மா என்பதும், அந்த ஆத்மாவை சேர்ந்த வஸ்துக்களை என்னுடையது என்று நாம்

குறிப்பிடுவதும் நமக்குத் தெளிவாகிறது. ஆக, என்னைச் சேர்ந்த என் உடலும், நான் எனப்படும் ஆத்மாவும் வெவ்வேறானது என்றதாயிற்று. தேஹாத்மா பிமானம் தொலைந்தது. விவேக புத்தி உண்டாயிற்று.

இப்பொழுது ஆத்ம ஸ்வரூபத்தை உணர்ந்தவர்கள் ஆகிறோம். ஆத்மா தேவனோ, மனிதனோ, திர்யக்கோ, ஸ்தாவரமோ, ஜங்கமமோ எதுவுமில்லை. இவையெல்லாம் சரீரத்தைக் கொண்டே வேறுபாடு என்பது புரிந்தது. சரி ஆத்மா ஞானானந்தமயம் எனப்படுகிறதே! ஆனால் நாமோ எப்பொழுதும் சந்தோஷமாக இல்லாமல் மாறி மாறி சுகதுக்கங்களில் சிக்கி தவிக்கிறோமே என்றால், நாம் நம்முடைய இயற்கையான ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்தவுடன் **''பழுதே பல பகலும் போயினவென்று அஞ்சி அழுதேன்''** என்று ஆழ்வார் நிர்வேதம் கொள்வதுபோல நாமும் பகவானே! உனக்கு அடிமைப்பட்டிருப்பதே அடியேனுடைய இயற்கை தன்மை என்று உணராமல், உண்டியே உடையே என்று அலைந்து திரிந்து இத்தேகத்தைக் காப்பதிலேயே கழித்து விட்டேனே என்று வருந்தி, இந்த பிறவிக் கடலைக் கடந்து உன்னை வந்தடையும் வழியைக் காட்டிக் கொடு என்று பிரார்த்திக்க வேண்டும்.

**''தாயே தந்தை என்றும் தாரமே கிளை மக்களென்றும்**
**நோயே பட்டொழிந்தேன்''**

என்று மற்றொரு ஆழ்வாரும் தேக ஸம்பந்தமுடைய பந்துக்களையே சாச்வதமாக நினைத்து வீணாகி விட்டேனே என்று நிர்வேதம் கொள்கிறார்.

**''தெரியேன் பாலகனாய்ப் பல தீமைகள் செய்து விட்டேன்**
**பெரியேன் ஆயின பின் பிறர்க்கே உழைத் தேழையானேன்''**

என்று சிறிய வயதில் பல தீயச் செயல்களில் ஈடுபட்டு, பெரியவன் ஆன பிறகும் ஆத்ம ஸ்வரூபத்தை உணராமல் பிறர்க்கே உழைத்து அதாவது சரீர போஷணத்திலேயே காலத்தைப் போக்கினேனே என்று வருந்துகிறார். இப்படி ஜீவ ஸ்வரூபத்தின் உண்மை நிலையை உணர்ந்தவர் வருந்தி,

**''ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்**
**உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து**
**நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்**
**நாராயணா என்னும் நாமம்''**

பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயண நாமமே நாம் உய்யும் வழியைக் காட்டிக் கொடுக்கக் கூடியது என்பதை அறிந்தேன் என்கிறார் ஆழ்வார்.

**''வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும்**
**பூசித்தும் போக்கினேன் போது''**

என்றிருக்க வேண்டிய அடியேன்.

**''... பெருந்துயர் இடும்பையில் பிறந்து**
**கூடினேன் கூடி இளையவர் தம்மொடு**
**அவர் தரும் கலவியே கருதி''**

என்றபடி வ்யர்த்தமாக கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்னும்படி பலகாலும் கழித்தேனே என நிர்வேதம் கொள்கிறார். இப்படியெல்லாம் பலபடியாக வருத்தமடைந்து, பின்பு பகவான் இதை செய், இதை செய்யாதே என்று விதித்துள்ள சாஸ்திரங்களை அறிந்து கொள்ளும் ஆசையுடன் ஒரு ஸதாசார்யனை அடைய முயற்சிப்போம்.

நாம் பகவத் கடாக்ஷத்தால் ஆச்ரயிக்கும் அந்த ஸதாசார்யர் நம்மிடம் கருணை கொண்டு நம்முடைய தகுதியை ஆராய்ந்து அதற்கேற்றவாறு நமக்கு விஷயங்களை உபதேசித்து நமக்கு பகவானிடத்தில் பக்தியை உண்டாக்கி, நமக்கு ஸ்வஸ்வரூபத்தை தெளிவாகக் காட்டிக் கொடுப்பார். மேலும், பரஸ்வரூபத்தையும் காட்டிக் கொடுத்து நமக்கு விவேக புத்தி (பகுத்தறியும் புத்தி) பிறந்தவாறே அத்யந்த விஷயமான பஞ்ச ஸம்ஸ்காரத்தின் தாத்பர்யத்தை நாம் தெளிய உபதேசித்து நம்மை ஸமாச்ரயணத்திற்கு ஆட்படுத்தி வைணவராக்கி, பரஸமர்ப்பணத்தில் ஆசையை ஊட்டுகிறார். சரணாகதி செய்து கொண்டு அந்தமில் பேரின்பமான வீடு பேற்றை அடைந்து அளவிலா பேரின்ப வாழ்வு பெறுவதற்கான உபாயத்தைக் காட்டிக் கொடுக்கிறார்.

திருமந்திரத்திலே பிறந்து (வித்யா ஜன்மம் அடைந்து) த்வய மந்திரத்திலே வளர்ந்து (ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள் என்ற ஜ்ஞானத்தை ஊட்டி, சரணாகதியில் நம்மை மூட்டுவிக்கும்) ஒரு நற்குருவை அடி பணிந்து உய்வு பெறுவோமாக!


**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.**

**பக்தர்களுக்கு விண்ணப்பம்**

கல்யாண கட்டாவில் பக்தர்கள் தலை முடி காணிக்கை செலுத்தும்பொழுது முடி இறக்குபவர்கள் பணம் கேட்டால் அவர்களின் விவரங்களை டோல் ப்ரீ எண் : 1800-425-4141 க்கு தெரிவியுங்கள்.

– செயலாட்சித் தலைவர்



# புத்தக மதிப்புரை

ஆழ்வார்கள் ஸ்ரீமந்நாராயணனை அனுபவித்து உளம் மகிழ்ந்து போற்றிப் பாடியவை தோத்திரங்கள். அவர்களை அடிபணிந்து அவர்கள் பிரபந்தங்கட்கு உரை வளம் கண்டு, சாத்திரநூல்களை அருளிச் செய்தவர்கள் ஆசாரியர்கள். சாத்திரமும் தோத்திரமும் இணைந்தே ஒரு சமயத்தின் பெருமையை நிலைநாட்டுகின்றன.

இராமாயணமும் மகாபாரதமும் பாரத நாட்டின் இதிகாசங்கள். இராமனின் பெருமையும் கண்ணனின் கருணையும் எடுத்தியம்புவன. இவை வைணவத்தின் அரண்களாக விளங்குகின்றன. அச்சுத பானுவாகிய கண்ணன் அர்ச்சுனனுக்குச் சாரதியாய் குருக்ஷேத்ர யுத்த களத்தில் அருளிய கீதோபதேசம் மகோன்னதமானது. மகான் இராமாநுசர் இதன் பொருளை கீதாபாஷ்யமாக அருளிச் செய்தார்.இராமாநுசரை அடிபணிந்த ஆசாரியர்கள் பலரும் பகவத்கீதையின் ஆழ்பொருளுணர்ந்து போற்றினார்கள்.

ஆசாரியமரபில் வந்த வியாக்யான சக்ரவர்த்தி பெரியவாச்சான்பிள்ளையின் சீடரான வாதிகேசரி அழகிய மணவாளச்சீயர் அருளிச் செய்த “பகவத் கீதை வெண்பா” என்ற மிகச் சிறந்த தமிழ் வெண்பாவினாலான நூல் கர்ம, ஞான, பக்தி முதலான பதினென் யோகங்களையும் தெளிவாக விளக்குவனவாக அமைந்துள்ளமை அறியற்பாலது.

இவ்வெண்பாக்களின் தெளிவான பொருள்களையும், நயங்களையும், உள்ளார்ந்த பொருட் சிறப்பினையும், நல்ல தமிழ் நடையுடனும், சொல்லழகுடனும், பொருளாழத்துடனும் தெள்ளத் தெளிவாகத் தெளிவுரையாகப் பேராசிரியர் முனைவர் மாடபூசி மா. வரதராஜன் ஸ்வாமி அவர்கள் மிகச் சிறப்பாக எழுதி வெளியீடு செய்துள்ளார்கள். வைணவ உலகம் போற்றி கொண்டாடும் என்பதில் ஐயமில்லை.

அழகிய மணவாள சீயர் “பகவத் கீதை வெண்பா” என்ற நூலின் வாயிலாக வெண்பா யாப்பில் அருச்சுன சோகயோகம், சாங்க்ய யோகம், கர்ம யோகம், ஞான யோகம், சன்யாச யோகம், அத்யாத்ம யோகம், விஞ்ஞான யோகம், அப்யாச யோகம், ராஜ வித்யா ராஜ குஹ்ய யோகம், விபூதி யோகம், விஸ்வரூப தரிசன யோகம், பக்தி யோகம், க்ஷேத்ர க்ஷேத்ரஞ்ஞ விபாக யோகம் முக்குண விபாக யோகம், புருஷோத்தம யோகம், தெய்வாசுர சம்பத் விபாவ யோகம், சிரத்தாத்ரய விபாவயோகம், மோஹோபதேச யோகம் என்ற பதினெட்டு யோகங்களின் சிறப்பைப் பல வெண்பாக்களின் வாயிலாக அரும்பொருளை உணர்த்தியுள்ளார். இந்நூலாசிரியரின் பணிவும் எளிமையும், ஆசார்ய பக்தியையும் பாயிரத்தின் வாயிலாக உணரலாம். தெளிவுரை மூலமாக அதன் பொருளையும் சிறப்பையும் உணரும் வண்ணம் மாடபூசி மா. வரதராஜன் சுவாமி அவர்கள் தன் தமிழ் புலமையாலும் சம்ப்ரதாய உணர்வாலும் உள்ளங்கை நெல்லிக்கனி போல படிப்போர்க்குப் பரவசம் கொள்ளும்படி உரை வகுத்துள்ளமை படித்து இன்புறத்தக்கது.

இராமாநுஜ வள்ளலின் ஸ்ரீபாஷ்யத்தின் அடிச்சுவட்டில் இப்பகவத் கீதை வெண்பாவும், தெளிவுரையும் அமைந்த அழகினைப் படித்து பயன் பெறலாம். ஆன்மாவை அனுபவிக்கும் தன்மையை கீதையின் முதல் ஆறு அத்யாயங்கள் உணர்த்துகின்றன. கரும யோகத்தோடு கூடிய தெளிந்த ஞானயோகத்தால் உண்டாகும் பக்தி வெள்ளம் பெருகி வரும் பக்தி யோகத்தை நடுவிலுள்ள ஆறு அத்யாயங்கள் இயம்புகின்றன. சித்து, அசித்து, ஈச்வரன் ஆகியவற்றின் பெருமையை இறுதி ஆறு அத்யாயங்கள் உணர்த்துகின்றன. சிற்சில இடங்களில் ஆளவந்தாரின் கீதார்த்தசங்கிரம் மிளிர்கின்ற சிறப்பையும் காணலாகும்.

பகவத் கீதை வெண்பாவும் அதன் தெளிவுரையும் இக்காலத்து அன்பர்களுக்கு சமயச் சிறப்பினையும் வைணவத்தின் பெருமை யினையும், வாழ்வியல் உண்மைக ளையும், பிறவியில்லாப் பெருவாழ்வு பெற மேற்கொள்ள வேண்டிய வழி முறைகளையும் அமைதியையும் போதிப்பன வாய் அமைந்துள்ளன. அஞ்ஞான இருளகன்று மெய்ஞ்ஞான வாழ்வு பெற தமிழ் வைணவ பண்பாட்டினை உளம் கொண்டோரும் பாமரரும் படித்தின்புறத்தக்கது.

*- பேராசிரியர். சி.நம்மாழ்வார், சென்னை.*

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பகவத் கீதை வெண்பா தெளிவுரை |
| ஆசிரியர் | : | டாக்டர் மா. வரதராஜன் |
| விலை | : | ரூ.250/– |
| கிடைக்குமிடம் | : | டாக்டர். மா. வரதராஜன் எம்.ஏ., எம்.ஏ. பி.எச்.டி, பேராசிரியர் (ஓய்வு)<br>ஸ்ரீவரதராஜா பிளாட்,<br>எண் : 27/3, தெற்கு மாட வீதி,<br>திருவல்லிக்கேணி,<br>சென்னை – 600 005. |

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.

## பேயாழ்வார் :

பேயாழ்வார் ஐப்பசி மாதம் சதய நக்ஷத்திரத்தில் சென்னையிலுள்ள மா மயிலையில் அவதரித்தவர். இவர் அருளிய பிரபந்தம் மூன்றாம் திருவந்தாதி.

*திருக்கண்டேன் என நூறும் செப்பினான் வாழியே*
*சிறந்த ஐப்பசியில் சதயம் செனித்த வள்ளல் வாழியே*
*மருக்கமழும் மயிலைநகர் வாழவந்தோன் வாழியே*
*மலர்க்கரிய நெய்தல்தனில் வந்துதித்தான் வாழியே*
*நெருக்கிடவே இடைகழியில் நின்றசெல்வன் வாழியே*
*நேமிசங்கன் வடிவழகை நெஞ்சில் வைப்போன் வாழியே*
*பெருக்கமுடன் திருமழிசைப்பிரான் தொழுவோன் வாழியே*
*பேயாழ்வார் தாளிணை இப்பெருநிலத்தில் வாழியே.*

(பதவுரை) திருக்கண்டேன் என நூறும் – திருக்கண்டேன் என்று சிறப்பாகத் தொடங்கிய நூறு பாட்டும்; செப்பினான் – அருளினான்; சிறந்த ஐப்பசியில் – பெருமை மிக்க ஐப்பசி மாதத்தில், சதயம் – சதயம் நக்ஷத்ரத்தில்; செனித்த – உதித்த, வள்ளல் – வண்மையுடையவர்; மருக்கமழும் – மணம் வீசும், மயிலை நகர் – மைலாப்பூர் என்ற சிறந்ததான நகரம், வாழ வந்தோன் – வாழும்படி செய்தவன்; மலர்க்கரிய – மலருவதற்கு அருமையான, நெய்தல்தனில் – கடலும் கடலைச் சார்ந்த இடத்தில், வந்து உதித்தான்;

நெருங்கிடவே – நெருக்கமான இடமான, இடைகழியில் – வாசலுக்கும் உட்புறத்துக்கும் நடுவிலுள்ள இடைக் கட்டில், நின்ற செல்வன் – நின்று திருமாலைக் காணும் கைங்கர்யமாகிய செல்வத்தைப் பெற்ற பேயாழ்வார்; நேமி சங்கன் – சக்கரமும் சங்கும் ஏந்திய திருமால், வடிவழகை – பொன்மேனி எனப்படும் அழகிய திருமேனியை, நெஞ்சில் வைப்போன் – தம் மனக்கண்ணாலே கண்டு அனுபவித்தவன்; பெருக்கமுடன் – நிறைவுடன், திருமழிசைப் பிரான் – திருமழிசையாழ்வாரால், தொழுவோன் – தொழப்பட்டவரான பேயாழ்வார்; பேயாழ்வார் தாளிணை – இரு திருவடிகள், இப்பெருநிலத்தில் – இந்த பெரிய உலகில் வாழியே – வாழ வேண்டும்.

(விசேஷ உரை) பொய்கையார் பூதத்தார் ஆகிய இருவரும் ஏற்றிய இரண்டு விளக்குகளினாலும் *"மன்னிய பேரிருள் மாண்ட பின் கோவலுள் மா மலராள் தன்னொடு மாயனை"* மனக்கண்ணாலே கண்ட தமிழ்த்தலைவனான பேயாழ்வார், "திருக்கண்டேன்" என்று தொடங்கி சிறப்பான நூறு பாடல்களை அருளினார். "திருக்கண்டேன்" – தர்மம் தன்னைக் கண்டேன் என்று பெரிய வாச்சான்பிள்ளை உரை. அதாவது பரமபுருஷனுக்கு ஸ்வரூபத்தை நிரூபிக்குமவளாய், அறிவுள் பொருள், அறிவில் பொருள் ஈச்வரன் ஆகிய முப்பொருளுக்கும் தன்னைப்பற்றி நின்று ஸத்தையும் பெருமையும் பெற வேண்டியிருக்குமவளாய், அவனுடைய செல்வங்களில் தலையான செல்வமாய் இருப்பவளான பெரிய பிராட்டியாரைச் சொன்னபடி.



ஐப்பசிக்குச் சிறப்பாவது முதலாழ்வார்கள் மூவரும் அடுத்தடுத்த நக்ஷத்ரத்தில் அவதரித்தமையாகும். *''துலா சதபிஷக்ஜாதம் மயூரபுரி கைரவாத்''* என்று சொல்லுகிற படியே ஐப்பசி மாதத்தில் சதய நக்ஷத்ரத்தில் திருமயிலை யில் அவதரித்தவர் பேயாழ்வாராவர். "திருக்கண்டேன்" என்று முதல் அடையாளமான பெரிய பிராட்டியாரைத் "திரு" என்று சொல்லி, எம்பெருமானை ஸ்ரீமான் என்று வருணித்தார். இப்படி எம்பெருமானுடைய ஸ்வரூப விஷய ஞானத்தை ஸம்ஸாரிகளுக்குப் பிறப்பித்து இருளைப் போக்கினவராகையாலே வள்ளலானார்.

மணம் கமழும் மயிலைநகரில் அவதரித்தவர் பேயாழ்வார். *''மாடமாமயிலை''* என்றும் *''தேனமர் சோலை மாடமா மயிலை''* என்றும் திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் அருளியபடியே தலைநகராகவும், வண்டுகள் அமர்ந்த சோலையையும் மாடங்களையு முடைய மயிலாப்பூர் என்றும் பாண்டிய அரசனின் வம் சத்தவனாய் தொண்டைமான் சக்கரவர்த்தி கட்டிய அழ கான மயிலை என்பர். இதனால் மயிலைநகர் மணமுடை யதாயிற்று. மேலும் பெரிய திருமொழியில், *''மன்னு... நன் மயிலை''*.... என்ற பாசுரத்தொடரில், *''நன் மயிலை''* என்பதற்கு சொல்லிச் சொல்லாத நன்மைகளுமெல்லாம் உண்டாம்படியாயிற்றுத் தொண்டைமான் சக்கரவர்த்தி ஏற்றிற்று என்று மாமயிலையின் பெருமையை உரைப்பர் பெரியவாச்சான்பிள்ளை. இத்தகைய மயிலையில் *''ராஜந் புரவரே தஸ்மின் ஆக்நேயாம் ஆஷ்ரமாத் ப்ரு கோஹோ! வாபீ ப்ரஸண்ணலீலா ஹம்ஸ காரண்ட வைர் யுதா॥''* என்று பிரம்மாண்ட புராணத்தில் கூறியபடியே சிறந்த மயூரபுரி பட்டணத்தில் ப்ருகு முனிவர் ஆச்ரமத்தின் மாதவப் பெருமாள் கோயிலின் தென்கிழக்கு மூலையில் தெளிந்த நீரையும் அன்னம், காரண்டம் போன்ற பறவை கள் நிறைந்த சிறந்த கிணற்றில் அவதரித்தவர் பேயாழ் வார் என்றும் *''ப்ரணாம ப்ராந்த யோகீ மாதவம் பக்த வத்ஸலம்''* என்கிறபடியே பக்தர்களிடம் வாத்ஸல்யத் தையுடைய மாதவப் பெருமாளை ஆழ்வார் பூஜித்து வந்தார் என்றதும் காண்க.

கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தலாகும். மலருவதற்கு அருமையான இந்த நெய்தல் நிலத்தில் *''தந்மாய ஏவாரவிரபூத் விபச்சித் ப்ராசேதஸர்க்ஷேத மயூர புர்யாம்! மஹாபிதாநோ மணிகைரவாந்தாத் ஸ்ரீநந்தகாத்மா ஸ்ரீதபக்திரூபா''* என்று திவ்யசூரி சரிதத்தில் கூறியபடியே ஐப்பசி மாதம் சதய நக்ஷத்திரத்தில் மயிலை நகரில் செவ்வல்லிப் பூவிலிருந்து நந்தகத்தின் அம்சமாக அவதரித்தவர் பேயாழ்வார் ஆவார்.

பொய்கையாரும் பூதத்தாரும் திருக்கோவலூரில் ஒரு நாள் இரவு ம்ருகண்டு ரிஷியின் வீட்டில் ஓர் இடை கழியில் (–வாசலுக்கும் உட்புறத்துக்கும் நடுவிலுள்ள இடம்) சேர்ந்திருக்க, பேயாழ்வார் வந்து தங்க இடம் கேட்ட போது, *''இருவர் இருக்கையில் மூவர் நிற்கலாம்''* என்று கூறியதால் அவர்களோடு பேயாழ்வாரும் நின் றார். எம்பெருமானுடைய குணங்களை ஒருவர்க்கொரு வர் சொல்லியும் கேட்டும் மகிழ்ந்தபோது இவர்களோடு நெருக்கத்தை விரும்பிய எம்பெருமான் இவர்களை நெருக்கினான். "அவனை யார்" என்று அறிய முதலிருவர் ஏற்றிய விளக்கில் திருமாலைக்கண்ட பேயாழ்வார் "திருக் கண்டேன்" என்று பாடத் தொடங்கினார். இப்படி வாசிக கைங்கர்யம் நின்று கொண்டே செய்ததால் நின்ற செல்வனானார். செல்வமாவது வாசிக கைங்கர்யம்.

திருவோடு கூடிய எம்பெருமானைக் கண்ட உடனே அவனது பொன்மேனியைக் கண்டார். சூரியன் போன்ற ஒளியையும் கண்டார். உடனே திருவாழி திருச்சங்கைக் காட்டினான். *''செருக்கிளரும் திருவாழி கண்டேன் புரி சங்கம் கைக்கண்டேன்''* என்கிறார். அதாவது தகாத இடத் தில் பயம் கொண்டு எப்போதும் போருக்குக்கிளர்ந்து நிற்பவனாய், நல்லோர் தீயோர் என்ற வேறுபாடின்றி கண்டார்மேலே சீறி விழுமவனாய், ஆழி வண்ணனான அவன் நிறத்தையும் சூரியன் அணி நிறமாக்கும்படி பகைத்தொடையாம்படி இருக்கும் பொன் போன்ற திருவாழி ஆழ்வானை ஆழ்வார் கண்டார் என்று அநு பவிப்பார் அப்பிள்ளை. மேலும் திருவாழியைப்போலே சீறிவிடுகையன்றிக்கே எங்கே எங்கே என்று சுற்றும் முற்றும் சீறிப்பார்க்கிற ஸ்ரீபாஞ்சஜந்யத்தை அழகிய திருக்கையில் கண்டதாகக் கூறுவார். இவ்வநுபவம் ஆழ் வார் நெஞ்சில் தேக்கியபடி என்கை. இதன் தொடர்ச் சியாக, இவர் அருளிய மூன்றாம் திருவந்தாதியில் *''ஆராழி கண்டார்க்கு அழகு''* (5) என்றும், *''ஆழி யார்க்கு''* என்றும், *''வலம்புரிந்த வான் சங்கம்''* (10) என்றும், *தேசு டைய சக்கரத்தான் சங்கினான்''* (21)என்றும், *''பொருந்தும் சுடராழி''* (24), *''கையகனலாழி கார்க்கடல் வாய் வெண் சங்கம்''* (36), *ஆழிவலவன்* (78), *''வென்று இலங்கும் ஆர் படுவான் நேமி''* (80) என்றும், *சக்கரத்தான்''* (99)என்றும், *''சார்வு நமக்கு என்னும் சக்கரத்தான்''* (100) என்றும் பலகால் நேமிசங்களை அநுபவிப்பது காணலாம்.

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**

பக்தர்கள் வசதிக்காக திருமலையில் பலவிதமான இடங்களில் சிறிய கல்யாண கட்டாவில் முடி காணிக்கை, கத்திரி கொடுக்க ரூ.10/- வசூல் செய்யப்பட்டு வந்தது. 01-05-2015 முதல் அந்த கட்டணம் நீக்கப்பட்டதால், இல வசமாக தலைமுடி காணிக்கையை செலுத்தலாம். அத னால் பக்தர்கள் முடி காணிக்கை/கத்திரி கொடுப்பதற்கு முதன்மை கல்யாண கட்டாவிலும், சிறிய கல்யாண கட்டா விலும் பணம் கொடுக்க வேண்டியதில்லை. பக்தர்கள் இதனை கவனத்தில் கொள்ளவும்.

-செயலாட்சித்தலைவர்

திருமழிசை என்கிற திவ்ய தேசத் துக்குத் தலைவராய் அதுவே அடையா ளமாக உடையவரானவர் திருமழிசைப் பிரான் ஆவார். சிவவாக்யராயிருந்த திருமழிசைப்பிரானைப் பேயாழ்வார் உபதேசத்தாலே திருத்தினார். அவருக்கு விஷ்ணு தான் உயர்ந்த பரம்பொருள் என்று பரதத்துவ நிர்ணயம் செய்தார். அவரும் உடனே பேயாழ்வாரின் சீடரா னார். பேயாழ்வாரும் விஷ்வக்சேனர் அருளை முன்னிட்டு அவருக்கு பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்தார். அஷ் டாங்க யோகத்தையும் நன்கு உபதேசித் தார். அறிவாளியாய் மிகப் பெரியவரான பேயாழ்வார் *''பக்திஸாரேண ஸுமஹாந் மஹதாஹ்வய ஸுபூஜித!''* என்கிறபடியே பக்திஸாரரான திருமழிசைப்பிரானாலே மிகவும் ஆராதிக்கப்பட்டார் என்று பிரபந் நாம்ருதம் மூலம் அறியலாம். இதுபற் றியே அப்பிள்ளையும் வாழ்த்து பாடின படி வரவரமுனி சதகத்தில் *''மஹதாஹ்வய பாதபத்மயோ: மஹத்துத்தம் ஸிதயோ''* (43) என்கிறபடியே பேயாழ்வாருடைய திரு வடித் தாமரைகள் திருமழிசையாழ்வா ரால் மாமுனிகள் தலைக்கு அலங்கார மாக அணியப்பட்டது என்று உரைப்பது காண்க.

நெஞ்சுக்கு இனிதான திருமகள் கேள்வனின் திருவடித்தாமரை அன்பு மயக்கத்தாலே ப்ராந்தயோகி – பேயாழ்வார் என்று அழைக்கப் பட்டார். எம்பெருமான் ஒருவனையே அனுபவிப்பதில் ஊற்றமுடைய வராய், உலக நடையில் கண் வைக்காமல் *''யானுமோர் பேயன்''* (பெருமா. திரு.3.8) என்னும்படி பெயர் கூறுவதே அடையாளமாக உடையவர் பேயாழ்வார் என்பர் பிள்ளைலோகம் சீயர். மேலும், பட்டர் தனியனில் இவ்வாழ்வாரை "மஹதாஹ்வயர்" என்று அழைத்ததற்கு ஏற்ப, பிள்ளை லோகம் சீயர், "மஹதாஹ்வயராகிறார்" – மாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி என்னும்படியான தேசத்துக்கு ஸமமாயிருப்பதான மாடமாமயிலையில் மாவல்லிக்கேணியில் செவ்வல்லிப்பூவிலே அவதரித்து, *''யானுமோர் பேயன்''* என்றும் *''பித்தர் என்றே பிறர்கூற''* என் றும் பேசும்படியான பேயார் என்பர். மூன்றாம் திருவந்தாதிக்குத் தனியன் அமைத்த குருகை காவலப்பன் ஆழ்வாரின் தாளிணையை "சீரான் கழலே" என்கிறார். "திருக்கண்டேன்" என்று தொடங்கித் திருவுடைய தேவனை அனுபவித்த திருவுடைய செல்வரான பேயாழ்வாருடைய திருப்பாதங்களையே என்றபடி. அமுதனாரும் "தமிழ்த்தலைவன் பொன்னடி" என்பார். பொன்னடியாவது செல்வமாயிருக்கும் அடி. ப்ரபந்ந ஜனங்களெல்லாம் விரும்பும் திருவடி என்றவாறு. அப்படிப்பட்ட ஆழ்வார் திருவடிகளை வாழ்த்தி உய்வு பெறுவோமாக.

வாழித்திருநாமம் வளரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 29க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | ம | லை | ய | ப் | ப | ஸ் | வா | மி | ன் | 3 வா |
| 2 அ | ல | ர் | மே | ல் | 20 ம | ங் | கை | த் | தா | யா | ர் |
| ரு | 9 கு | | | சி | ண | 13 தா | பா | 8 கு | 14 ச | ம் | ல |
| ங் | ந் | | ல் | ச் | வா | வ | ப் | ல | க் | ய | 12 மூ |
| கா | தி | க் | யி | ரு | ள | ட | ட | சே | க | ஸ் | 4 ப |
| ட் | தே | ட | கோ | 15 தி | | ம் | க | க | ர | ஹ | வ |
| சி | வி | மா | ன் | | | 18 ம | னி | ர | ஸ் | ர | ள |
| ய | | ணி | ண | | | னோ | வு | | நா | ச | வ |
| 5 க | ர் | 10 ம | ண் | யே | வா | தி | 7 தே | | ந | த | ண் |
| ம் | | | 11 அ | க | ண் | ட | தீ | ப | ம் | பா | ண |
| 6 மு | மூ | க்ஷ | ப் | ப | டி | ம் | மி | ச | 19 த | ஷ் | ர் |
| டி | ப | ப் | க | ட | ண் | 17 ம | ன் | ம | னு | 16 அ | |



# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

## தர்ம பாதுகாப்பு

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி.

கலியுகம், கலியுகமென்றாலே கலகயுகம். கவலையுகம், வஞ்சனை யுகம், சூதுவாது நிறைந்த யுகம், வாழ்வதற்கு மிகவும் கடினமான யுகம். இத்தனை துர்குணங்கள் நிறைந்த இக் கலியுகத்தில் எப்படி அமைதி கிட்டும்? கலியுகம் மக்கள் எல்லோரையும் பாவங் கள் செய்ய தூண்டுகின்றது; அதன் மூல மாக அனைவருக்கும் துன்பத்தை உண் டாக்குகின்றது. இவ்வாறான இக்கலி புருஷன் எவ்வாறு பிரேவேசித்தான். எப்படி இந்த ராஜ்ஜியங்களை ஆக்கிர மித்துக் கொண்டான், எவ்விதமாக அவ னுடைய ஆதிக்கத்தில் இருந்து நம்மை நாம் காப்பாற்றிக் கொள்வது என்பதை அறியச் செய்வதே இக்கதையின் நோக் கம். இங்கு நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால் கலியுகம் இப்பொழுது ஆரம்ப கட்டத்தி லேயே உள்ளது என்பதுதான். எனவே தான் மந்திரம் சொல்லும்போது, *''கலி யுகே ப்ரதமபாதே''* என்று கூறுவதை அறிய முடிகிறது. கலியுக ஆரம்பத்தி லேயே வாழ்க்கை இவ்வளவு துன்பமு டையதாக உள்ளது என்றால் கலியுகம் முதிர முதிர இன்னும் எவ்வளவு துஷ்ட பிரபாவங்கள் மக்களைப் பிடித்து ஆட்டப் போகின்றதோ என்று நினைக்கும்போது நெஞ்சம் குமுறுகிறது.

நைமிசாரண்யத்தில் சௌனகர் முதலான முனிவர்கள் கலி பிரபாவத்தை தடுக்கும் முயற்சியாக ஆயிரம் ஆண்டுகள் தொடர்ந்து செய்யத்தக்க வேள்வி ஒன்றை தொடங்கினர். இந்த வேள்வியின் நோக்கம் கலிபுருஷனின் ஆதிக்கத்தைக் குறைப்பது ஒன்றே ஆகும்.

ஆனால், அவர்களுடைய நோக்கம் நினைத்தபடி நிறைவே றாததைக் கண்ட பின்பு அவர்கள் பாகவதத்தைக் கேட்பதற்குத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டார்கள். பாகவதம் *''கலி திமிர பாஸ்கரமு''* என்றால், கலியுகம் என்னும் இருளை நீக்கும் பகலவன் போன்றவன் என்று சொல்லப்பட்டுள்ளது. ஸ்ரீகிருஷ்ணர் தர்ம ஞானாதிகளோடு வைகுண்டம் சென்றவுடனே பாகவதம் என் னும் சூரியன் உதயமானான். கலியுகம் மனிதர்களிடத்தில் உள்ள சத்வ குணத்தை அழித்து அவர்களை அழிவுப் பாதைக்கு கொண்டு செல்கின்றது. ஆகையால் அவர்களிடத்தில் உள்ள சத்வ குணத்தை அப்படியே அவர்களிடம் இருக்கச் செய்யும் பொருட்டே பாகவத புராணம் தோன்றியது. கலியுக ப்ரபாவத்தி லிருந்து மக்களைக் காப்பது பாகவதம் ஒன்றேயாம். ஆகவேதான் பாகவதத்தை இயற்றிய ஸ்ரீவியாச தேவர் மனஅமைதி அடைந் தார்.

தேவாதி தேவனான ஸ்ரீகிருஷ்ணர் பூலோகத்தில் லீலைகள் பலவும் பூர்த்தி செய்து கொண்டு வைகுண்டத்திற்கு திரும்பி சென்ற பின்பு அவரிடத்தில் மிகவும் பக்தி கொண்டவர்களான

பாண்டவர்கள் கூட இறைவனின் பிரிவுத் துயரத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் மஹாபிரஸ்தானம் செய்தார்கள். அதாவது அவர்கள் ஒவ்வொருவராக இறைவனிடம் சென்றடைந்தனர். அவ்வாறு சென்ற டைவதற்கு முன்பாக அவர்கள் தம் கடமையாக பரீட்சித்து மஹாராஜாவை பூமண்டலங்கள் அனைத் திற்கும் சக்கரவர்த்தியாக நியமித்தார்கள். அபிமன்யு வின் மகனான பரீட்சித்து உத்தரனின் மகளை திருமணம் செய்து கொண்டு ஜனமேஜயன் முதலான நான்கு மகன்களைப் பெற்றார். பரீட்சித்து, மஹா சக்கரவர்த்தி ஆவான் என்றும், எல்லோராலும் மிக வும் புகழப்படுவான் என்றும் அவன் பிறந்தபோதே ஜோதிடர்கள் கூறியிருந்தனர். ராஜ்ஜியாதிகாரத்தை ஏற்றுக் கொண்ட உடனே பரீட்சித்து தன் குருவான க்ருபாசார்யரின் வழிகாட்டுதலின்படி மூன்று அஸ்வ மேத யாகங்களைச் செய்தான். யாகத்தை சிறப்பாக செய்தமைக்காக அவர்களுக்கு உயர்ந்த பரிசுப் பொருட்களைக் கொடுத்தார். மிகவும் விமரிசை யாகவும் வைபோகமாகவும் நடந்தேறிய யாகத்தில் கலந்து கொள்வதற்கு வந்த தேவர்களை சாதாரண மக்களும் காணும் வாய்ப்புப் பெற்றனர். தேவர்களின் தரிசனம் மக்களுக்கு மிகவும் ஆச்சரியத்தை உண் டாக்கியது. ஆனால் சில காலத்திற்கு பின்பு கலி புருஷன் தன் பிரபாவத்தைக் காட்டத் தொடங்கினான். தேவாதி தேவனான ஸ்ரீகிருஷ்ணர் இந்த பூலோகத் தில் உள்ள வரையில் கலிபுருஷன் தன் ஆதிக்கத் தைக் காட்ட முடியாமல் போனான். எப்பொழுது ஸ்ரீகிருஷ்ணர் வைகுண்டத்திற்கு புறப்பட்டு சென் றாரோ அப்பொழுதிலிருந்தே கலிபுருஷன் தன் ஆதிக் கத்தைக் காட்டத் தொடங்கினான். பரீட்சித்து இதை நன்கு கவனித்தார். இந்த விஷயத்தை பாகவதத்தில் *"கலிம் ப்ரவிஷ்டம் நிஜசக்ரவர்த்தே"* என்று சொல்லப் பட்டுள்ளது. கலியின் ஆதிக்கம் தொடங்கியது என்ற உண்மையை நாம் எப்படி தெரிந்துக் கொள்வது? ஆண் பெண் இருவரிடத்தில் உள்ள தகாத உறவும், புலாலைப் புசித்தலும், மதியை மயக்கும் மதுவை உட்கொள்வதும், சூது விளையாடுவதும் போன்ற வைகள் யாவும் கலியுக லட்சணங்களாகும். மேலும், எப்பொழுதும் கவலை கொண்டு இருப்பதும், உள்ளத்தில் குற்ற எண்ணங்கள் நிறைந்திருப்பதும் கலியுக லட்சணங்களை அடையாளப்படுத்து வனவா கும்.


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

பிரதி மாதம் முதல் வெள்ளிக்கிழமை மட்டுமே!
**செயலாட்சித் தலைவருடன் பேசுங்கள்!**

**டயல் யுவர் ஈ.வோ.**

**பக்தர்களுக்கு அறிய வாய்ப்பு!**

எந்த மாநிலத்திலிருந்தும், எம்மொழியிலும்
நீங்கள் நேராக
செயலாட்சித் தலைவருடன் பேசலாம்!
திருமலையான் ஆர்ஜித சேவைகள்,
வசதி வாய்ப்புகள் குறித்த
உங்களிடையே எழும் சந்தேகங்கள்,
கருத்துகள், ஆலோசனைகளை செயலாட்சி
தலைவருடன் பகிர்ந்து கொள்ளலாம்.

**டோல் நெம்பர் : 0877-2263261**

நேரம் : காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை.

*இந்த வாய்ப்பினை அனைவரும் உபயோகித்துக் கொள்ளவும்.*


தன் ஆட்சியில் கலிபுருஷன் நுழைந்ததைப் பொறுக்கமாட்டாமல் உடனே நால்வகை படைக ளோடு ஜைத்ர யாத்திரைக்குப் புறப்பட்டான் பரீட் சித்து கறுப்பு குதிரைகளால் பூட்டப்பட்ட ரதத்தில், சிம்மக் கொடியோடு பரீட்சித்து பத்ராஸ்வம், கேது மாலம், பாரதம், வடகுரு பிரதேஷங்கள் வழியாக பய ணித்து துஷ்ட ராஜாக்களை வெற்றி கொண்டான். அவர்களிடம் இருந்து கப்பம் வசூலித்தான். அவன் எங்கு சென்றாலும் பாண்டவர்களின் புகழ் பேசப் படுவதைக் கேட்க முடிந்தது. எங்கெல்லாம் பாண்ட வர்களின் புகழைப் பாடகர்கள் சிறந்த முறையில் பாடினார்களோ அவர்களுக்குத் தக்க சன்மானங்களி னாலும், பண முடிப்புகள் தந்தும் சிறப்பு செய்தான். அவ்விதமாக உலகம் முழுவதும் சுற்றி வந்து, பரீட்சித்து ஓரிடத்தில் அபூர்வமான காட்சி ஒன்றைக் கண்டான். அங்கே ஒரு பசுவும், காளையும் பேசிக் கொண்டிருந்தன. காளைக்கு மூன்று கால்களும் உடைந்திருந்தன. அக்காளை நொண்டிக் கொண்டி ருந்தது. பசு சேய் இறந்த தாய் போல் அழுது கொண்டி ருந்தது. அது சாதாரணமான பசு அல்ல. பூமாதேவி

பசுவடிவம் தாங்கியிருந்தாள். அதேபோல் தரும தேவன் காளை வடிவம் தாங்கியிருந்தான். அழுதுக் கொண்டிருந்த பசுவைப் பார்த்த காளை மிகவும் பரிதாபப்பட்டு பசுவே எதற்காக நீ அழுகின்றாய் என்று கேட்டது. அதேபோல் பசுவும் காளையின் கால்கள் இழந்த நிலமையைப் பார்த்து இந்நிலைக்கு என்ன காரணம் என்று கவலையுடன் வினவியது. இவ்விரண்டிற்கும் இடையில் தர்மம் நீதிகளைப் பற்றி பேச்சு நடந்து கொண்டிருந்தது. அனைத்தையும் பரீட்சித்து மஹாராஜா கேட்டான்.

அப்போது அங்கு துர்மார்கன் ஒருவன் வந்தான். அவன் அரசனைப் போல் வேடம் தரித்திருந்தான். ஆனால் பார்ப்பதற்கு அவன் அருவருக்கத்தக்க வனாகவும், அரக்கனுக்கு ராஜா வேடம் இட்டால் எப்படியிருப்பானோ அப்படியாக அவன் இருந்தான். அங்கு அவன் வந்ததுமில்லாது ஒரு பெரிய தண்டா யுதம் கொண்டு காளையை தாக்கத் தொடங்கினான். இத்தாக்குதலால் மிரண்டுபோன காளை சிறுநீர் கழிக்கத் தொடங்கியது. காளைக்கு ஏற்பட்ட அவல நிலையைப் பார்த்துக் கொண்டிருந்த பசு, மேலும் அழத் தொடங்கியது. இவையனைத்தையும்



பார்த்துக் கொண்டிருந்த பரீட்சித்தால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. உடனே தன்னிடம் இருந்த வாளை கையில் ஏந்தி அவனைக் கொல்வதற்குச் சென்றான். தன்னைக் கொல்ல வந்த அந்த வீரனின் கோபத்தையும் பராக்கிரமத்தையும் பார்த்தவுடனே கலிபுருஷன் அவன் கால்களைப் பிடித்துக்கொண்டு தன்னை மன்னிக்கும்படியும், கொல்ல வேண்டாம் என்றும் மன்றாடிக் கேட்டுக் கொண்டான். அந்நேரத் தில் காளைக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி அச்சத் தைப் போக்கினான். காளையும் சற்று அமைதிய டைந்தது.

பின்பு கலிபுருஷன் தன் கிரீடத்தையும் அரச அலங்காரத்தையும் களைந்தெறிந்து விட்டு தன்னை மன்னித்து விடும்படி கேட்டுக் கொண்டான். பரீட்சித் தும் அவனை மன்னித்து உடனே என் ராஜ்ஜியத்தி லிருந்து வெளியேறும்படி ஆணையிட்டான். ஸ்ரீகிருஷ்ணரின் விருப்பப்படி சர்வதர்மங்களோடு வேள்வி முதலியவைகள் நியமத்தோடு நடைபெற்று வருகின்ற என் நாட்டில் கலிபுருஷனுக்கு இடம் இல்லை என்று நிர்தாட்சண்யமாக பரீட்சித்து கூறி னான். அப்பொழுது கலிபுருஷன் அச்சத்தால் உடல் நடுங்க "அரசே! எல்லா பூமண்டலங்களும் உன்னுடை யதாக இருக்க நான் எங்கு செல்வேன் அம்மட்டுமின்றி நான் எங்கு சென்றாலும் உன்னுடைய உக்கிரரூபமே என் கண்முன் தெரிகின்றது. எனவே நான் மன அமைதியோடு இருக்க முடியாது. நான் அமைதி யோடு இருப்பதற்கான தக்க இடத்தை தாங்கள் காண்பித்துக் கொடுத்தால் நான் அவ்விடமே இருந்து விடுவேன். அவ்விடத்தை விட்டு வேறெங்கும் நான் செல்லமாட்டேன் என்று பணிவுடன் வேண்டி நின்றான்", பரீட்சித்து அவன் கோரிக்கைக்கு இணக் கம் தெரிவித்து, "சூதாட்டம் நடைபெறும் இடம்; மது அருந்தும் இடம்; விபச்சார வீடுகள், உயிர்க்கொலை (இம்சை) நடைபெறும் இடம் ஆகிய இந்த நான்கு இடங்களில் மட்டும் நீ தங்கிக் கொள்ள அனுமதியளிக் கிறேன்" என்று கூறினான். ஆனால், அதில் திருப்தி அடையாத கலி, தனக்கு இன்னும் சில இடங்கள் வேண்டும் எனக் கேட்டான். காரணம் சத்வ குணம் உடையவர்கள் யாராக இருந்தாலும் இந்த நான்கு இடங்களிலிருந்தும் விலகியே இருப்பர்; விலகியே இருப்போம் என்றும் உறுதி பூணுவர். அப்பொழுது தான் பாவங்கள் தொலையும். பாவங்களிலிருந்து

நீங்கியவர் உள்ளத்தில் கிருஷ்ண பக்தி உண்டாகும். இவ்வாறு கிருஷ்ண பக்தியே நிறைந்திருக்கின்ற பரீட்சித்து ராஜ்ஜியத்தில் மேற்குறிப்பிட்ட நான்கு இடங்களும் இல்லாமல் போனதே கலி புருஷனுக்கு திருப்தியின்மைக்குக் காரணமானது. அதனாலேயே கலி வேறொரு இடத்தையும் கேட்டான். அதற்கு அரசன் பொன்னாசை உடையவர்கள் இடத்தில் இருக்கும்படியாகக் கூறினான். பொன் எங்குள்ளதோ அசத்தியம், மதம், காமம், பொறாமை போன்ற குணங் கள் இருப்பதற்கு தகுந்த இடமாக அமைகிறது.

அரசன், அந்தணர்கள், மக்கள் பிரதிநிதிகள், சந்நியாசிகள் முதலானோர் கலியுக லட்சணங்களான இந்நான்கிலிருந்தும் விலகி இருக்க வேண்டும் என்று பாகவதம் கூறுகின்றது. இந்த நான்கு கலியுக லட்சணங்களிலிருந்து விலகி இருந்தும் ஐந்தாவது லட்சணமான "பொன்" னை பகவத் சேவையில் பயன்படுத்தி வருவதன் மூலம் மக்கள் யாவரும் முழுமையாக கலி பிரபாவத்திலிருந்து விடுபட்ட வராகின்றார்கள்.

இவ்விதமாக பரீட்சித்து மஹா ராஜா தன் வீரத்தால் கலிபுருஷன் இராஜ்ஜியம் முழு வதும் பரவ முடியாமல் தடுத்து நிறுத்தி ஒரு சில இடங் களுக்குள்ளேயே கட்டுப்படுத்தினான். அவ்வாறாக மக்கள் தங்களை தாங்களே கலிப்ரபாவத்திலிருந்து காத்துக்கொள்ள தகுந்த சூழ்நிலை ஏற்பட்டது. "விஷேஸதோ தர்மஸீலோ ராஜாலோகபதிர்குரு" என்று பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும், அரசர்கள், மக்கள் பிரதிநிதிகள், அந்தணர்கள், சந்நியாசிகள் யாவரும் மக்கள் நலத்தைக் கருத்தில் கொண்டு அனைவருக்கும் நல்ல வழிக்காட்டியாக இருந்து கலி ஸ்தானங்களை விட்டு விலகியிருத்தல் வேண்டும்.

இவ்விதமாக பரீட்சித்து மஹாராஜா கலி புருஷனை முழுவதுமாகக் கட்டுப்படுத்தி, தர்ம தேவன் இழந்து போய் இருந்த மூன்று கால்களையும் மீட்டுக் கொடுத்தான். தர்ம தேவனுக்கு சத்தியம், தயவு, தவம், சுத்தி என்னும் நான்கு பாதங்கள் உண்டு. கலிபிரபாவத்தால் தயவு, தவம், சுத்தி என்னும் பாதங்கள் அடிப்பட்டு போயின. அவைகளை பரீட்சித்து மீண்டும் மீட்டுக் கொடுத்தான். இதனால் தர்மதேவனான அக்காளை இப்பொழுது நான்கு கால்களோடு நடக்கத் தொடங்கியது. தர்ம தேவனின் துன்பங்கள் விலகிப்போனதைக் கண்டு பூதேவியும் திருப்தி அடைந்தாள். இவ்விதமாக பூதேவியையும் தர்ம தேவனையும் மகிழச் செய்து பரீட்சித்து மஹாராஜா தன் நாட்டின் தலைநகருக்குத் திரும்பிச் சென்றான். தான் கலிபுருஷனுக்கு கொடுத்த ஐந்து இடங்களும் செழிக்க விடாமல் கலியைக் கட்டுப் படுத்தினான். பரீட்சித்து மஹாராஜாவின் ஆட்சியில் மக்கள் எல்லோரும் எல்லா நலன்கள் பெற்றும் முழு அமைதியுடன் வாழ்ந்தார்கள். எனவே கலிபிரபாவம் இல்லாமல் இருக்க வேண்டும் என்றால் அதற்கு ஒரே வழி ஹரிநாம சங்கீர்த்தனம் மட்டுமே என்று கலிசந்தரனோபநிஷத்தில் சொல்லப் பட்டுள்ளது.

அது "ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே" என்னும் நாமத்தை நித்யம் ஜபித்து வந்தால் கலி பிரபாவத்திலிருந்து நம்மை நாமே காத்துக் கொள்ள முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. "இது ஷோடஸகம் நாம் நாம் கலிகல்மஸ நாசனம்" என்று உபநிஷத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஹரி நாம சங்கீர்த்தனம் ஒருவருக்கு முழு பாதுகாப்பையும் கொடுக்கும். வெளியில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தாலும், ஏ.சி. அறையில் உள்ளவ ருக்கு வெயிலின் தாக்கம் எப்படி தெரியாதோ அதே போல் ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை சொல்பவர் களுக்குக் கலி பிரபாவம் எள்ளளவும் உண்டாகாது. அப்பொழுது மக்கள் அனைவரும் மனநிம்மதியோடு, நல்வாழ்வு வாழ்ந்து இறைவனின் விருப்பத்திற்கு பாத்திரமாவார்கள். ஹரி நாம சங்கீர்த்தனமே கலி பிரபாவத்தைப் போக்கக்கூடியது என்பது சத்தியம்.

பாகவத கதை சாகரம் தொடரும்...





32









108 திவ்யதேச வைபவம்

# திருத்தெற்றியம்பலம்

உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

பகவான், இரண்யாக்ஷனிடமிருந்து பூமிதேவியைக் காக்க வராஹவதாரம் செய்யப் புறப்பட்டார். அப்போது ஸ்ரீதேவியும் ஆதிசேஷனும் பகவானே... உன்னைப் பிரிந்து இருக்க இயலாது என்று சொல்லும்போது, நீங்கள் இருவரும் பலாச வனத்துக்கு அருகே திருநாங் கூரில் தவம் செய்யுமாறும், அவதார கார்யம் முடிந்து அங்கு வந்து அருள்வதாகவும் சொல்ல, அதன்படி இருவரும் இங்கு வரும்போது சிவபிரானும் சேர்ந்து கொள்ள, மூவரும் தவம் இருந்தனர். பகவான், ஹிரண் யனை சம்ஹரித்து இங்கு வந்து இவர்களுக்கு அருளி, போரிட்ட களைப்பு நீங்க நான்கு திருக்கரங்களுடன் அம்பலத்தில் பள்ளி கொண்டார். பகவானின் தலைப் பக்கம் திருமகள் இருக்க, திருவடியில் நிலமகள் இருக் கிறாள். ஸ்ரீரங்கநாதனை விட, இன்னும் இரண்டு திருக் கரங்களுடன் நான்கு திருக்கரங்கள் இவருக்கு இங்கே இருக்கின்றன. இது திருத்தெற்றியம்பலம். அம்பலம் என்பது சிவபிரான் நடனமாடும் இடம். ஆனால் வைண வத் திருப்பதிகளில், இது ஒன்றுதான் அம்பலம் என்கிற பெயருடன் அமைந்துள்ளது. தெற்றி என்றால் திண்ணை, தெற்றியம்பலம் என்றால் கோயில் போன்ற இடங்களில், மேடாக அமைந்த சித்ர கூடங்களைக் குறிக்கும்.

| | |
|---|---|
| **பெருமாள்** | – செங்கண்மால், ரங்கநாதர், ஸ்ரீலக்ஷ்மிரங்கர். |
| **தாயார்** | – செங்கமலவல்லித் தாயார். |
| **தீர்த்தம்** | – சூர்ய புஷ்கரணி, சேஷ தீர்த்தம். |
| **விமானம்** | – வேத விமானம், ஸ்ருதிமய விமானம். |
| **ப்ரத்யக்ஷம்** | – தாயார், ஆதிசேஷன். |
| **ஆகமம்** | – பாஞ்சராத்ரம் |
| **மங்களாசாஸனம்** | – திருமங்கை ஆழ்வார், |
| **சிறப்பு** | – ஆதிசேஷனுக்கு அருளிய சிறப்பு. ஸ்ரீமஹாலக்ஷ்மி தவம் செய்ததால் லக்ஷ்மி ரங்கம். திருநாங்கூர் எல்லைக்குள் இது ஆறாவது திவ்ய தேசம். |

**த்யான ச்லோகம்**

*ரக்தாந் தாக்ஷ ஸமாஹ்வயோ ஹரிரஸௌ ரக்தாம் புஜா நாயிகா*
*தீர்த்தம் ஸூர்ய நிஷேவிதம் ச்ருதிமயம் தத்வ்யோ மயாநம் மஹத்|*
*உத்யத் ஸூர்ய முகச்ச ரக்தகமலா சாக்ஷாத் க்ருதஸ் ஸர்வதா*
*மஹ்யா சைவ ததா புஜங்கசயநோ ரக்தாம்பரோ ராஜதே||*

----

**பாசுரம்**

*சிலம்பினிடைச் சிறுபரல்போல் பெரியமேரு*
*திருக்குளம்பில் கணகணப்பத் திருவாகாரம்*
*குலுங்க நிலமடந்தைதனை இடந்து புல்கிக்*
*கோட்டிடை வைத்து அருளிய எம்கோமான் கண்டீர்*
*இலங்கிய நான்மறை அனைத்தும் அங்கம் ஆறும்*
*ஏழிசையும் கேள்விகளும் எண்திக்கு எங்கும்*
*சிலம்பிய நற்பெருஞ்செல்வம் திகழும் நாங்கூர்த்*
*திருத்தெற்றி அம்பலத்து என் செங்கண் மாலே.*

*" சென்றது காலம்: திரை, நரை, மூப்பு ஆனா: இனி என்று கொல் சாவு அறியோம்: என் நெஞ்சே.... கன்றால் உருத்து, எற்றி, அம்பலத்தை ஓர் விளவின் விழத்தான் திருத்தெற்றி அம்பலத்தைச் சேர்.*

(பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்)

**நாமாக்கள்**

271. *ஓம் வஸவே நம:*

(தானே, தடையாக இருப்பவனே)

*ஓம் மதுவ்ரதாயை நம:*

(அநுஷ்டிப்பவர்க்கு இனிதாக இருக்கும் வ்ரதங்களால் ஆராதிக்கப்படுபவளே)

272. *ஓம் நைக ரூபாய நம:*

(பலவகையான ரூபங்கள் உள்ளவனே)

*ஓம் விச்வம்பராயை நம:*

(அன்னபானாதிகளைக் கொடுத்து, உலகங்களைக் காப்பவளே)

273. *ஓம் ப்ருஹத்ரூபாய நம:*

(எல்லா உருவங்களையும், பெரிய உருவாக எடுப்பவனே)

*ஓம் ஹைமவத்யை நம:*

(அன்னபானாதிகளின் அபிவ்ருத்திக்காக கங்கையாகப் ப்ரவஹிப்பவளே)

274. *ஓம் சிபிவிஷ்டாய நம:*

(கிரணங்களில் பரவி உள்ளவனே)

*ஓம் ஸமுத்ராயை நம:*

(வர முத்ரை, அபய முத்ரைகளோடு கூடியவளே)

275. *ஓம் ப்ரகாசநாய நம:*

(எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்பவனே)

*ஓம் இச்சா விஹாரிண்யை நம:*

(இச்சையுடன் ஜகத் ஸ்ருஷ்டி முதலான லீலைகளைச் செய்பவளே)

276. *ஓம் ஓஜஸ்தேஜோத் யுதிதராய நம:*

(பல, பராக்கிரம தேஜஸ் எல்லாம் உடையவனே)

*ஓம் அநுகூலாயை நம:*

(சம்சார சாகரத்தின் கரையாகிய பகவானை அனுசரித்து இருப்பவளே)

277. *ஓம் ப்ரகாசாத்மநே நம:*

(எல்லாருக்கும் விளங்கக் கூடிய மஹிமை பொருந்தியவனே)

*ஓம் யஜ்ஞவத்யை நம:*

(யக்ஜ ரூபியான பகவானையும் தன்வசமாக உடையவளே)

278. *ஓம் ப்ரதாபநாய நம:*

(எல்லாவற்றையும் தபிக்கச் செய்பவனே)

*ஓம் சத கோட்யை நம:*

(வஜ்ராயுதம் போல் உறுதியானவளே)

279. *ஓம் ரித்தாய நம:*

(சகலமும் நிறையப் பெற்றவனே)

*ஓம் ஸுபேசலாயை நம:*

(அடியார் துயரம் தாங்கமாட்டாத மிக மென்மையானவளே)

280. *ஓம் ஸ்பஷ்டாக்ஷராய நம:*

(வேத அக்ஷரங்களை வெளியிட்டவனே)

*ஓம் தர்மோதயாயை நம:*

(தன் கடாக்ஷத்தைப் பெற்றவர்களை, பகவான் உகக்கும் கார்யங்களையே செய்யும்படி தூண்டுபவளே)

*ஸ்ரீமதே ரக்தபங்கஜவல்லி (ஹேமாப்ஜவல்லீ) செங்கமலவல்லீ நாயிகா ஸமதே ஸ்ரீலக்ஷ்மி ரங்க செங்கண்மால் பரப்ரஹ்மணே நம:*

**திவ்ய தேச வைபவம் வளரும்...**

## வாசகர்களுக்கு அறிவிப்பு

**பிரதி மாதம் ஸப்தகிரி மாத இதழ் உங்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் கிடைக்காமல் போனால் பிரதான ஆசிரியர் அலுவலகத்தை பணி நாளில் கீழ்காணும் தொலை பேசி எண்ணை தொடர்பு கொண்டால் இவ் இதழினை உடனே அனுப்பி வைக்கப்படும்.**

**நீங்கள் கீழ் குறிப்பட்ட விவரங்களை தொலைபேசியில் தெரிவியுங்கள். உங்கள் சந்தா எண், உங்கள் முகவரி, உங்கள் பகுதி அஞ்சல் எண், உங்கள் கைபேசி எண்... சரியாக தெரிவியுங்கள்.**

பிரதான ஆசிரியர்
அலுவலக தொலைபேசி எண்:
0877-2264543

# "ஆண்டாள் உகந்த வேங்கடவன்"

பெரியாழ்வார் தம் பெண்பிள்ளையாய், ஸ்ரீவில்லிபுத்தூரிலே அவதரித்த நம் கோதை என்னும் ஆண்டாளுக்கு, வடவேங்கடமலை எனும் திருமலையின் மீதும், அங்கு கோயில் கொண்டுள்ள திருவேங்கடமுடையான் மீதும் ஆறாத காதல் அமைந்திருந்தது என்பதை நிரூபிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்னுமாப்போலே, ஏழுமலையான் மீதும், குளிரருவி வேங்கடத்தின் மீதும் ஆண்டாள் பெரும் மையல் கொண்டிருந்ததை விளக்க, ஆண்டாளே அருளிச் செய்த "நாச்சியார் திருமொழி" எனும் திவ்யப்பிரபந்தத்தில் 8ஆம் திருமொழி ஒன்றே போதுமே! வேறு ஒன்று சொல்வானேன்! மேக விடு தூதாகவே செல்கிறது இத்திருமொழி. எந்தவொரு திவ்ய தேசத்து எம்பெருமானையும், கண்ணனாகவே பாவித்தாள் ஆண்டாள். ஆண்டாள் பொறுத்த வரை எதிலும் கண்ணன், எல்லாம் கண்ணன். மால் இரும் சோலை மலைகள் யாவுமே ஆண்டாள் திருவுள்ளத்தில் ஆயர்பாடியும், மதுரா கோகுலமுமே. ஒரு கார்காலத்து வேளை. வடவேங்கடக் கண்ணனையே மனத்துள் நினைத்துருகி ஏங்குகின்ற காலம். முன்னொரு சமயம் எம்பெருமான் ஆண்டாளுடன் கலந்து பிரிந்து போம்போது, மீண்டும் அவன் வருங்காலம் எப்போது என ஆண்டாள் கேட்டபோது, கார்காலத்தில் தவறாது வருவேன் என்று அவன் கூறிச் சென்றது ஆண்டாள் நினைவுக்கு வந்து வாட்டியது. அந்தக் கார்காலம் தான் இப்போது வந்திருக்கிறது.

ஓ! கார்காலத்து மேகங்களே! தெழிகுரலருவி திருவேங்கட மலையின் சிகரத்து உச்சியைத் தொட்டு வந்திருக்கும் நீல வண்ண மேகங்களே, உங்களுக்கு வேங்கட மலையின் பெருமையையும், அம்மலையிடை உறையும் ஸ்ரீநிவாச கண்ணனின் பெருமையையும் பற்றி நீங்கள் அறியாதது ஏதுமில்லை; அவனுடைய திருக்கல்யாண குணங்களை எடுத்தியம்ப வார்த்தையுமில்லை.

"ஒரு காரியம் பண்ணுங்களேன் மேகங்களே! மீண்டும் அவன் மலைக்கே, அவனிடமே செல்லுங்கள்; அவனிடமும் சொல்லுங்கள். அவ்வெம்பெருமான் தான் எப்போதைக்கும் ரக்ஷகனாயிருந்து வைத்து அதைச் சிறிதும் நினையாமல் ஒரு பெண்பிள்ளையைக் கொலை பண்ணினான் என்கிற சொல்லை ஊர் மக்கள் அறிய வேண்டுமோ? எனக் கேளுங்கள். அது வேண்டாதாயின், அவன் நினைவால் வாழப் பசலை பூத்து நிற்கும் என் பால் இரங்கி, விண்ணும் மண்ணும் மகிழ, கீழிறங்கி என்னிருப்பிடம் வந்து போம்படி கூறுங்களேன்!

*"மதயானை போலெழுந்த மாமுகில்காள்! வேங்கடத்தைப்*
*பதியாக வாழ்வீர்காள்! பாம்பணையான் வார்த்தையென்னே!*
*கதியென்றும் தானாவான் கருதாது ஓர் பெண் கொடியை*
*வதை செய்தானென்னுஞ்சொல் வையகத்தார் மதியாரே."*

பார்த்தீர்களா. வேங்கட மலையின் மீதும், வேங்கடத்தான் பேரிலும் ஆண்டாள் கொண்டிருக்கும் காதலை? விரிவுக் கஞ்சி இத்துடன் அமைகிறேன்.



செல்வி. ஸ்மிருதி கிருஷ்ணன், சென்னை.



பகவத் கீதை - இளைய சமுதாயம்

# குழப்பங்களை போக்கி, காரியங்களை செய்....

பகவத் கீதையின் அவசியம் என்ன? எனும் கேள்வியை யாரேனும் கேட்பதற்கான வாய்ப்பு உள்ளது. மனிதனை பற்றிக் கொள்ளும் தோஷங்கள் நான்கு. அவை 1) பிரம்மைக்கு அடிமையாதல் அதாவது தவறுகள் செய்தல், 2) மோகத்திற்கு அடிமையாதல் (ஒன்றை விடுத்து மற்றொன்றை விரும்புதல்), 3) மோசடி செய்யும் சுபாவம் இருத்தல், 4) தன்னிச்சையான இந்திரியங்களை பெற்றிருத்தல். சாஸ்திர ஞானிகளானாலும் சரி, பண்டிதர்களானாலும் சரி, தேசத்தை ஆள்பவர்களானாலும் சரி, பிச்சைக்காரர்களானாலும் சரி இந்த நான்கு வகையான தோஷங்களிலிருந்து தப்பிக்க முடியாது.

வேதமென்றால் ஞானம், இனி வேதாந்தம் என்றால் ஞானத்திற்கு எல்லை நிலம். அது தான் உபநிஷத். அப்பேற்பட்ட அனைத்து உபநிஷத்துக்களின் சாரமே பகவத்கீதை. ஆதலால் பக வத்கீதையில் இல்லாத செய்திகளே இல்லை எனலாம். உலகத்திலுள்ள அனைத்து சாஸ்திரங்களிலும் கூறப் பட்டுள்ள தகவல்கள் மட்டுமன்றி அவற்றில் சொல்லப் படாதவைகளும் பகவத் கீதையில் நமக்கு சொல்லப் பட்டுள்ளது.

மானிடரிடம் இருக்கக்கூடிய முதல் தோஷம் தவறுகள் செய்தலாகும். அத்தவறுகள் தெரிந்தும் தெரியாமலும் இருக்கலாம். தெரிந்தே செய்திருந்தால் அது மோசம் செய்தது போலாகின்றது. தெரியாமல் செய்தால் அது பிரமை ஆகின்றது. தெரியாததை தெரிந்தது போல் காட்டிக் கொண்டாலும் அதுவும் மோசமேயாகும். தானே தவறு செய்து தவறு செய்யாதது போல் நடித்தாலும் மோசமேயாகும். இது கபட நாடகமாகும். துவாபர யுகத்தில் கர்ணன் வில்வித்தையை கற்பதற்காக, தான் பிராமணன் என்று பரசுராமனிடம் கூற, அவரும் கர்ணனின் வார்த்தையை நம்புகிறார்.

அதாவது கர்ணனின் அசத்தியத்தை சத்தியமாக பாவிக்கின்றார். இது தான் மோகத்திற்கு உட்படும் தோஷமாகும். கர்ணன் தன் பிறப்பின் ரகசியத்தை கூறாமல் பிராமணன் எனக் கூறி பரசுராமரை மோஷம் செய்தான். இது மனிதர்களிடையே இருக்கக்கூடிய தோஷமாகும். மானிடரின் இந்திரியங்களும் தன்னிச்சையாக உள்ளன. ஆகாயத்தில் உள்ள சூரியனும் நம் கண்களுக்கு சிறிய வட்டில் போலவே தெரிகின்றது. ஆனால் உண்மையில் சூரியன் பூமியை விட பெரிய கோள் ஆகும். அதாவது நம்முடைய கண்கள் சரியான அளவினை அளிக்கவில்லை என்றே பொருள் கொள்ளல் வேண்டும்.

கர்ணன் பொய் கூறினாலும் பரசுராமர் அவரை பரிசோதிக்க வில்லை. இதுதான் இந்திரயங்களிடம் உள்ள பலவீனம். ஆனால், ஒரு நாள் பரசுராமர் கர்ணனின் மடியில் தன் தலை வைத்து உறங்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு வண்டானது கர்ணனின் தொடையை துளைக்க ஆரம்பித்தது. குருவின் உறக்கத்திற்கு தடை ஏற்படக் கூடாது என்று எண்ணிய கர்ணன் வலியை தாங்கிக் கொண்டான். அந்த வண்டும் தீவிரமாக துளைக்க கர்ணனின் தொடையிலிருந்து ரத்தம் வழிந்து

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஒ. சுரேஷ்.



பரசுராமரின் சரீரத்தை அடைந்தது. இதனால் அவர் தூக்கம் கலைந்து நிலைமையினையும் அறிந்துக் கொண் டார். இவ்வளவு வலியை தாங்கிக் கொள்பவன் பிராமணன் அல்ல. அவன் சத்ரிய வம்சத்தை சார்ந்தவனே என் பதை அறிந்தார். உடனே, கற்றுக் கொண்ட வித்தைகள் எல்லாம் தகுந்த சமயத்தில் உபயோகப்படக் கூடாது என்று கர்ணனைப் பார்த்து சபித்தார்.

ஆதலால்தான் அர்ச்சுனனை கொல்வேன் என்ற தீவிரமான நம்பிக்கையானது பிரமை (மோகம்) ஆனது. இவ்விதமாக மானிடர் நான்கு விதமான தோஷங்களால் பிணைக்கப்பட்டு உள்ளனர். ஆதலால் அவன் செய்யும் செயல்கள் முழுமையடைவதில்லை. அனைத்து காலங்களுக்கும் பொறுந்துவதுமில்லை. ஆனால் பகவத் கீதை அப்படியல்ல. அதில் கூறப்படும் செய்திகள் எல்லா காலத்திற்கும், அனைத்து தேசத்திற்கும், அனைத்து மானிடருக்கும், அனைத்து வயதினருக்கும், அனைத்து ஜாதியினருக்கும், அனைத்து மதத்தினருக்கும், ஆண் பெண் பேதமின்றி அனைவருக்குமானதாகும்.

மனிதன் புத்தியின் மீது ஆதாரப்பட்டோ அல்லது தன் போன்றவரான சாதாரண மனிதர்களின் புத்தி மீதே ஆதாரப்பட்டிருந்தால் கண்டிப்பாக ஏதாவதொரு சமயத்தில் குழப்பத்திற்கு ஆளாவர். குழப்பத்தை உண்டு பண்ணுவது மனதேயாகும். ஆனால் சுயகட்டுப்பாட்டில் நிற்கும் மனிதன் ஆன்மீகப் பாதையில் குழப்பத்தை போக்கிக் கொள்ளல் வேண்டும் என்று ஸ்ரீகிருஷ்ண பகவான் போதிக்கின்றார்.

*ச்ரத்தாவாந் லபதே ஜ்ஞாநம் தத்பர: ஸம்யதேந்த்ரிய: |*
*ஜ்ஞாநம் லப்த்வா பராம் சாந்திமசி ரேணாதிகச் சதி ||*

–பகவத் கீதை 4:39

திவ்ய ஞானத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டவன், தன் புலன்களை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளவன் ஞானத்தை பெறுவதற்கான தகுதியுள்ளவனாகிறான். இதனை பெற்று அவன் பரமசாந்தியை பெறுகிறான்.

*அஜ்ஞச்சாச்ரத்ததாநச்ச ஸம்சயாத்மா விநச்யதி |*
*நாயம் லோகோऽஸ்தி ந பரோ ந ஸுகம் ஸம்ச யாத்மந: ||*

–பகவத் கீதை 4:40

சாஸ்திரங்களின் மீது சந்தேகமுடையவன், சிரத்தை இல்லாதவன், பகவத் விஷயத்தை பெறாமல் வீணாக அழிவான். சந்தேகமுடையவனுக்கு இவ்வுலகம் மட்டுமின்றி, பரலோகமும் இல்லை, சுகமும் இல்லை.

ஆகவே அஞ்ஞானத்தால் உன் உள்ளத்தில் இருக்கும் சந்தேகத்தை ஞானம் எனும் வாளினால் சிதைத்து சமத்துவயோகம் எனும் கர்ம யோகத்தில் நிலைத்து நில் என்று அர்ச்சுனனுக்கு கீதாசார்யன் போதிக்கின்றார். ஸ்ரீகிருஷ்ண பகவானின் இவ்வுபதேசமானது எல்லா காலத்திற்கும் பொருந்தக் கூடியது. தற்போது சாஸ்திரங்கள் எவருக்கும் தெரியாது, அவற்றின் தேவையுள்ளவறே அறிந்து கொள்கின்றனர். மாணாக்கர்களும் தம்முடைய பாடப்புத்தகங்களை மட்டுமே படிக்கின்றனர். தம்மில் உத்வேகத்தை நிரப்பி அஞ்ஞானத்தை தொலைத்து வேத நூல்களை படிப்பதில்லை. அனைவரும் நூல்களை வயதான காலத்தில் படிப்பதற்கு முயற்சிக்கின்றனரே தவிர சரியான நேரத்தில் அவற்றின் மூலம் தகுந்த பயனை அடைவதில்லை. நம்முடைய காரியங்களில் சந்தேகமும், குழப்பங்களும் ஏற்படுகின்றன. அந்த சமயங்களில் அஞ்ஞானம் உண்டாகாமல் எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். அதற்கு சாஸ்திர உபதேசம் வேண்டும். சாஸ்திர உபதேசத்தை “ஞான வாள்” என்று கூறப்படுகிறது. ஞான வாளினால் “சந்தேகங்களையும், குழப்பங்களையும் சிதைத்து விடு” என்று ஸ்ரீகிருஷ்ண பகவான் கூறுகின்றார்.

குழப்பங்களானது சாதாரணமாக படிக்கக்கூடிய கல்வி நூல்களின் மூலம் தீர்க்க இயலாது. பகவத் கீதை உபதேசத்தின் மூலமாக அவசியமற்ற சந்தேகங்கள் போக்கப்படுகின்றன. ஆதலால் மாணக்கர்களும் அனுபவம் நிறைந்தவர்களிடம் கீதை உபதேசத்தைப் பெற்று, தம் காரியங்களில் ஏற்படும் குழப்பங்களைப் போக்கிக் கொண்டால் காரியங்களில் வெற்றி என்பது நிச்சயமாக கிட்டும். பகவத் கீதையினை அனுசரித்து அனேக வெற்றிகளை சாதித்த மகான்களின் சரித்திரமே இதற்கு ஆதாரமாகவும் விளங்குகிறது.

**பகவத்கீதை தொடரும்...**

ஆயுர்வேதம்



# வெல்லம்

தெலுங்கு மூலம் : டாக்டர். சி. மதுசூதன சர்மா.
தமிழாக்கம் : திருமதி. வி. உஷா.

நம் இந்தியர்கள் அன்றாட வாழ்வில் பலவித உணவுப் பொருட்களை உபயோகிக்கின்றனர். அவற்றில் "வெல்லம்" சிறந்த பொருளாக முதலிடம் வகிக்கிறது. இந்த வெல்லம் "இனிப்பு வகைகள்" தயாரிப்பில் மட்டுமின்றி மருத்துவத்திலும் பயன்படுத்துகின்றனர். அதனைப் பற்றி அறிந்து கொள்வோம்.

பூஜைகள், விரதங்கள், பண்டிகைகள், திருமணம் போன்ற விசேஷ நாட்களில் வெல்லத்தின் பங்கு மிகுதியாக உள்ளது. மேலும் இறைவனுக்கு படைக்கப்படும் நிவேதனங்களில் வெல்லத்தைப் பயன்படுத்துகின்றனர். அந்த பிரசாதங்களை நாம் உட்கொள்வதால் நம் உடலில் உள்ள சில வியாதிகள் மற்றும் தோஷங்கள் நீங்கும்.

கரும்பு இரசத்தை நன்கு காய்ச்சி வெல்லத்தை தயாரிக்கின்றனர். சமஸ்கிருதத்தில் "குடம்" என்றும், இந்தியில் "கூட்" என்றும், கன்னடத்தில் "பெல்ல" என்றும், தமிழில் "வெல்லம்" என்றும், மலையாளத்தில் "சர்க்கரை" என்றும், ஆங்கிலத்தில் "ஜாகரி" என்றும் அழைக்கின்றனர். "கிராமினே" என்ற தாவரக் குடும்பத்தைச் சார்ந்த கரும்பை "ஷாகேரம் அபீஷனாலிஸ்" என்று (அழைக்கின்றனர்) குறிக்கின்றனர்.

பழைய வெல்லம் (பத்தியத்திற்கு) மருந்திற்கு உகந்தது. புதிய வெல்லம் மருத்துவத்திற்கு உகந்தது அல்ல, என்று சில மருத்துவக் குறிப்புகள் சொல்கின்றன.

இந்த வெல்லத்தினால் பலவிதமான சுவையூட்டும் இனிப்பு வகைகளைத் தயாரிக்கின்றனர். சமையலிலும் இதனை பயன்படுத்துகின்றனர். அவைமட்டுமின்றி சில வியாதிகளுக்கு மருந்தாகவும் உபயோகிக்கின்றனர். இது எவ்வகையில் மருந்தாகப் பயன்படுகிறது என்பதைப் பார்ப்போம்.

### மாதவிடாயின் போது ஏற்படும் வலிக்கு :

மாதவிடாய் ஆனபோது பெண்கள் இரண்டு டீஸ்பூன் அளவு வெல்லம், ஒரு டீஸ்பூன் நெய், கால் டீஸ்பூன் மிளகு பொடி ஆகியவற்றைக் கலந்து வெறும் வயிற்றில் மூன்று நாட்கள் உட்கொள்ள வேண்டும். இவ்வாறு மாதவிடாயின் போது மூன்று நாட்கள் வீதம் மூன்று மாதம் உட்கொள்வதன் மூலம் வலி நிவாரணம் ஆகும். அவ்வாறே மாதவிடாய் வலிக்கு வேறொரு மருத்துவம் என்னவென்றால் வெல்லத்துடன் சிறிதளவு சுண்ணாம்பு சேர்த்து புளியங்கொட்டை அளவு மாத்திரையாக செய்து உட்கொண்டால் நல்ல பயன் கிட்டும்.

### தலைவலி நீங்க :

100 கிராம் நெய்யில் 100 கிராம் வெல்லப்பொடி கலந்து நாள்தோறும் இரண்டு வேளை 5 முதல் 10 கிராம் அளவு இம்மருந்தை உட்கொண்டால் தலைவலி குறையும். அதிக வலி இருக்கும்போது வெல்லத்துடன் இஞ்சியை

கலந்து மிருதுவாக அரைத்து அந்த இரசத்தை எடுத்து மூக்கில் 1 அல்லது 2 சொட்டு விட்டால் தலைவலி உடனே குறையும்.

**சிறுநீரகக் கோளாறுகள் நீங்க :**

50 கிராம் வெல்லப்பொடி, 50 கிராம் சீரகப்பொடி ஆகியவற்றை கலந்து வைத்துக் கொண்டு காலை, மாலை இரு வேளைகளில் அரை டீஸ்பூன் அளவு 100 மி.லி. நீரில் கலந்து குடித்தால் சிறுநீரகக் கோளாறுகளான எரிச்சல், வலி ஆகியவை குறையும்.

**முழங்கால் இடுப்பு வலி குறைய :**

வெல்லம், சுண்ணாம்பு ஆகியவற்றை சிறிதளவு நீருடன் கலந்து அல்லது வெல்லம் புளிச்சாறு ஆகியவற்றைக் கலந்து நன்கு அரைத்து தடவி வந்தால் முழங்கால் மற்றும் இடுப்பு வலி குறையும்.

**வீக்கம் குறைய :**

25 கிராம் அளவு பழைய வெல்லம், சுக்கு, திப்பிலி, கருப்பு எள் ஆகியவற்றை பொடி செய்து கொண்டு இதனுடன் ஆயுர்வேத மருந்துக்கடையில் கிடைக்கும் "புனர்னவாதி மண்டூரம்" என்ற மருந்தை 10 கிராம் அளவு எடுத்துக் கொண்டு இரண்டு வேளை 1 அல்லது 2 கிராம் பொடியை தேனுடன் கலந்து உட்கொண்டால் கை, கால் வீக்கம் குறையும்.

**மூட்டு வலிக்கு :**

நாள்தோறும் 1 அல்லது 2 முறை 200 மி.லி. பாலில் 5 கி. வெல்லம், 5 மி.லி. நெய் அல்லது 2 கி. சுக்குப்பொடி ஆகியவற்றை கலந்து குடித்தால் மூட்டுவலி குறையும்.

**மலச்சிக்கலைத் தடுக்க :**

50கி. வெல்லப்பொடியில் 50கி. சுனாமுகிப் பொடி கலந்து வைத்துக் கொண்டு, இரவு உறங்கும்போது, 100 மி.லி. வெதுவெதுப்பான நீரில் 3 அல்லது 5 கி. பொடியை கலந்து குடித்தால் மலச்சிக்கல் நீங்கும்.

**நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க :**

அரை கிலோ வெல்லம், அரைகிலோ நெல்லிக்காய் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு முதலில் அகன்ற கண்ணாடி சீசாவில் ஒரு வரிசையாக நெல்லிக்கனியை அடுக்கி அதன் மேல் மீண்டும் அதேபோல் நெல்லிக்கனியை அடுக்கி வெல்லத்தைத் தூவ வேண்டும். நெல்லிக்கனியை வரிசையாக அடுக்கி வெல்லத்தைத் தூவி விட வேண்டும். பின் 4 அல்லது 5 நாட்கள் அவ்வாறே வைத்தால் நெல்லிக்காய் வெல்லத்தில் ஊறி மிருதுவாக ஆகி விடும். இதனை நாள் தோறும் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் நோய் எதிர்ப்பு சக்தியானது அதிகரிக்கும். இதன் மூலம் அவ்வப்போது ஏற்படும் சிறு சிறு உடல் நலக்குறைவுகள் ஏற்படாமல் தடுக்கும்.

**தேள்கடிக்கு :**

வெல்லம், கடுகு ஆகியவற்றை சம பங்கு எடுத்து நன்கு அறைத்து தேள் கடித்த இடத்தில் தடவினால் வலி, எரிச்சல், குடைச்சல் ஆகியவை நீங்கும்.

**வயிற்றுப்போக்கு :**

வெல்லப்பொடி, கடுகுப்பொடி ஆகியவற்றை 10 கிராம் அளவு எடுத்துக்கொண்டு தகுந்த அளவு நீருடன் கலந்து நன்கு அறைத்து பட்டாணி அளவு உருண்டைகள் செய்து ஆற வைத்து 2 அல்லது 3 முறை 1 மாத்திரை உட்கொண்டால் வயிற்றுப்போக்கு குறையும்.

**இரத்தம் மற்றும் கால்சியம் சத்து அதிகரிக்க :**

வெல்லம் வறுத்த வேர்க்கடலை, வெள்ளை எள், கேழ்வரகு ஆகியவற்றை 100 கிராம் வீதம் எடுத்துக் கொண்டு பொடி செய்து, காலை–மாலை இரு வேளைகளில் அரை டீஸ்பூன் முதல் ஒரு டீஸ்பூன் வரை 50 மி.லி. நீரில் கலந்து உட்கொண்டால் இரத்தக்குறைவு, கால்சியம் குறைவு ஆகிய உடல் நலக்குறைவுகளைப் போக்கி நல்ல ஆரோக்கியத்தை அளிக்கும்.

**உடல் எரிச்சல் நீங்க :**

நாள்தோறும் 2 வேளை 1 அல்லது 2 கிராம் வெல்லப்பொடியை 20 மி.லி. கொத்தமல்லி ரசத்துடன் கலந்து குடித்தால் உடல் எரிச்சல் குறையும்.

**படுக்கையில் சிறுநீரகம் கழிப்பதை தடுக்க :**

வெல்லம், கருப்பு எள் பொடி, சோளப்பொறிப் பொடி, உலர்ந்த தேங்காய் (கொப்பரை) துருவியது ஆகியவற்றை 50 கிராம் அளவு கலந்து வைத்துக் கொண்டு காலை மாலை இரு வேளைகளில் 1 முதல் 5 கிராம் அளவு உட்கொள்ள வேண்டும்.

பலவிதமாகப் பயன்படும் இந்த வெல்லம் சுமார் 2500 ஆண்டுகளுக்கும் மேலாக தொன்றுதொட்டு உட்கொள்ளப்படும் ஓர் பண்பாடாகும். ஆயுர்வேத மருத்துவ நூல் ஒன்றில் வெல்லத்திற்கு வாதம் மற்றும் செரிமான நோய்களைக் குணப்படுத்தும் தன்மை உள்ளதாக எழுதப்பட்டுள்ளது. பல சத்துக்கள் நிறைந்த இந்த வெல்லத்தை நாள்தோறும் நாமும் பயன்படுத்தி நலம் அடைவோம்.

ஆயுர்வேதம் வளரும்...



# 2019
# ஜனவரி மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்

| | | | |
|---|---|---|---|
| செவ்வாய் | (யுரேனஸ்) | | |
| நெப்ட்யூன் | ஜனவரி - 2019<br>01 - புதன் - தனசு<br>01 - சுக்ரன் - விருச்சிகம்<br>06 - யுரேனஸ் - வ.நி.<br>14 - சூரியன் - மகரம்<br>20 - புதன் - மகரம்<br>29 - சுக்ரன் - தனுசு | | ராகு |
| கேது | | | |
| ப்ளூட்டோ<br>சனி<br>சூரியன் | புதன்<br>கு ரு<br>சந்திரன் | சுக்ரன் | |


மேஷம்

ராசி நாதன் செவ்வாய் விரய வீட்டில் சஞ்சரிப்பினும், குருவின் பார்வையைப் பெறுவதால் உங்களுடைய அனைத்துச் செயல்களும் வெற்றியாகவும், வருமானம் தரக்கூடியதாகவும் அமையும். குடும்ப ஸ்தானத்தை சுக்ரன், குரு நோக்குவதால் குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும்.


ரிஷபம்

உங்கள் ராசியை ராசிநாதன் சுக்ரனும், குருவும் நோக்குகிறார்கள். அந்நியர்களின் தொடர்பு நலம் சேர்க்கும். பயணங்களால் அனுகூலமுண்டாகும் எனினும் பாதுகாப்புடன் மேற்கொள்வது நல்லது. ஏற்றுமதி, இறக்குமதி இனங்கள் லாபம் தரும்.


மிதுனம்

ராகு இரண்டிலிருப்பினும் குரு பார்ப்பதால் தன வரவில் குறையிராது. குடும்ப அமைதிக்குப் பங்கம் ஏற்படாது. அரசு சம்பந்தமான காரியங்கள் இப்போது நிறைவேறும். பிரபலங்கள் உங்களுக்கு உதவுவார்கள். இயந்திரப் பணிகள் லாபம் தரும். நிலபுலன்கள் சேரும். சொத்துக்களாலும் வருமானம் பெருகும்.


கடகம்

ராசியை குரு நோக்குவதும், யோகக்காரர்கள் செவ்வாய் தொழில் வீட்டில் உலவிடுவதும் சிறப்பான அமைப்பாகும். மாதம் முழுவதும் இனிய பலன்கள் நடக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். மாதப் பிற்பாதியில் அயல்நாட்டு வர்த்தகம் சிறக்கும். குழந்தைகளால் மகிழ்ச்சியுண்டாகும்.


சிம்மம்

ராசி நாதன் சூரியன் தன-குடும்பாதிபதியாகிய புதனுடன் ஐந்தாமிடத்தில் சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். அஷ்டமஸ்தானத்தை நோக்குவதால் ஆராய்ச்சிப் பட்டப் படிப்பில் வெற்றி கிட்டும். 14ஆம் தேதி முதல் சூரியனின் மகாப்பெயர்ச்சி சிறப்பாகாது. மருத்துவச் செலவு அதிகரிக்கும்.


கன்னி

7ம் இடத்தில் செவ்வாய் உலவிடினும் அவ்விடத்தைக் குரு பார்க்கிறார். கணவன்-மனைவியிடையே ஏற் பட்ட கருத்து வேறுபாடுகள் விரைவில் நீங்கும். தொழில் பங்குதாரர்களும் மனம் மாறி ஒத்துழைப்பு நல்குவார்கள். வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதால் வீண் விரயங்கள் சுப விரயங்களாக மாற்றுவீர்கள்.


துலாம்

ராசி நாதன் சுக்ரன் மாத இறுதி வரை தன-குடும்ப ஸ்தானத்தில் உலவிடுவார். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும். குழந்தைகளின் கல்வி நலம் தந்தையின் ஆரோக்கியம் பயணங்கள், தெய்வ ஆராதனைகள் என உபரி செலவுகள் பட்டியலில் இடம் பெறும். பேச்சில் நிதானம் தேவை.


விருச்சிகம்

ஆரோக்கிய பாதிப்புகள் இருப்பின் இப்பொழுது நீங்கும். நிலம், மனை வாங்குவது, விற்பதில் ஏற்பட்ட சட்ட சிக்கல்கள் தீரும். வெளியூர் பயணங்கள் செல்லும் போது பொருட்களைக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டியது அவசியம். உத்தியோகத்தில் பெருமையும், கௌரவமும் கிடைக்கும்.


தனுசு

ராசி நாதன் விரய வீட்டிலிருப்பினும் அவ்வீட்டின் அதிபதி செவ்வாயுடன் பரிவர்த்தனை பெற்றுள்ளார். பொருளாதார நிலையில் சரிவு ஏற்பட வாய்ப்பில்லை. உடன் பிறப்பால் பெரும் முன்னேற்றம் ஏற்படும். நல்ல பணியாட்கள் கிடைப்பர். நீதிமன்ற வழக்கில் வெற்றி கிடைக்கும்.


மகரம்

உடல் நலம் உரிய மருத்துவச் சிகிச்சையால் தேறும். தாராளமான பணப்புழக்கம் எதிர்ப்பார்க்க இயலாது. குடும்பத்தில் ஏதோ ஒரு பிரச்சனை தொடர்ந்து கொண்டிருக்கும். அது பிள்ளைகளின் திருமணம் சம்பந்தமாகவும் இருக்கலாம். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு.


கும்பம்

ராசி நாயகன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்க குடும்பஸ்தானத்தை குரு நோக்குகிறார். எதிர்ப்பாராத வகையில் பொருள் வந்து சேரும். பயணம் செய்வதில் ஆர்வம் அதிகரிக்கும். நல்லவர்களின் துணை ஏற்படும். மூதாதையர்களின் செல்வமும், சொத்துக்களையும் பெறும் யோகம் உண்டு.


மீனம்

பெருமைப்படுகின்ற வகையில் உத்தியோகம் கிடைக்கும். பணியிலிருப்பவர்களுக்கு எதிர்ப்பார்த்த உயர்வு கிட்டும். ரசாயணம், உரம், இயந்திரங்கள் வகைகளால் நல்ல ஆதாயம் பெறலாம். கலைஞர்கள் பாராட்டப்படுவர். அரசியலில் உள்ளவர்களுக்குப் புதிய பொறுப்புகள் வரும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/– ☐ ரூ. 500/–

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை

(எம்.ஒ.கூபன் (எண்) : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

(டி.டி. எண்.) : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/– ஆயுள்சந்தா ரூ.500/–டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

---

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.


*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**


*Edited and Published on behalf of T.T.Devasthanams by* ***Dr. K. Radha Ramana**, M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. R.V. Vijayakumar,** B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.*




திருமலையப்ப ஸ்வாமி ஆலயத்தில் தி.தி.தே. பெரிய ஜீயர் ஸ்வாமி தலைமையில் கார்த்திகை தீபோத்ஸவம்



திருமலையப்ப ஸ்வாமி ஆலயத்தில் கார்த்திகை தீபம் ஏற்றி வைக்கும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. அனில்குமார் சிங்ஹால், இ.ஆ.ப., தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர் திரு. கே.எஸ். ஸ்ரீநிவாசராஜு, இ.ஆ.ப.,




கார்த்திகை தீப ஒளியில் திருமலையப்ப ஸ்வாமி ஆலயம்



ஸ்வாமி புஷ்கரணியில் கார்த்திகை தீபோத்ஸவத்தை நிகழ்த்தும் திருக்காட்சி



திருமலையப்ப ஸ்வாமியை (05–12–2018) தரிசித்த இரு தெலுங்கு மாநில மேதகு ஆளுநர் திரு. இ.எஸ்.எல். நரசிம்மன் அவர்கள்



கோயில் பிரசாதங்களை மேதகு ஆளுநர் தம்பதிகளுக்கு வழங்குகின்ற தி.தி.தே. செயலாட்சித்தலைவர்



ஆண்டுதோறும் நடத்தும் தார்மீக பரிந்சி தேர்வின் பரிசளிப்பு விழா புகைப்படம்



தி.தி.தே. வைபவமாக நடத்திய "வசநது" நிகழ்ச்சிக்கு பூஜை ஸாமக்ரியை எடுத்துச் செல்லும் தி.தி.தே. அறங்காவலர்குழுத்தலைவர் திரு. புட்டா சுதாகர் யாதவ், திருமலை இணைச் செயலாட்சித்தலைவர் திரு. போல பாஸ்கர், இ.ஆ.ப., தி.தி.தே. தலைமை பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு அதிகாரி திரு. கோபிநாத் ஜட்டி, இ.கா.ப., பிற தி.தி.தே. உயர் அதிகாரிகள்



SAPTHAGIRI (TAMIL)
ILLUSTRATED MONTHLY
Published by
Tirumala Tirupati Devasthanams
25-12-2018
Regd. with the Registrar of Newspapers
under "RNI" No.10742,
Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment
No.PMGK/RNP-/DLGS/SAPTHAGIRI-
Dt 24-11-2017